ரு. டு. ஊ. ஏ. 2256

குருகோ, ஜபமாட

கிரந்தமே.

V6:19(gM)
N02
120968

Boer War Series No. II.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
29 SEP 02
MADRAS.

# குருகர், ஜூபர்ட் கிராஞ்ஜே.

தன்னாடு நேசி.

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை.

Price As. 6.] [விலை அணா 6

(All rights reserved.)

## சாகுந்தள நாடகம்.

மகாகவி காளிதாஸரால் ஸம்ஸ்கிருதத்தில் இயற்றப்பட்டுள்ள நாடகங்களுக்குள் மிகச்சிரேஷ்டமான இந்நாடகமானது லோகமகாத்மியம் என்ற அருமையான ஸம்ஸ்கிருத நூலைத் தமிழில் எளிய நடையில் மொழிபெயர்த்தவரான என். ஸ்வாமிநாத சாஸ்திரிகளால் அனைவரும் படித்தறிந்து கொள்ளக்கூடிய எளிய தமிழ் நடையில் ஸம்ஸ்கிருதத்திலுள்ளபடி மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. இதில் மகாகவி காளிதாஸனுடைய சரித்திரமும் ஸம்ஸ்கிருத நாடக இலக்ஷணமும் எழுதப்பட்டிருக்கின்றன. இது இவ்வருஷம் சென்னை யூனிவர்ஸிடி எப். ஏ. பரீக்ஷைக்குப் போகும் ஸம்ஸ்கிருத மாணாக்கர்களுக்கு மிகவும் உபயோகமானது.

இப்புத்தகம் வேண்டுவோர்கள் சென்னைச் சுதேசமித்திரன் ஆபீஸ் மானேஜருக்காவது, மதராஸ் ரிப்பன் புஸ்தகசாலைத் தலைவருக்காவது, திருவல்லிக்கேணி வீரராகவமுதலித்தெரு 105-வது நம்பர் வீட்டிலிருக்கும் பி. வைத்தியநாதய்யருக்காவது, அல்லது திருவல்லிக்கேணி யாதர்ம்ப்ரொஞ்சினி ஆபீஸ் மானேஜருக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை 0 8 0

தபாற்கூலி பிரத்தியேகம்.

### சுதேசமித்திரன் பத்திரிகை

சந்தாவிவரம்.

| இந்தியாவிற்குள்: | தினப் பதிப்பிற்கு. | வாரம் மும் முறைக்கு. |
|---|---|---|
| 1-வருஷத்திற்கு | 14 0 0 | 7 0 0 |
| 6-மாதத்திற்கு | 7 0 0 | 4 0 0 |
| 3-மாதத்திற்கு | 3 8 0 | 2 4 0 |
| 1-மாதத்திற்கு | 1 4 0 | 0 12 0 |
| மோரீஸ், சிங்கப்பூர், நேட்டல் முதலிய வெளி நாடுகளுக்கு | 18 0 0 | 10 8 0 |

சென்னைக்கையொப்பக்காரர்களுக்கு.

தினப்பதிப்பிற்கு வருஷத்திற்கு. ரூ. 12

மாதத்திற்கு ரூ. 1

தனிக் காபியின் விலை ஒரு அணா.

அதிக இடங்கொண்டும் நீடித்த காலத்திற்கும் மேற்படி பத்திரிகையில் விளம்பரம் போடுபவர்களுக்குச் சாதாரண விகிதத்தில் சகாயம் செய்யக்கூடும்.

---

Boer War Series No. II.

# குரூகர், ஜுபார்ட், கிராஞ்ஜே.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
29
MADRAS.

(இது போவர்களுக் குண்டான நெஞ்சுத் துணிச்சல், கல்நெஞ்சு, நெஞ்சழுத்தம் இவற்றை விளக்கும் ஒரு நல்ல திருஷ்டாந்தரம்.)

இது

தன்னாடுநேசியால்

பெண்பிள்ளைகளும் வாசிக்கத்தகுந்த

எளிய நடையில் எழுதப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

விலை அணா 6.] September 1902 [ஸெப்டேம்பர் ௴ 1.

(All rights reserved.)

120968

954(2)
2256

# PREFACE.

The personages of whom the following is a simple sketch are those with whom rested the entire responsibility of the declaration of the late War in South Africa against the British, so far as the Transvaal Foreign diplomacy was concerned. But it is alleged by some, as will be seen from the sketch, that these are not morally responsible but the Boer People as represented by their *Volksraads*.

Of these, two were the Heads of State; one, the Transvaal Commandant-General; and the other, an influential Member of its *Volksraad.* All these belonged only to two small *Independent Republics.* For such men, however great in their own countries, to declare war against a mighty Empire such as the British Empire is, was astonishing to the whole world and insnlting to the British nation. But while we, among others, feel so, we are, at the same time, bound to know, at least, a little of the conditions under which they had been placed then.

Hence has the author, in the following pages, attempted, to the best of his ability, to give a brief sketch of these four personages in a manner that will explain to his countrymen why they so indiscretely appealed to the God of *War*, instead of to the God of *Reason* and *Progress*, and thus lost the little they had possessd already.

Madras, *September* 1902. **The Author.**

# முன்னுரை.

இந்தப் புஸ்தகத்தில் சொல்லப்பட்ட பெரிய மனுஷர்களால்தான் இந்தப் போவர்யுத்தம் கிளம்பிற்று. இவர்களோ தானாட்சி புரிந்துவந்த இரண்டு சிறிய குடியரசுகளுக்குச் சேர்ந்தவர்கள். இப்படிப்பட்டவர்கள் ஒரு பெரிய வல்லரசோடு (a Power) யுத்தத்துக்குப் போனார்கள். அப்படிப் போனது உலகத்துக்கெல்லாம் அத்தியாச்சரியமாயிருந்தது; அவ்வல்லரசைப்படைத்த ஆங்கிலேயர்க்குஒருபெரிய அவமானகரமாயிருந்தது. ஆயினும், நாம் ஆச்சரியப்பட்டால் மாத்திரம் என்ன உபயோகம்? அந்தமாதிரி அவர்கள் ஏன் செய்தார்கள் என்று நாம் தெரிந்துகொள்ளவேண்டியது நியாயமாயிருக்கிறது. ஆகவே, பின் வருகிறபடி அவர்களின் வாழ்நாளைக் குறித்துக் கூடிய மட்டில் அப்படி அவர்கள் செய்த காரணம் நம தமிழ்நாடு நேசிகளுக்குத் தெரியும்படியாய்ச் சுருக்கமாய் எழுதியிருக்கிறேன்.

சென்னை<br>சக 1825-ம் ஆண்டு<br>ஆவணி ௴ 23ௗ. } ☞ தன்னாடுநேசி.

# INSCRIBED

TO

THE MEMORY

OF LATE

**T. G. SUNDARESA AYER AVERGAL B. A.,**

**TAHSILDAR OF HINDUPUR,**

**ANANTAPUR DISTRICT,**

Who lost his valuable life

*In the discharge of his*

Duty

*During the Plague riot of that place*

*In the year 1898. A. D.*

போர்வர் யுத்தக்கதைப் புஸ்தகங்களுக்குப்

# பொருளடக்கம்.


| புத்தகத்தின் பெயர். | கூற்று. | கூற்றின் பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| II | 1 | நுகர் ... ... ... ... | 1 |
| நுகர், ஜுபர்ட், | 2 | ஜுபர்ட் ... ... ... ... | 35 |
| கிராந்ஜே. | 3 | கிராந்ஜே ... ... ... ... | 63 |
| | 4 | கிராந்ஜே ஓடி எதிர்த்தது ... ... ... | 73 |
| | 5 | கிராந்ஜே தலை வணங்கினது ... ... | 90 |
| | 6 | ஸ்டேயின் ... ... ... ... | 109 |

| | | | |
|---|---|---|---|
| III<br>போவர் பராக்கிரமம். | 1 | போவர் பிரிடனைப் பொருக்கிழுத்தது ... ... | 1 |
| | 2 | போவரின் மெய்யானதன்மை ... ... | 11 |
| | 3 | போவர் பெண்மக்கள் ... ... ... | 20 |
| | 4 | போவரும் போர்க்களமும் ... ... | 31 |
| | 5 | போவர் முன்னோர்கள் ... ... ... | 42 |
| | 6 | போரில் போவரும் பட்டாணியரும் ... ... | 50 |
| | 7 | போரில் போவரும் பிரிடனும் ... ... | 53 |
| | 8 | பிரிடன் போர்புரியும் விதம் ... ... | 62 |
| | 9 | போவர்கள் முதல்முதல் நேடாலைப் படையெடுத்தது ... ... | 66 |
| | 10 | பிரிடன்கள் நிக்கல்ஸன்ஸ்நெக்கில் பிடிபட்டது. ... | 75 |
| | 11 | லேடிஸ்மித்தை விடுவிக்க நடந்த சண்டைகள் ... | 84 |
| | 12 | போரில் முதல்முதல் நடந்த சண்டை ... ... | 102 |
| | 13 | மாகர்ஸ்பான்டீன் சண்டை ... ... | 106 |
| | 14 | போவர்கள் முதல்முதல் கேப்காலனியைப் படையெடுத்தது ... | 112 |
| | 15 | பிரிடனுக்குப் போவர் மனப்பால் போட்டியது ... | 127 |
| | 16 | பிரிடன் போவர்க்குப் பயம் போட்டியது ... | 131 |





| | | | |
|---|---|---|---|
| | 17 | படியாச் சண்டிப்போவர்கள் ... ... | 137 |
| | 18 | போவரும் இருப்புத்துண்டுக் கோட்டைகளும் ... | 154 |
| டிவெட், போதா, டிலாரி. | 1 | தொடங்குரை ... ... ... | 1 |
| | 2 | டிவெட்டின் சாமர்த்தியம் ... ... ... | 17 |
| | 3 | போதாவின் பெருமை ... ... ... | 66 |
| | 4 | டிலாரியின் ஜயங்கள் ... ... ... | 124 |
| IV<br>போவர் பிடிவாதம். | 1 | போவர் தானுட்சி கோரியது ... ... | 1 |
| | 2 | கலகப் போவர்க்கு மன்னிப்பு கோரியது ... | 15 |
| | 3 | போவர் மீளவும் போர்க்கோலங் கொண்டது ... | 27 |
| | 4 | ஒரு விளம்பரத்தால் போவரை நாடுநீக்கினது ... | 35 |
| | 5 | ரோஸ்பரிப்பிரபு மத்தியஸ்தம் பேசியது ... | 51 |
| | 6 | தென்னாபிரிகாவில் அமரிக்கைகிலே பெற்றது ... | 70 |
| | | உடன் கூட்டு ... ... ... | க |


போவர் யுத்தக்கதைப் புஸ்தகங்களின்

பொருளடக்கம் முற்றும்.

---

# குரூகர், ஜூபார்ட், கிராஞ்ஜே.

## 1-வது கூற்று.

## குரூகர்.

கேப்காலனியில், கோல்ஸ்பர்க் என்ற ஊரில் காஸ்பர் ஜான் ஹெண்ட்ரிக் குருகர், அவர் பெண்சாதி மாரியா ஸ்டேயின் இவ்விருவருக்கும் 1825-ம் ஆண்டில் அக்டோபர்மீ 10-தேதி ஒரு பிள்ளை பிறந்தது. இந்தப் பிள்ளைதான் ஊம் பால் குருகர் என்பவர். இவர் தம்தாய் தகப்பனுக்கு இரண்டாம் குழந்தை, ஸ்டிபானஸ் ஜொஹானஸ் பாலஸ் குருகர்; மூத்தது மாரியா என்று ஒருபெண்குழந்தை.

பால் குருகருக்குச் சிறு வயதிலேயே, போவர்கள் வடபால் செல்லுமுன்னேயே தாயார் இறந்து போனார். தகப்பனார் 1852-மாண்டில் இறந்தார். போவர்ச் சாதியாருக்குள் வழக்கம்போல, தம் செய்நேர்த்தி நிலத்திலேயே தம்தகப்பனைத் தாம் டிரான்ஸ்வாலில் புதைத்துவிட்டார். இந்தக்குருகர் வம்சம் பூர்வம் ஜெர்மன் தேசத்திலிருந்து சுமார் 188-வருஷங்களுக்கு முன் கேப்காலனிக்கு வந்தது. இந்த வம்சம் அப்போதுமுதல் மிகவும்

பெருகிப் போயிற்று. ஒவ்வொருவருக்கும் சில சிலவேளையில் 18-குழந்தைகள் உண்டாம்.

பால் க்ருகர் உழவர் தொழிலில்தான் பயிற்சி ஆனார்; ஆடுமாடுகள் மேய்த்துவந்தார்; குதிரை வியாபாரம் பண்ணிவந்தார்; குடிவாழ்க்கைக்கு வேண்டிய வேட்டைகள் சுட்டுவந்தார்; இவர் எப்போதும் அல்லசலில், கொஞ்சம் முன்னுக்கு வந்து பேரெடுத்துக்கொண் டிருந்தார். 17-ம் வயதில் அந்தப் பிரதேசத்துக் குற்றங் கேட் போராக (கலெக்டராக) ஏற்பாடானார்; இவரும் வடபால் சென்று குடியேறின போவர்களில் ஒருவர் என்று முன்னமேயே சொன்னேன். இவர்கள் வடபால் செல்லும்போது, அநேக வண்டிகள் குதிரைகள் ஆடுமாடுகள் இன்னும் அநேகம் கூடப்போயின; வம்சம் வம்சங்களாய்க் கூடப்போயின. பூர்வக்குடிகள் சண்டை செய்து எதிர்த்தார்கள்; ஆனாலும் உபயோகமில்லை; சூரியன்முன் பனி போலாயினர்.

12-வயது முதல், 57 வயது வரையில், 45 வயது காலம் சுடுவதிலும், வேட்டையாடுவதிலும், சண்டையிலும், துரைத்தன யுக்திகளிலும் காலங்கழித்தார். அவருக்கு மனோதைரியம் எப்படிப்பட்டதோவென்று ஒருவரும் சந்தேகப்பட வில்லை. மகாதைரியசாலி, அநேகந் தடவையில் தானேச் சண்டைபோட்டுக் கெலித்தார். இவர் ஆங்கிலேய உத்தியோகஸ்தரா யிருந்தார். தனக் குண்டானதைக் காட்டிலும் அதிகப் பணம்



வேண்டுமென்று ஆங்கிலேயரோடு சண்டைக்கு நின்றார்.

இவர் பிரிடோரியாவில் ஒரு செய்தியந்தின் (சமாசார பத்திரிகை) மேல் மானநஷ்ட வியாச்சியங் கொண்டுவந்து தோற்றுப் போனபோது, இவருக்குபணத்தாசைபிடித்துப்போயிற்றென்று அவதூறுப்பேர் வாங்கினார். இவர் அநேக விஷயங்களில் தலையிட்டு அநீதமாய்ச் சம்பாதிக்கத் தலைப்பட்டாரென்று சனங்கள் சொல்லுகிறார்கள். அது நிஜமோ பொய்யோ தெய்வத்துக்கே தெரியும்.

க்ருகர் டிரான்வால் நாட்டின் குடியாசராயிருந்ததற்குச் சம்பளம் வருஷம் ஒன்றுக்கு 7,000 பவுன். காப்பிகுடிக்க 300-பவுன் வருஷம் 1-க்கு மேல்செலவாக வாங்கினார். அதாவது, விருந்தாளிகளுக்கு விருந்துக்காக 300 - பவுன் அவர்கைச் செலவுக்காம். ஆனால்,விருந்துபண்ணுவதுமில்லை; 300-பவுன் செலவாகிறதுமில்லை; இந்த 300-பவுனைச் செலவழித்து விட்டு 7,000-பவுனை மீத்து விட்டு வந்தாராம். அவர்மிகவும் கிறிஸ்துவ மதாபிமானி; பைபிலைப்பற்றி மிகவும் நன்றாய்த் தெரியும். அவருக்குத் தாராள மனசே கிடையாதாம். முதலெழி பிடித்தவராம்.

க்ருகருடைய செல்வாக்கும், அவர் தந்திரமும், அவர் பலமும், எந்தச் செய்தியையும் தம் பக்கமாய்த்திருப்பிக்கொள்ளும் அவர் சக்தியும், அவர் லோபக் குணமும், இவற்றையெல்லாம் பற்றி

இங்கே பேச இடமில்லை. இவருக்கு எல்லாச் சக்திகளுமுண்டு.

க்ரூகரும் அவர் குடும்பமும் சாதாரணமாய்க் காலையில் 5-மணிக்கு எழுந்திருந்தார்கள். உடனே குரூகர் தம்முடைய ஹூக்காவை (புகைக் குழாய்) வைத்துக்கொண்டு உட்காருவார்.

க்ரூகரை 5 - முதல் எட்டுமணிவரையிலும் எல்லாரும் போய்ப் பார்க்கலாம், தப்பில்லை; எட்டுமணிக்கு அவருடைய துரைத்தனக் காரியதரிசிகள் எல்லாரும் அவரிடத்துக்கு வந்தார்கள். அல்லது ஒரு சமயத்தில் 12-மணிக்கும் சாயந்திரம் 4-மணிக்கும் பார்க்கவேண்டியவர்கள் அவரைப்பார்க்கலாம். பார்க்கப் போனவர்கள் அதிகமாய் ஒன்றும் தெரிந்துகொள்ள முடியாது. அவர்சாதாரணமாய் அன்பும்பிரியமுமுள்ளவர். ஆனால், அந்நியர்கள் வந்துவிட்டால், அவர்களிடத்தில் சிலவேளையில் சரியாய்ப் பேசுகிறதில்லை; மௌனமாய் இருப்பார். ஆங்கிலேய பாஷை அவருக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும் தெரியாததுபோலக் காட்டுவார். எவனாவது டச்சுப்பாஷை தெரிந்தவன் ஒருவன் அவர்பக்கத்தில் இருந்தாதான் அவருக்குத் துபாஷ் செய்ய வேண்டும்.

அவர் பெண்ஜாதிக்கு ட்டான்ட்டி என்று பேர். நல்ல உத்தமஸ்திரீ; பழைய மாதிரி டச்சு ஸ்திரீயாம்; அதாவது, பூர்வகாலத்தில் புருஷர்களுக்குத் துப்பாக்கியை மருந்து போட்





டுக் கெட்டித்து எடுத்துக் கையில் கொடுத்து வந்த ஸ்திரீகளில் ஒருவராம். இவருக்குச் சுமார் 60, 70-வயதாயிருக்கும். இந்த அம்மாளுக்கு உடைகள் நேர்த்தியாய்க் கத்தரித்து உடுப்பதில் இஷ்டமில்லை; ஜம்பமில்லை; படாடோபமில்லை; ஊட்லாண்டர் என்றால் ஆகாது; "இவர்கள் தம் தேசத்திலேயே யிருந்து தங்கள் வேலைபைத்தாம் என்பார்த்துவராமல் டிரான்ஸ்வாலுக்கு வந்தார்கள்" என்று அவ்வளவு தூரம் யோசிக்க மாட்டார்; "நமக்கு ஊட்லாண்டர்கள் வேண்டாம்; எங்கேயாகிலும்தேசாந்திரம் போய்க் குடியேறச் சொல்லு" என்று பலதடவை பேச்சுவார்த்தையில் சொல்லியிருக்கிறாராம்.

இராத்திரி எட்டுமணிக்குக் க்ரூகர் படுக்கைக்குப் போவார்; மத்தியானம் ஒரு மணிக்குச் சமைத்த சாதம் தினப் படிச் சாப்பாடு சாப்பிடுவார். க்ரூகர் நல்ல ஒளிச்சித்திரமாகிலும் ஒன்று தனக்கு எடுத்துக்கொண்டாரோ என்னமோ சொல்லமுடியாது, அவர் அவ்வளவு லோபியாம்.

யுத்தம் தொடங்கின உடன் குடிகளுக்கு "நீங்கள் எல்லாரும் சுவாமியின் பேரில் பாரத்தைப் போட்டுச் சண்டைக்குப் போங்கள்" என்று தான் பிறந்தநாள் கொண்டாடுந் தினத்தில் சொன்னார்.

அமெரிக்கா நாட்டார் யுத்தத்தைப் பற்றி மிகச்சஞ்சலப் பட்டுத் அவருக்குத் தந்தி ஒன்று அடித்தபோது, அதற்கு "எங்கள் இரண்டு நாட்

டையும் ஆங்கிலேயர் பிடித்துக் கைவசப்படுத்திக் கொள்ளுமுன்னால், அவர்கள் மனுஷர்கள் திகைக்கும்படிப் பணம் செலவிட்டுத் தான், அப்படிச்செய்யவேண்டு"மென்று பதில் தந்திகொடுத்தாராம்.

யுத்தத்துக்கு முன்னால் ஒரு அமெரிக்கா தேசத்தார் க்ருகரோடு பேசப்போனார்; அப்போது "ஆங்கிலேயர் கேட்டவற்றில், நான் கொடுக்கக்கூடியவற்றையெல்லாம் கொடுத்து விட்டேன், இனி என் நாட்டின் தானாட்சி ஒன்றுதான் பாக்கி; முன்னே பலதடவையில், தென்னாபிரிகாவில் வெள்ளைக்காரச் சாதியார் ஒருவருடன் ஒருவர் சண்டைபோட்டுக் கொள்வதை நான் பார்ப்பதினும் நான்சீக்கிரமாய் செத்துப்போக விரும்புகிறேன் என்று சொல்லியிருக்கிறேனல்லவா? நாங்கள் ஏழை. இங்கிலாண்டு மகாபலமுள்ளது. எங்கள் கடமையானது பலிஷ்டருக்கு விட்டுக் கொடுப்பது; அப்படியே நானும் விட்டுக்கொடுத்தே வந்தேன். ஆனால், இங்கிலாண்டெங்களுடன் யுத்தம் பண்ணத்தான் வேண்டுமென்று இருந்தால் திக்கற்றவனுக்குத் தெய்வமேதுணை என்று நாங்கள் இருக்கவேண்டும். நீர் அமெரிக்காவுக்குத் திரும்பிப்போனால் உங்களைப்போல நாங்களும் தானாட்சிக்கும், சுயாதீனத்துக்கும், எங்கள் சாதிப் பெருமைக்கும் சண்டைபோடுவோம் என்று க்ருகர் சொன்னார், என்று சொல்லுங்கள்" என்று சொன்னாராம்! இந்த மாதிரியல்லவோ கடைப்பிடியும் தைரியமும் மக்களுக்கு இருக்கவேண்டும்!



யுத்தத்துக்கு 5 - 6 நாள் முன்னால் பேசிய போது "இங்கிலாந்துக்கும் நமக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாதவரையில் சண்டைபோடவேண்டும்; இப்போது தான் சண்டை ஆரம்பித்திருக்கிறோம்" என்று சொன்னபோது கண்ணால் தாரை தாரையாய்க் கண்ணீர் வந்ததாம். கேட்டிருந்த குடிகளும் நகரவாசிகளும் விசனப்பட்டார்களாம்.

ஜேம்ஸன் நாடு பறித்ததால், இரண்டு குடியரசு நாடுகளும் ஒன்றுபட்டன; ஏனென்றால், ஆங்கிலேயர் இந்த இரண்டு போவர் நாடுகளை எப்படியோ ஒருவிதமாய்ப் பிடுங்கிக் கொள்ளத்தான் இருக்கிறார்கள் என்று போவர்களுக்கு அதினால் தெரிந்து போயிற்று; இந்தயுத்தத்தால் இரண்டு நாட்டுக்குடிகளும் ஒரு ஜாதியாரானார்; குடிகள் நேர் சகோதரர்களானார்; இதற்கு முன்னால் ஒன்று விட்ட அண்ணந்தம்பிகளாய்த்தான் இருந்தார்கள்; ஆரஞ்சுநாடானது யுத்தம் வராமலிருக்கும்படி எப்போதும், இதற்குமுன்னாலும், நாட்டுக்குள்ளும், ஆங்கிலேயருடன் செய்த கொள்வனை கொடுப்பனைகளிலும், தன்னால் கூடியமட்டும் செய்துவந்தது:—ஆரஞ்சுநாடு, ஆங்கிலேயர் பாஸடோ ஆகிய பூர்வக் குடிகளுக்கு ஆயுதங்கள் கையில் கொடுத்த பிறகும் ஆங்கிலேயரோடு யுத்தம் செய்யவில்லை; கோபக் குறிகளாயினும் காட்டவில்லை. ஆரஞ்சு நாட்டார் பாஸடோ ஜாதியாரோடு 14 வருஷங்கள் விடாது சண்டை செய்து அவர்களைச்

செயித்த பிறகு, அவர்கள் நாட்டை ஆங்கிலேயர் பிடுங்கிக்கொண்டார்கள்; ஆங்கிலேயர் அந்நாட்டார்க்குச் சேர்ந்த வஜ்ஜிரச் சுரங்கங்களைப் பிடித்துக் கொண்டார்கள்; அச்சுரங்கங்கள் எவருக்குச் சொந்த மென்று கண்டுகொள்ள மத்தியஸ்தத்துக்கு வரும்படி அந்நாட்டார் ஆங்கிலேயரைக் கூப்பிட்டார்கள்; அதற்கும் ஒப்புக்கொள்ளவில்லை;— இவற்றுக் கெல்லாம் பிறகுகூட ஆரஞ்சுநாட்டார் முஞ்சியைச் சிலிர்த்துக் கொள்ளவுமில்லை; ஏனென்றால், அவர்களுக்கு அமரிக்கை யிஷ்டமே ஒழிய சண்டையும் பூசலுமிஷ்டமில்லை; ஆரஞ்சு நாட்டார் ஆங்கிலேயரோடு சேர்ந்து தென்னாபிரிகாவை விருத்தி செய்வோ மென்று ஆங்கிலேயருக்குத் தெரிவித்தார்கள்; அதுவும் உபயோக மில்லாமற் போயிற்றும்; பாஸடோஜனங்களை ஆங்கிலேயர் அடக்க முடியாமல் போன போதுதான், ஆரஞ்சு நாட்டுக்குச் சுயாதீனத்தைத் தலையில் சுமத்தினார்கள். ஆங்கிலேயர் பாஸடோக் குடிகளுக்கு முதல் முதல் ஆயுதங்கள் கொடுப்பானேன்? பிறகு அவர்கள் தகப்பன்சாமி யாவானேன்? பிற்பாடு அவருக்குப் பயந்து ஆரஞ்சு நாட்டுக்குச் சுயாதீனம் கொடுப்பானேன்? இதற்கெல்லாம் ஆரஞ்சு நாட்டார் பயப்படவில்லையாம்; தாம் குடியேறின நாட்டில் குடிவளம், பயிர்வளம் உண்டாக்கினார்கள், காட்டை அழித்து வீடுகள் கட்டினார்கள். "இப்போது சுகமாய் இருக்கலாம் என்றால், அச்சுகத்துக்கு ஆங்கிலேயர் கேடுநினைத்



தார்கள்" என்று போவர்கள் கதறினார்களாம்; போவர்கள்மேல் ஆங்கிலேயர்களுக்கு மேலாட்சியுண்டென்றால் ஆங்கிலேயர் மேல் ருஷியாவுக்கும் மேலாட்சி உண்டென்று போவர்கள் சொன்னார்கள். ஆங்கிலேயர்செய்த துரைத்தனத் தோரணையால், ஆரஞ்சு நாட்டார்க்கு மிகவும் கோபம் வந்ததாம். ஆரஞ்சுநாட்டாரோ மிகவும் அமரிக்கையான குடிகளாம். அந்நாட்டுக் குடிகளுக்குத் தானாட்சி பொருட்டு ஒன்று சேர வேண்டும் அல்லது சண்டை போடவேண்டும் என்றாயிற்றும். இரண்டு நாடுகளிலும் பார்த்தால், ஆங்கிலேய நாட்டில் ஒரு சாதாரணமான நகரத்துக் குடித்தொகை யவ்வளவுதான் போவர்கள் இருக்கிறார்கள். இரண்டு நாட்டாரும் சேர்ந்தாலொழியப் பயனில்லை; இப்படிப்பட்ட காரணங்களினால் இரண்டு நாடுகளும் ஒன்று சேர்ந்து சண்டைக்கு ஆரம்பித்தன.

ஆனால், யுத்தத்துக்கு முக்கிய காரணபூதமானவர் க்ருகரு மன்று. மிகத் துக்கத்துடன் விதியில்லாமல் சண்டைக்கு ஒப்புக்கொண்டார்; கொஞ்சநாளாய் அவருக்குக் கிழத்தனம் ஜாஸ்தியாயிற்று. கண் எப்போதும் தண்ணீர் வடிந்து கொண்டிருந்ததால் இந்தக் கஷ்டமெல்லாம் அவருக்கு இஷ்டமில்லை; அவருக்கு இன்னும் வேறே தேக பாதைகளு முண்டு. அவருடைய கடைசிப்பிள்ளையால் அவருக்கு வெகுதொல்லையாயிருந்தது; இதெல்லாம் சேர்ந்து அவருக்குமுன்

இருந்த ஒரு கடைப்பிடியான குணத்தைக் கெடுத்துவிட்டன. லேயிட்ஸ்துரை (Dr. Leyds) ஐரோப்பாவுக்குப் போனதுமுதல் அவருக்கு ஒருவரிடத்திலும் நம்பிக்கைவைக்கமுடியவில்லை. குரூகருக்கு வயதுகாலத்தில் இந்தமாதிரி வழக்குகள் அவர் தலையில் நறுக்கென்று விழவே, அவருக்கு மிகவும் துக்கமாயிற்று. அவருக்கோ படிப்புமில்லை.

இந்த யுத்தத்துக்கு ஜூபார்ட் சேனாபதியும் காரணமன்று. ஆதிமுதல் அந்தம் வரையில் அவருக்குச்சண்டையேகூடாது. அவருக்குச்சண்டைமுனைக்குப் போக இஷ்டமில்லாததினாலேயும், உண்டான வழக்கை எப்படி நஷ்டப்பட்டாவது அமரிக்கையுடன் தீர்க்க இஷ்டப்பட்டவரானதாலும்; ஊட்லாண்டர்களின் முறைகள் சரியென்று அவருக்கு மனதில் பட்டதினாலேயும்; அச்சேனாதிபதியை டிரான்ஸ்வால் குடிகள் கையாலாகாத கைப்பெண் என்றும் அங்குவந்து கூடியிருந்த ஹாலண்டுநாட்டாரின் கும்புகள் சுதேசத்துரோகி என்றும் சொன்னதினாலேயும், போவர்க்குடிகள் யாவரும் இவ் வதந்திகளை யெல்லாம் நம்பி இவரைப் படைத்தலைமையினின்றும் நீக்கி வேறெவரையாவது நேமிக்க நினைத்தார்கள். அப்போது ஜூபார்ட் என்ன பண்ணுவார்? அவரும் யுத்தத்துக்கு ஒப்புக்கொண்டார். இவர்களெல்லாம் யுத்தத்துக்குக் காரணமன்று. டிரான்ஸ்வாலின் அரசுக் காரியதரிசிதான் (Reitz) முக்கியமான காரணமானார். இவருக்கு, இராஜ்யத்



துக்கு வக்கீலாயிருந்தவரும் (Smuts) டிரான்ஸ்வால் நாட்டில் அந்நியதேசத்துடன் நடக்கும் கொள்வினை கொடுப்பினைகளை நடத்தினவரும் (Groblaar) உதவிகளாயிருந்தார்கள். இப்படி உதவிகளான உத்தியோகஸ்தர்கள் சிறுவர்கள் ஆகையால், ஆங்கிலேயரோடு விவகாரமாடுவதில் சிறுபிள்ளைத்தனமாய் நடந்துகொண்டார்களாம்.

(1) அரசுக் காரியதரிசி (Secretary of State) மிகவும் நாணயமாய்த்தான்வேலைபார்த்து வந்தார். யுத்தமாரம்பித்த பிறகு இராப்பகலாய் இராச்சியத்துக்குழைத்துவந்தார். இவரிடத்தில் ஒரு தோஷமும் கண்டுபிடிக்கமுடியாது.

(2) இராச்சியத்துக்கு வக்கீலானவர் யுத்தத்துக்கு இரண்டுவருஷ முன்னால் இன்னான் என்றுகூடத் தெரியாத ஒரு அநாமதேய வக்கீலாயிருந்தார். இவருக்கு அப்போது வயது 20-தான். உலகத்தின் நடவடிக்கைகள் இன்னவென்றும் தெரியாவாம். இப்படிப்பட்டவர் இராச்சியத்துக்கு வக்கீல் வேலைபார்த்துவந்தாராம்; ப்ளூம்பாண்டினில் 1899௵ ஸ்டெயின், குரூகர், மில்னர் முதலானபேர்கள் சமாதானக் கூட்டம் (Peace Conference) கூடினபோது ஆங்கிலேய உத்தியோகஸ்தரிடத்தில் அதிகப் பிரசங்கித்தனமாய்ப் பேசினாராம். குரூகரிடத்தில் "இவனில்லாத காலத்தில் நாம் பேசவேண்டியதேயன்றி, இவன் இருக்கும்போது ஒன்றும் நடவாது" என்று ஆங்கிலேய உத்தியோகஸ்தர் சொன்னாராம். இது இவ

ருக்கு மனசில் அறுத்துக்கொண்டு இருந்தாற் போல இருக்கிறது. அதினால்தான் யுத்தத்தை நடத்த முயன்றார் என்னலாம்.

(3) அந்நிய நாட்டுக் (கொள்வனை கொடுப்பனைகளை நடத்திவந்த) காரியதரிசியும் சிறியபையனும். க்ரூகருக்குத் தூரமான பந்துவாம், இவரும் வக்கீலும் அந்தச் சமாதானக் கூட்டத்தார் ப்ளூம்பான்டினில் கூடினகாலத்தில், அதற்கும் ப்ரிடோரியாவுக்கும் அலைந்துகொண்டே கடைசியில் க்ரூகராகிய கிழவருக்குத் தந்நாட்டுத் தாளுட்சிக்குக் கேடுவந்ததென்று போதித்து அக்கிழவரைக் கெடுத்து விட்டார்கள்; இந்த மூன்றாவது உத்தியோகஸ்தனுக்கு(அந்நியநாட்டுக் காரியதரிசி)மிகவுங்கெட்டவழக்கங்கள் இருந்தனவாம். அரசுழியக் கூடத்திலுள்ள (Office) மர்மங்களெல்லாம் வெளியில் விட்டுவந்தாராம். ஆகவே, இப்படிப் பட்டவர்கள் சேர்ந்து இரண்டு குடிஅரசர்களைக் கெடுத்துப்போருக்கு இழுத்தார்கள்; யுத்தம்தொடங்கி இரண்டுவருஷம் எட்டுமாசமாயின; இரத்த வள்ள மோடினது; ஆடுமாடுகள்போல் இருதிறத்துப் படைகளும் அறுக்கப்பட்டு அற்றன. ஐயோ! என்று இரக்கம் பேசுவார் யாருமில்லை. ஐரோப்பாவில் ஒரு வல்லரசு(a Power)க்காவது இதை நிறுத்த அக்கரையில்லை. அது என்ன காரணமோ ஈச்சுரனுக்குத்தான் தெரியும், பலர் பலவிதமாய்ச் சொல்லுகிறார்கள்; யார் வார்த்தை நிஜமென்று நம்பலாம்?.



பால்க்ரூகர் கிழவர்; கோடீசுரர்; இராஜத்துரோகி (ஆங்கிலேயருக்கு); சுயேச்சையாட்சிக்காரர் (autocrat); லௌகிகி (lay preacher); போர் செய்து பிழைப்பவர் (Filibuster); பிரம்மசாரி யோசனை பண்ணுகிறவர்; இராஜ்யதந்திரி; இவர் இப்போதுள்ள குடியரசர்களில் மிகவும் வேடிக்கையான மனுஷர்.

சிறு வயது முதல் யுத்தம் நடத்துவதிலும், இரத்தம் சிந்துவதிலும் மிகவு மனுபவமுள்ளவரானார்; பூர்வக் குடிகளுக்கும் போவர்களுக்கும்ஆதியில் நடந்தசண்டைகளில்அடைந்த செயங்களை 11-ம் வயதிலேயே கண்ணாரப் பார்த்தார்; 13-ம் வயதில் ஓராற்றங்கரையில் அநேகமாயிரமாய்ச் செய்யப்பட்ட நரஹத்திகளில் இருந்தார். 19-ம்வயதில் மாடபீலிச்சாதிஅரசனைத் தோற்கடித்து அவனை உயிரோடு தோலுரித்த போது கண்ணாரப்பார்த்தார்.

க்ரூகரே டிரான்ஸ்வாலுக்கு முதல் முதல் ஒரு ஸெட்லர்டாயிருந்தார்; ஏனென்றால், இவர்,சிலர் டிரான்ஸ்வாலுக்குமுன்போனபிறகுபின்போனார். அங்கே முன்வந்தவருக்கும் பின்வந்தவருக்கும் மனஸ்தாபமுண்டாயிற்று; இதில், டிரான்ஸ்வாலில் இரண்டுமூன்று குடியரசுகள் அவரவர்கள் இஷ்டப்பிரகாரம் நாட்டி நடத்திவரப்பட்டன; ஒன்றுக்கொன்று சண்டையும் சச்சரவுமாய்க் கிடந்தது. இந்தச் சண்டைகளில் க்ரூகர் பேர்தான் வழக்கம் போல முன்னுக்கு வந்தது. இதல்லாமல், ஆரஞ்சு

நாட்டுக்கும் டிரான்ஸ்வால் நாட்டுக்கும் யுத்தம் நடந்துவந்தது. குருகர்தான் இதற்குத் தலைவர், எதிரிப் போவர்களைத் துரத்தித் துரத்தியடித்தார்; குருகர் 30-முதல் 40-வயது வரையில் டிரான்ஸ்வாலில் அரசுகிடையாது; பிசாசுகளாண்டு வந்ததுபோலிருந்தது:—ஒரு இடத்தில்கலகம், ஒரு இடத்தில் போவர்கள் ஒருவரை ஒருவர் சிறையில் போடுதல்; ஒருவர் ஒருவரை விடுவித்தல்;—ஆக இப்படியாய்க்கிடந்தது; ஒருநாள் கட்சிப் பிரதிகட்சிகளாயிருக்கும்; நாட்டுக்குடிக்குள் சண்டை ஒருநாள் நிற்கும், மறுநாள் துவங்கும். கடைசியில், போவர்களுக்கெல்லாம், குருகர் சேனாதிபதித்தலைவரானர் (Commandant-General). அப்போது பிரிடோரியஸ்என்பவர் குடியரசர்; போவர்களுக்கு இவரைக்கண்டால் பிடிக்கவில்லை; ஆகையால், வேறொருவரைக் கொண்டுவந்து குடியரசராக்கினர்கள். இந்தப் புதியவர் பேனாவை நன்றாய்ப் பிடித்தவர், குருகர் குண்டை நல்லாய்க் கையாண்டவர். புதியவர் மேதாவி; சித்தப்பிரமை கொண்டவர்; நிரீச்சுரவாதி (agnostic); மகா படித்தவர்; அக்காலத்துமனுஷர். குருகருக்கோ சுட்டுப்போட்டாலும் ஒருஎழுத்துக்கூடத்தெரியாது; செவ்வையாய்க் கையெழுத்துப் போடவும் தெரியாது. இருவருக்கும் எலிக்கும் பூனைக்குமாயிருந்தது. கடைசியில் இருவருக்கும்பட்டுக்கொண்டது; நாடுஅல்லோலகல்லோலமாயிற்று; குடியரசு காற்றாய்ப் பறந்துபோயிற்று, குருகர் தம்மி



ராச்சியத்தைஆங்கிலேயர் சேர்த்துக்கொள்ளஆவலாயிருந்தார்; ஜூபார்ட்டுக்கு அது இஷ்டமில்லை; பிறகு அதுஆங்கிலேயர் நாடானபோதுஆங்கிலேயரின்கீழ் வருஷம் 200-பவுனுக்கு உத்தியோகத்துக் கிருந்தார்; ஜூபார்ட்டுக்கு அப்படியிருக்க இஷ்டமில்லை. கடைசியில் குருகர் அதிகச்சம்பளம் கேட்டபோது ஆங்கிலேயர் கொடுக்காமையால் வேலையை இராஜிநாமா கொடுத்துவிட்டார். குருகருக்குமாத்திரம் அதிகச்சம்பளம் கொடுத்திருந்தால், மிகவும் திருப்திகொண்டு ஆங்கிலேயக் குடியாய் வாழ்ந்துகொண்டு இந்தப் பேரிழவு யுத்தத்துக்கு இடமில்லாமல் இருந்திருப்பார்.

குருகர் 1883-மாண்டில் குடியரசரானர்; இவருக்குப் போட்டியாய் ஜூபார்ட் வந்து சேர்ந்தார். ஆனால் ஜூபார்ட்டால் ஒரு தடவைதான் 1893-ம் ஆண்டில் கிழவருடைய நிலைமைக்குக் கலக்கமுண்டாயிற்று; நியாயமாய் ஜூபார்ட்தான் குடியரசராயிருக்க வேண்டியது. குடிகள் பொறுக்கினது அந்த ஜூபார்ட்டைத்தான். ஆனால், குருகர் பக்கமாய் நடந்த கிருத்திரமங்களால் காரியத்தில் குருகர் பொறுக்கப் பட்டதாக ஏற்பட்டது. அப்போது ஜூபார்ட் மோசம் போனேமென்று மனதில் நினைத்துக் கொண்டாரே யொழிய குருகருக்கு விரோதமாய்த் துன்மார்க்கத்தில் இறங்கவில்லை.

குருகருக்கு இருக்கிற செல்வத்தைப் பார்த்தால் அவர்தான் டிரான்ஸ்வாலில் முதல்தரமான

முதலாளியென்று சொல்லவேண்டும்; இவருக்கு 190 சர்வமானியங்கள் இருக்கின்றனவாம். இவைகளில் பல இடங்களில் தங்கமுள்ள கற்பாறைகள் இருக்கின்றனவாம்; அந்தத் தங்கத்தைச் சுத்தம் பண்ணி எடுக்க அவருக்குஇஷ்டமில்லையாம். ஜானஸ்பர்க்கிலும் பிரிடோரியாவிலும் அதைச் சுற்றிலும் அநேக நிலங்கள் இருக்கின்றனவாம். டிரான்ஸ்வால் நாட்டில் அங்கங்கே பூமிகள் ஏராளமாயிருக்கின்றன, இருப்புப்பாதைக்கூட்டங்களில் இவருக்குப் பங்குகளுண்டாம். கேப்காலனியில் ஒரு பெரிய ஆஸ்தி இருக்கின்றது. இதல்லாமல் ஹாலண்டு, ஜர்மனி இந்தநாடுகளிலும் ஆஸ்திகள் இருக்கின்றன, 70-லட்சம் பவுன் ஜர்மனிதேசத்தில் முதல்போட்டிருக்கிறார். இந்த யுத்தத்தை முதலாளிகள் கிளப்பிவிட்டார்கள் என்று தினம் சொல்லப்படுகின்றது; அப்படியானால், இவர்கூட அவர்களில் ஒருவராயிருக்க வேண்டும். இவருக்குத் தான் எல்லாரைக் காட்டிலும் நஷ்டம் வரவேண்டியது; இத்தனை ஆஸ்தியிருந்தும், ஒரு தம்படியாகிலும் தர்மம் பண்ணி அறிவாரோ என்னமோ தெய்வத்துக்குத் தான் வெளிச்சம்.

குரூகர் முன்னால் ஒருவன் போனால், குரூகர் உடம்புகுளிக்கிறாரா இல்லையா என்று முதல் முதல் எண்ணம் அவனுக்கு உண்டாகிறது. புகை குடிக்கிறதும் காப்பித்தண்ணீர் குடிக்கிறதும், துப்பிக்கொண்டிருக்கிறதும் ஆகிய இந்த மூன்றும் தவிர இன்னும் ஏதாவதுசெய்கிறாரா என்ற ஒரு யோசனை தோன்றுகிறது.

Smoking, Coffee [illegible]



நாம் காலமே அவரண்டை போனவுடன் இரண்டு படையாளி நம்முடைய பேரைக் குரூகருக்குச் சொல்லிவந்தார்கள்; அதற்குள்ளேயே ஒரு சிறு படைத்தலைவர் காலப் பத்திரிகைகளை வாசித்துக் காண்பித்திருப்பார். குரூகர் முன் மண்டபத்தில் (porch) உட்கார்ந்திருப்பார், அப்போது குரூகருடைய தொங்கிக்குழிந்த கன்னத்தையும் (heavy jowl), மூக்கையும், நீலக்கண்கள் குரூகருக்கு மனச்சாட்சி என்பது கிடையாது என்று காட்டுவதையும், மெலிந்த நரைத்த மயிர்கள் வழவழ என்று மடிப்பு மடிப்பாய்க் காற்றில் பறந்துகொண்டு இருப்பதையும், குரூகர் தம் கழுத்து (சொக்காயின்) பட்டை அழுக்காயிருக்கக் கண்டுஅதைமறைக்கப்பிரயத்தனம்பண்ணுவதையும், ஆகிய இவையெல்லாம் நாம் பார்க்கலாம்.

இவர் அழுக்கடைந்தசிலும்பல்(wear)படிந்த கறுப்புச் சொக்காய்தான் போடுவாராம். தளதள என்று(loose)ஒரு பெரிய சொக்காயும் (coat) உயரப் பொத்தான் போட்ட அரைச் சொக்காயும் முன்னண்டை தட்டையான பிஜாரும் போட்டுவந்தார். இவையெல்லாவற்றிலும்சாதாரணமாய்க்காப்பித்தண்ணீரும், புகையிலை ரசமும் விழுந்து படிந்திருந்தன; இவையெல்லாவற்றிற்கும் ஆச்சரியமாயிருப்பது என்னவென்றால்:—அவர் கச்சேரிக்குரிய பச்சைச்சொக்காய் போட்டால், வேடிக்கையான சிரிப்பு ஒன்றுண்டாகும், அதை என்ன அடக்கினாலும் நமக்கு அடக்கமுடியாதாம்.

இவரிடத்தில் காம்பீரம் தோன்றாது; பெருமை காணாது; அவர்மேல் நேசங் கொள்ளும்படி அவரிடத்தில் ஒன்றாவது கிடையாதாம்; அவர்குணங்களின் சக்தி வெளிப்பட்டுக் காணவில்லை. அவர்முன்னால் நீங்கள் பேசப்போனால், அவர் உங்களோடு பேசுகிறாப் போலிருக்காது; மேல்விழுந்து கர்ச்சிக்கிறாப் போலிருக்கும்; அவர் பேசும்போது தாம்சொல்லும் உரப்பானபேச்சுக்கள் ஒவ்வொன்றுக்கும் தம் முழங்காலிலாவது பக்கத்தில் நிற்கும் துபாஷு மேலாவது தட்டிக்கொண்டே வருவார்; துபாஷுமேல் தட்டும்போது அத் துபாஷு இவனுக்குத் துபாஷுத்தனம் பண்ணினது போதுமப்பா என்று மனம்நொந்து போனான்; அப்படித் தட்டிக்கொடுப்பாராம், குருகர்; அவர்பேசும்போது ஏற்றச்சால் போன்றவயிறு அவர் பேசுகிற பரபரப்பால் துருத்திபோல் மேலும் கீழுமாயசைவதால், புகைகுடிக்கும்பழுப்புக்குழாய், அக்குழாயினும் பழுப்பான பற்களிலிருந்தும் நழுவிநழுவிவிழுந்து விடும்.

அவர்குணமோ கோபம்; நடைக்கையோ அடாபிடித்தனம்; சுயேச்சையாயாண்டுவந்ததாலும் அளவற்ற செல்வத்தாலும் எல்லாரும் தமக்குக் கீழ்ப்பட்டே பேசவேண்டுமென்னும் மனம்பொறுக்காக்குணம்மேலிட்டுப் போயிற்று; அவர் குடியரசராயில்லாமலிருந்தால், ஒரு தத்துவவாதி (Philosopher) யாயிருப்பார். ஒரு குடியரசுக்குப் பெரியவரான இவரிடத்தில் ஒரு துர



க்கப்பக்கிரிக்கு (Preacher) இருக்கும் சுவாதீனமிருக்கிறது; அந்தச் சுவாதீனத்தோடு அகம்பாவமும் வணக்கமும் கலந்திருக்கின்றன; அவருக்கு மினுக்குத் தளுக்கு தெரியாததினால் எல்லாருக்கும் தாம் கடவுள்மீது வைத்திருக்கும் ஒரு மூடபக்தியைக் காண்பித்து அவர்கள் மனதைக் கலக்கப் பார்க்கிறார்; அவருடைய நடவடிக்கையாலேயே/தமக்குப் பெருமைவாராததினால், தமக்குள்ள ஒருவிதமான விநோத குணங்களால் பெருமைகாட்டுகிறார்; தம்மிடமுள்ள சில குறிப்பான குணங்களால் தம் சுபாவத்தைப் பரவப் பண்ணுகிறார்.

இவர் பிரிடோரியாவில் மகா ஐசுவரிய வந்தராகையால் தாம் மிகத் தெரியாத பரமார்த்தி (rusticity) என்று காண்பித்தும், காலத்துக்குத் தகுந்தபடி தம் குடிகளுக்கு வேலைகள் பண்ணிக்கொடுத்தும், படிகள் (dole) அளந்து விட்டும், தம் பக்கத்துக்குத் தமக்குச் சாதகமாய்க் குடிகளை யிழுத்துக்கொண்டார்.

இவர் இராச்சியத்தில் தம் சனங்களுக்கும் அந்நியர்களுக்கும் என்னைத் தனியாய் விட்டுவிடுங்கள் என்று முறையிட்டு வந்தார்; இப்படி முறையிடும்போது, கடையில் அவரைத் தனியே சுயேச்சையாய் விட்டு விட்டார்கள். இப்படி நான் தனியாய் இருக்கும்போது என் (சோலிக்கு) வழிக்கு ஒருவரும் வாராதேயுங்கள் என்று ஒரு பாத்தியதையை உண்டாக்கிக்கொண்டு கேவலம் சுயேச்சை

யாய்த் திரிந்து அரசுபுரிய ஒரு சுதந்திரம் கேட்டார்.

இராச்சியத்தின் காப்பின் பொருட்டு அந்தரங்கவேவு நிதி (Secret Service Fund) ஒன்று ஏற்படுத்தி அந்த நிதிக்கு அரசின் பணத்தைத் தண்ணீராய்ச் செலவிட்டார். இவருக்குத் தம்மரசுக்கு ஒரு துறைமுகம் சம்பாதிக்க வேண்டுமென்று வெகு நாளாய் ஆசையுண்டு. இந்தமாதிரி ஒருதுறைமுகம் சம்பாதித்துக்கடைசியாய்த் தம் நாட்டுக்குக் கப்பல்படை உண்டாக்க வேண்டுமென்றும் கருத்துண்டு. அதற்காக யுத்தத்துக்குச் சில மாசங்களுக்குமுன் பக்கத்துப் போர்த்துகல் தேசத்துக் குடியேற்ற நாட்டுக் துடியாளரை (கவர்னர்) போய்ப் பார்த்துவரும்படித் தம் காரியஸ்தரை (Dr. Leyds) அனுப்பித்தாராம்; உள்கருத்திதுவாயிருந்தபோதிலும், மேலுக்குமாத்திரம் பூர்வக்குடிகளால் தங்கச் சுரங்கங்களில் எப்படிக் கூலிவேலை நடக்கும் என்று யோசிக்கப் போனதாகச் சொல்லிக் கொண்டாராம்.

ஆங்கிலேயர் சிலர் குருகருக்குள்ள இந்தக் குணங்களும், அவர் செய்த செய்கைகளும் குற்றமாய் நினைப்பார்கள்; அவற்றில் இன்ன குற்றமென்று எனக்குத் தெரியவில்லை. ஆங்கிலேயரில் சில குடிகள் அப்படிச் சொன்னபோதிலும் இராஜாங்கத்தார் அவ்வாறு சொல்லமாட்டார்கள்.

ஊம் பால் குருகர் பலதடவையும் ஐரோப்பா வந்துபோயிருக்கிறார். இங்கிலாண்டுக்கும் பலதட



வை போயிருக்கிறார்; 1881-ம் ஆண்டு தம் குடிகள் சார்பாய்ப் போனாரென்று சொல்லியிருக்கிறேன்; பாரிஸ் நகரத்து வேடிக்கைகளைப் பார்த்திருக்கிறார்; ஹாலண்டுக்கு முன்னால் ஒரு தடவை க்ஷேத்திர யாத்திரைபோல ஒரு யாத்திரை செய்திருக்கிறார்; அங்கே, இவர் மகா பராக்கிரமசாலிகளான டச்சுக் குடிகளின் பேர்போன சந்ததியென்று எல்லாரும் கொண்டாடுகிறார்கள். குருகர் இங்கிலாண்டைப்பற்றிச் சொன்னது.—இங்கிலாண்டு நல்ல தேசந்தான்; கண்ணுக்கு நன்றாய்த்தானிருக்கிறது, அதில்சந்தேகமில்லை; நேர்த்தியான வீடுகளுமிருக்கின்றன; ஆனால், ஒரு இடத்தில், லண்டனுக்கு வெளியிலுங்கூட ஒருவன் தனியாய் உட்கார்ந்துகொண்டு புகை குடிக்கவேண்டுமானாலும் வெகு கஷ்டம்; அங்கே ஒரு அடி நிலமும் விடாமல் யாருக்காவது ஒருவருக்குச் சொந்தமாயேயிருக்கிறது. சொந்தமில்லாத ஒழிந்த நிலம் இல்லவே இல்லை. ஒரு மரத்தடியில் உட்கார்ந்து நெருப்புக்குச்சியைக்கிழித்துப்புகைக்குழாயை மூட்டிப்புகையைக் குடித்து வெளியே பூபூவென்று இரண்டுதரம் புகையை ஊதுமுன்னால், எங்கிருந்தாவது ஒருவன் வந்து "நீ யார் இங்கே புகைக்குடிக்கிறாய்? இது என் பூமி, நீ இங்கே இருக்கத்தேவையில்லை, வெளியில்போய்விடு" என்று துரத்திவிடுகிறான்;—என்று வெகு நிந்தனையாய்ச் சொன்னார்.

ஒருதரம் லண்டனிலும், பாரிஸிலும் நாடகம் பார்க்கப்போனார்; ஒருதரம் பாட்டுக் கேட்கப்

போனார்; அவர்க்கு இரண்டு நகரங்களிலும் இரண்டும் பிடிக்கவில்லை; "சிலபேர்க்கு ஆடைகள் மிக்க உயரத்தூக்கியிருந்தன, சிலர்க்கு உடுப்புகள் மிகத்தாழ இருந்தன" என்றுவக்கணையாய்ப் படித்துச் சொன்னார் (Pour out criticisms); இப்படிச்சொல்லிவிட்டுத் தாமும் தம்புடைசூழ்ந்தாரும் பாரிஸ் நகரத்தை விட்டுவரும்போது தம் புடைசூழ்ந்தார்க்குச் சொன்னது:—பாரிஸ் நகரம் பலவிதங்களில் பெரிய நகரந்தான்; ஆனால் அதன் கிறிஸ்தவமதம் வெகு மதிக்கத்தக்கதன்று என்று சொன்னார். அங்கேயிருக்கும்போது ஞாயிற்றுக்கிழமை பலபேர் பலவற்றிற்கு இவரை மரியாதை பண்ணி அழைத்தார்கள்; அவற்றில் ஒன்றிற்காவது இவர் போகவில்லை; தாமுண்டு தம்மறையுண்டு; தாமுண்டு டச்சுப் பைபிளுண்டு.

ஹாலண்டுதான் அவர்க்கு வெகு ரொம்ப மனதுக்குப்பிடித்த நாடு; "எனக்குத் தகுந்தபடி டச்சுக் காரர்கள் இருக்கிறார்கள்; என்மனதும் அவர் மனதும் ஒத்திருக்கிறது" என்று சொன்னாராம். இந்த ஹாலண்டுநாட்டில், எல்லாவற்றிற்கும்பெரியபுகைக்கப்பலொன்றுக்குப் பால் குரூகர் என்று பேர்.

தன் குடிகளுக்குள் இவர் செல்வாக்கு எப்படிப்பட்டதென்றால், இவர்வார்த்தை ஒவ்வொன்றும் வேதவாக்கியமாய் முழங்கும். குடிகள் அவரைப் பூஜிக்கிறார்கள், நேசிக்கிறார்கள், இச்சிக்கி-



றார்கள், மெச்சுகிறார்கள்; மடிந்தாலும் அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் போகமாட்டார்கள்; ஜெயம் வரட்டும், க்ஷயம் வரட்டும், அவர் வார்த்தைக்கு இரண்டு பண்ண மாட்டார்கள். தங்கள் முன்னோர்கள் ஸ்பெயின்தேசத்துக்குப் பணியாது மடியப் புகுந்தாற்போல, யுத்தம் தொடங்கச்சித்தப்பட்டார்கள். கடைசியாய் இந்தயுத்தமானது, ஒன்றுக்குப் பதினொருமடங்கு ஆளும், ஒன்றுக்கு இருபத்திரண்டு மடங்கு பணமும், ஒன்றுக்கு 33 மடங்கு காலமும் செலவிட்டு முடிக்கப்பட்டது; மலையைக்கெல்லி எலியைப் பிடிக்கிறாப்போலப் போவர்கள் நாடுகள்பிடிபட்டன.

இந்தப் பால் குரூகரைப் பல பேர் பலபேருக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள்; ஒருதரம் அமெரிக்கா ஐக்கியநாட்டுக்கு முதல் துரைராசான வாஷிங்டனுக்கு ஒப்பிட்டார்கள்; ஒருதரம், கிரேக்கதேசத்துப் புராணங்களில் சொல்லிய ஒரு மகா வீரனுக்கு (Ulysses) ஒப்பிட்டார்; இப்படி ஒப்பிட்டது நன்றாயேயுள்ளது; ஆனாலும், இவர் நேர் நிகரற்றவர், ஒப்பில்லாதவர்; யாரும் இவர்க்குத் தனியே ஈடில்லை; இவர் தம் குடிகளைத் தம் கையில் போட்டுக்கொண்டு, 18-வருஷகாலமாண்டதைப் பார்த்தால், இவரை ஒப்பிடக்கூடிய பெரிய மனுஷரும் இந்த உலகத்தில் இருக்கிறாரா என்று ஒரு விந்தையாகத் தோன்றுகிறது.

தம் கலப்பையைவிட்டுக் கத்தியையெடுத்துப் படையணிகளுக்குத் தலைவராய் வந்ததைப்பார்த்

தால், கான்ஸ்டாண்டி நோபில் (Cincinnatus) ஞாபகம் வருகிறது; அவர் தம் குடிகளை ஒன்றுபடுத்தி ஆங்கிலேயர் கையினின்றும் விடுவித்ததைப் பார்த்தால், மேற்சொன்ன வாஷிங்டன் என்பவர் ஞாபகம் வருகிறது; பகையாளிகளை வெகு தயவுடன் நடத்துவதைப்பார்த்தால், ஒரு ரோமன் சக்கிரவர்த்தியின் (Augustus) நினைவுண்டாகிறது; அவர் தம் குடிகளின்மேல் எல்லா விஷயத்திலும் அன்புகொண்டிருப்பதைப் பார்த்தால், ஜர்மன் சக்கிரவர்த்தி ஒருவரின் (Frederick the Great) ஞாபகம் வருகிறது; அவர்க்குள்ள ஒருநெஞ்சழுத்தத்தையும்நெஞ்சுத்துணிச்சலையும் கல்நெஞ்சையும் பார்த்தால், ஜெர்மன் தேசத்து மந்திரி ஒருவர் (Prince Bismark) நம்மனதில் தோன்றுகிறார்; இந்தமாதிரியானவர் தம் குடிகளிடத்திலும் சத்துருக்களிடத்திலும் ஒரே விதமாய்த் தம்மைப்பற்றி ஒரு விதமான பயபக்தியை உண்டாக்கினார்; அவர் மதாபிமானத்தை நோக்கும்போது, ஆங்கிலேய அரசர் ஒருவரைக் கொலைபுரிந்த ஆங்கிலேயச் சேனாபதியை (Cromwell) நாம் நினைக்கிறோம்; குடியரசில் குடிகள்வாக்குப்படிச்செய்திகள் நடப்பதுபோக, அவர்சொன்னதற்கு இரண்டு நடக்காததை யோசித்துப் பார்த்தால், பூர்வத்தில் கிரேக்தேசத்தில் இந்தமாதிரி இருந்தவர் ஒருவர் (Pericles) நம் மனதுக்குத் தோன்றுகிறார்; இப்படியெல்லாம் எல்லாரையும்எடுத்தெடுத்துச்சொல்லி



உபயோகமென்ன? பால் குருகர் பால் குருகர்தான், மற்றெவருமாகமாட்டார் என்பது நிச்சயம்.

இந்தமாதிரி நிகரற்ற, ரஸ்டன்பர்க் சிங்கமான குருகர் வெகு அடக்கமாய் இப்போது ஹாலண்டில் இருக்கிறார்; தம் கண்ணெல்லாம் கடவுள் மீது கட்டி நிற்கிறார்; தம் கையிரண்டும் தாருட்சிக் கோடிமேல் கிடக்கின்றன. அவர் பின்னால் என்ன பண்ணப்போகிறாரோ தெரியாது; தற்காலம், அவரிடத்தில் அவர் பிறர்மேல் பாயும் குறிகள் இப்போது ஒன்றுமில்லை; யுத்தத்துக்கு முன்னுமிப்படியே யிருந்துவிட்டு, அபாயம் வருவது போலிருக்கப்பார்த்துத் திடீரென்று பிடரிமயிரைச்சிலிர்த்துக்கொண்டுமேல்கிளம்பி வெகுஜாக்கிரதையுடன் எதிரிமேல் கையைப்போட்டு அவ்வெதிரியை மற்கடப்பிடியாய்ப் பிடித்தார்; அவ்வெதிரிக்கு வெகு துன்பம் விளைவித்தார்; ஆயினுமவ்வெதிரி அத்துன்பத்துக்குச்சளைக்காமல் அவருடன் கூடியமட்டில் மல்லுக்கு நின்றார்; குருகர் தம்மாலானமட்டும் எதிர்த்துப் போர் புரிந்தும் கையாலாகாமல் தோற்று ஹாலண்டு நாடாகிய ஒரு புதர்க்கு ஓடிப்போனார்.

இப்படிப்பட்ட குருகருக்குச் சமாதானமாகிற சமயத்தில் மனைவியார் இறந்துபோனார். இறந்துபோகவே, எல்லாருமிவர்க்கு உபசாரத் தந்திகள் அடித்தார்கள்; அவர்க்கும் வெகுவிசனத்தை யுண்டாக்கிற்று; அந்தம்மாள் கிழவியாரானதால் அவளிறந்ததைப்பற்றி ஒருவர்க்குமவ்வளவுவிசனமில்லை. அவர் புருஷரான குருகர் டிரான்ஸ்வாலை

விட்டு ஹாலண்டுக்குப் போனபோது போவர்த் தலைவர்கள் இந்தம்மாளையுங்கூடப்போகச்சொன்னார்கள்; ஆயினும், "நான் அப்படி யுத்தத்துக்கு மத்தியில் நாட்டை விட்டுப்போனால் போவர்களின் சாதிக் கிளப்பம்" என்று சொல்லிப்போகவில்லை !

இந்தக் கிழக் குருகர்க்குத் தொந்திசரிந்ததும் பெண்டாட்டி செத்ததும், தாம் திண்டாடி நிற்கிறதும் தவிர, இவர் இந்த யுத்தத்துக்குத் தம் குடியில் பிறந்தவர்களை, பேரன்பிள்ளைகளை இரை கொடுத்தாற் போல மற்ற எவரும் எந்த யுத்தத்துக்கும் இரை கொடுக்கவில்லை:—ஒருபிள்ளை (Tjaard Andies) காயப்பட்டுப்பிரிடோரியாவில் சிறையாய்ச்செத்தான்; அவர் இன்னும்ஒருபிள்ளை (Piet) இலங்கையில் ஒரு சிறையாளியா யிருக்கிறான்; இன்னுமிரண்டுபிள்ளைகள் (John Adrian and Caspar) சமாதானம் நிலைக்கிற வரையில் டிலாரியன்டை இருந்து போர்புரிந்து வந்தார்கள்; அவர் பேரப்பிள்ளை ஒருவன் (Peter) சண்டை போட்டு ஒரு காலும் ஒருகையும் இழந்து விட்டு ஆங்கிலேயர்க்கு அரசநேசம் பூண்டான்; இந்தப் பேரனின் கூடப்பிறந்தானொருவன் (Stephen) டிலாரியன்டை நின்று சண்டைசெய்து வந்தான்; நன்று யடிபட்டுப் புண்பட்டான். முன் சொன்ன தம் பிள்ளைகளில் ஒருவனுக்குப் பிறந்த மூன்று பிள்ளைகள் எல்லாரும் ஸ்ரானட்சி பொருட்டுச் சண்டையில் மடிந்தார்கள். இவர் மாப்பிள்ளை ஒருவரும்(Piet Fourie)இந்தச் சண்டையில் உயி



ரிழந்தார்; இப்படி யெல்லாம் நேர்ந்த துக்கத்தைப் பார்த்தால் கிழக்குருகர்க்காக எவருமே துக்கப்பட்டு நிற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இந்தயுத்தத்தில் போவர்களைமுடுக்கிக்கீழ்ப்படுத்துவதற்காகக் கிச்சனர்பிரபு ஒரு விளம்பரம் போட்டார்; அந்த விளம்பரத்தின்படி 1901-ம் ஆண்டு செப்டம்பர் மாசம் 15 - தேதிக்குள்ளாவது அந்தத் தேதியன்றைக்காவது கீழ்ப்படியாத போவர்களின் ஆஸ்திபாஸ்தி எல்லாம் துரைத்தனத்துக்குச் சேர்க்கப்பட்டு விற்கப்படும்.

இந்தத் தேதிக்குள் குருகர்குமாரன் ஒருவன் ஆங்கிலேயர்க்குக் கீழ்ப்படிந்து விட்டான். இந்தப்படிக் கீழ்ப்படிந்தானென்று கேட்டு குருகர் வெகு விசனப்பட்டார்; இப்படிக் கீழ்ப்படிந்த பிள்ளையின் பேர் ஒருவிதமாய்த் தந்திவர, குருகர் மாத்திரம் அப்பிள்ளை தம்கடைப்பிள்ளை(Tjaard) யாய்த்தானிருக்கவேண்டுமென்று உறுதிசெய்து கொண்டார்.

இந்தக் கடைப்பிள்ளை போவர்சேனையில் அப்படி யொன்றும் உயர்ந்த அந்தஸ்தில் இல்லை. ஒரு சிறு போவர்த்தலைவனாய்க் கூட இல்லை. முன்னால் இவன் துப்பறியும் இலாகாவில் (Detective Department) ஒரு உத்தியோகஸ்தனாய் இருந்தான். இவன்மேல், கிழவருக்கு எல்லாக் குமாரர்களைக் காட்டிலும் வெகுஅபிமானம்; கிழவர் இவன் மேல் வெகுபிரியமாய் இருந்தார்; இவன் தானாய் மேற்படி விளம்பரத்துக்குப் பயப்பட்டுக்

சரண்புகவில்லை என்றும், ஏதோ ஒருசிறு சண்டையில் அகப்பட்டிருக்க வேண்டும் என்றும் கிழவர் சொல்லிக்கொண்டார். இவன் சரண்புகுந்த பிறகு இன்னும் இரண்டு பிள்ளைகளும், நான்கு மாப்பிள்ளைகளும் சண்டை முனையில் போவர்பக்கமிருந்தார்கள். இத்தனையெல்லாம் துக்கம் சம்பவித்தும் கிழக் குருகர்க்கு மனந்தளரவில்லை. இந்த மாதிரி, தம்சந்ததியில் பிறந்த பத்துப் பதினைந்துபேர்கள் இறந்ததற்கே மனம் காய்ந்த குருகருக்கு இன்னும் மனம் தளரவில்லையென்றால், 90 ஆயிரம் 100 ஆயிரம் அருமையான உயிர்கள் இந்த யுத்தத்தில் ஆங்கிலேயர் பக்கம் மடிந்து போனதற்கு ஆங்கிலேய மகாப் பிரபுவான ஏழாவது எட்வர்ட் மகாராஜர் எவ்வளவு மனந்தளர மாட்டார்? சங்கதியப்படியன்று; யுத்தவீரர்களுக்கு மானம் பிரதானமே ஒழிய பிராணன் பெரிதன்று.

"இப்படி இவன் சரணடைந்தது இந்த கிழக் குருகரின் தூண்டுதலினால் தான்; ஏனென்றால், அப்படிக் கீழ்ப்படியாவிட்டால், குருகருடைய ஆஸ்தியெல்லாம் தென்னாபிரிகாவில் ஆங்கிலேயர் விற்று விடுவார்கள்" என்று சிலர் சொன்னார்; அது சரியன்று; ஏனென்றால், இவன் சரண்புகு முன்னாலேயே, ஒரு பேரப்பிள்ளை கால் கைகள் விழுந்து போனபிறகு ஆங்கிலேயர்க்குச், சரணடைந்திருந்தான்; அவனுக்கு அக்கிழவர் ஆஸ்தியெல்லாம் சேரலாம்; இப்படியெல்லாம் குருகரின்



ஜன்மவிரோதிகள் வீண்வாதம் பண்ணுவார்களேயன்றி மகாதயாளுத்துவ குணமுள்ள ஆங்கிலேய இராஜாங்கத்தார் ஒருபோதும் வீண்வாதமும் அபவாதமும் சொல்லமாட்டார்கள்.

இவர் ஹாலண்டுக்குப்போனபிறகு போராச் சேனபதி தமக்குச் சண்டைமுனையில் பீரங்கிகள் வேண்டுமென்றுசொல்லிக்கொண்டதைக் கேள்வியுற்று அங்கே பிராஞ்சுக் காரர்கள், ஜர்மன்காரர்கள் ஆகிய இவர்களின் சகாயத்தால் பீரங்கிகளைத் தென்னாபிரிகாவுக்கு அப்போதப்போது அனுப்பித்துவந்தார். ஆனால், அவை பிடிபட்டுப் போனால், அதற்கு அவற்றை ஏற்றிக்கொண்டு வந்த கப்பற்காரர்கள் பாத்தியஸ்தர்கள் அன்று; அப்படி அநேகந் தடவை அவைகள் பிடிபட்டுப் போயின.

இதன்றி, பிராந்சுதேசத்தில் சிலர், ஆங்கிலேயர்கள் தென்னாபிரிகாவுக்கு அனுப்பும் சாமான் சேனைக்கப்பல்களை முழுக்குவதற்காக ஏற்பாடு செய்யவேண்டுமென்று குருகருக்குச் சொல்லி வந்தார்கள். குருகர் ஒப்புக்கொண்டபோதிலும் அவருடைய சூழ்ந்தாரில் பலர் ஒப்புக்கொள்ளவில்லை; ஆகையால், அந்தயோசனை நின்றுபோயிற்று.

ஆங்கிலேயச் சேனைகளைப் போவர்கள் பிடித்துக்கொண்ட பிறகு சிலநாளைக்கெல்லாம் விட்டுவிட, போவர்ச் சேனைகளை ஆங்கிலேயர் பிடித்துக்கொண்டு சிலரை இராஜத் துரோகி என்று

சுட்டும், சிலரைத் தேசப் பிரஷ்டம் பண்ணியும், சிலரைச் சிறைப்படுத்தியும் வந்தார்கள். இதைப் பிரான்சு தேசத்தில் சிலர் பார்த்து நாங்கள் ஆங்கிலேயச் சேனைகள் உங்களால் பிடிபட்டு விடுபடுமுன் அச்சேனைகள் பிடிபட்டதற்கு அடையாளமாய் அவற்றின் காதுகளைத் துண்டிக்கப் பொறி (machine) ஒன்று அமைத்துக் கொடுக்கிறோமென்று குருகருக்குச் சொன்னார்கள். குருகர் நாங்களும் எங்கள்கையில் அகப்பட்டசத்துருக்களை அந்தமாதிரி ஹிம்சைமாத்திரம் பண்ணமாட்டோம்; ஆங்கிலேயர் ஹிம்சை பண்ணுகிறார்களே யென்றால், இவர்கள் கிறிஸ்தவர்கள் அன்று, கொடுஞ்சாதி என்று அந்தமாதிரி ஹிம்சைசெய்ய மறுத்துவிட்டார்கள்.

கிழக்குருகரும் அவர் அத்தியந்த சிநேகிதரான போவர் முழுநாட்டாண்மைக்காரர் என்றுசொல்லப் பட்டவரும் ஒன்றுசேர்ந்து சமாதானகாலத்தில் இல்லாததும் பொல்லாததெல்லாம் ஐரோப்பாவில் பொய்பொய்யாய்க் கட்டிவிட்டு வந்தார்கள்: சில வேளையில் சமாதான சங்கதியே எங்களுக்குத் தெரியாதென்றார்; சிலசமயத்தில் போவர்களுக்கு ஒருவிதமான தானாட்சி கிர்சனர்பிரபு கொடுத்துவிட்டாரென்று சொல்லிவந்தார்கள்; கடைசியில், "மானக்கேடில்லாமல் மானத்துடனும் கௌரதையுடனும் சமாதானம் நிலைத்தால் போவர்களுக்குப் போதும்; அவர்களுக்குத் தானாட்சிவேண்டியதில்லை" என்று சொல்லிவந்தார்கள். சமாதானமும்



அப்படியே முடிந்தது; போவர்கள் தானாட்சி இழந்தார்கள். கிழக்குருகரும் தன்பதி யிழந்து ஹாலண்டில் தாம் உயரப்பிடித்துக் கட்டியிருந்த நம்முடைய இரண்டு நாட்டுக்கொடிகளையும் அவிழ்த்துத் தாழ்த்தி விட்டார். அவர் நாடிழந்ததற்கு அவரை யுபசாரம் கேட்கப் போனவர்க்கெல்லாம் தாமே உபசாரம் சொல்லிவருகிறார்.

பிரான்சுதேசத்தில் கிழக்குருகர் போல அவர் முகத்தைமார்புவரையில் சிலையடித்து(bust)வைப்பதற்காக ஒரு சிற்பியை சில பிரான்சுக்காரர்கள் அனுப்பினார்கள். அவர் கிழவரண்டைப் போயிருந்தார். அப்போது அச்சிற்பி (Carles) குருகரண்டை தாமிருந்த காலத்தில் நடந்த சேதிகளெல்லாம் தெரிந்தமட்டில் வெளியிட்டார்:—

நான் அவர் உருவத்தைச்சிலையடிக்கவேண்டி, தினம் அவரண்டை இன்னநேரம் போய்ப் பக்கத்தில் உட்கார்வேன். சுமார் அரைமணிசாவகாசம் உட்கார்ந்து அவரைப் பார்ப்பேன். அவர்க்குத் "தாங்கள்என்னெதிரே என்னவேண்டுமானாலும் செய்யலாம்; ஒளிச் சித்திரம் எடுப்போன் முன் இருப்பதுபோலத் தாங்கள் என் முன்னால் அசையாமல் இருக்கவேண்டுமென்பதில்லை; தாங்கள் உண்ணலாம், குடிக்கலாம், படுக்கலாம், பேசலாம், சிரிக்கலாம், இன்னும்பலவும்செய்யலாம்" என்று சொன்னேன். அதுதான் சாக்கென்று தன் காரியதரிசியுடன் வேலை செய்யத்தொடங்கினார்; எனக்கு டச்சுப்பாஷை தெரியாததினால் என்

வெல்லாம் ஒன்றாய்த் தானாட்சி பெற்றுப் பொதுத் துரைத்தனம் வைத்துக்கொண்டு சுகமே வாழவேண்டுமென்று நினைத்திருந்தார். ஆயினும் யுத்தம் வந்துவிட்டபிற்பாடு, தம் நாட்டைக் கடவுளுக்கு ஒப்புவித்துவிட்டாராம்.

இவர் ஐரோப்பாக்கண்டத்துக்குப் போய்ப் போய் வந்ததால் இவரிடத்தில் போவர் குணங்கள் சில மெருகிடப்பட்டுப்போயின. அதினால்தான், இவர் அப்படம் போவர் அன்றென்று வெளிக்குக் காணப்பட்டார். வாஸ்தவத்தில் அவர் அப்படம் போவர்தான். சாதாரணமாய்ப் பேசிக்கொண்டிருக்கையிலேயே பைபில் வாக்கியங்கள் உதகரித்து வந்தார். இந்த விஷயத்தில் இவரும் க்ருகர் போலத்தான்.

இவருடம்பில் பிராஞ்சுக்கார இரத்தமிருக்கதென்று, அவர் பேரே தெரிவிக்கிறது. அவர், பிராஞ்சுதேசத்தில் மதக்கொடுமை பொறுக்காமல் தென்னாப்பிரிகாவுக்கு ஓடிவந்த பீ ஜூபார்ட் என்பவனின் கொழுப்பேரனுடைய மகன்; கேப் காலனியில் காங்கோ என்னும் கிராமத்தில் ஜியார்ஜ் டவுனுக்குச் சமீபத்தில் பிறந்தார். தாய் தந்தையர்கள் சிறுவயதில் மாண்டார்கள். அவருக்கு மூன்றுநாள்தானே வாத்தியார் படிப்புச் சொன்னாராம். அவர் பார்வைக்குக் கரடுமுரடாயும் அழகாயுமிருந்தார். அவர் குணமோ கடைப்பிடியுள்ளது. அவருதடு மெல்லியதாய் இருக்கும்; ஆழம் படிந்திருக்கும்; அதினால், அவர் யோசிக்



கும் போதெல்லாம் உதட்டை அடிக்கடிக் கடிப்பதாகத்தெரிகிறது; அவர் கண்கள் மிகவும் தீக்ஷண்ணியமாய்ப் பார்க்கத்தக்கன. கண்களைப் பார்த்தால் சாந்தகுண முள்ளவர் போலத்தான் காணும்.

அவர் மனதிலும், உடலிலும் சளையாதவல்லமையுள்ளவர், அவர் தேசாபிமானம் மிகவும் ஆழ்ந்தது; ஆனால், அது விசாலமானதன்று; ஆங்கிலேயரிடத்தில் வெறுப்புமுண்டு, விருப்பும் உண்டு.

அவருக்கு அவ்வளவு படிப்பு இல்லாது போனாலும், கொள்வினை கொடுப்பனையில் மிகவும் தேர்ந்தவர், புத்திக் கூர்மையுள்ளவர்; அவர் ஐரோப்பாக்கண்டத்துச் சாதியாராகிய முதலாளிகளைப் பார்த்தால் மனம் வெறுத்துப் பேசினார். அவருக்கு ஸ்திராஸ்தி மிகவுமுண்டு; ஆங்கிலேயர் 21-வருஷத்துக்கு முன் டிரான்ஸ்வாலைப் பிடித்துக்கொண்டு ஆண்டபோது, ஆங்கிலேயருக்குப் பணிந்து வரவில்லை; பிற்பாடு க்ருகர் இங்கிலாந்துக்குப் போனபோது, இவரும் போய் இருவரும் டிரான்ஸ்வாலைத் திருப்பி வாங்கிக்கொண்டார்கள்; அப்போது தம் நாட்டுக்குத் திரும்பிவந்து தம் குடிகளுக்கு ஆங்கிலேயர் பலமானசாதியார், அதில் சந்தேகமில்லை, ஆனால் எல்லாம் வல்லவரல்லர் என்று உறுதி சொன்னார்.

ஐரோப்பாவுக்குப்போனபோது ஜர்மன்தேசத்தார் ஒருகத்தி இனாமாகக் கொடுத்தார். அ

தைப்பார்த்து மிகச் சந்தோஷப் படுவது வழக்கமாம்; ஒரு நாள் ஐரோப்பாவிலிருந்து டிரான்ஸ்வாலுக்குத் திரும்பிவந்து கொண்டிருக்கும்போது வால்நதியைக் கடக்கவேண்டிப்பரிசல்வ[illegible]னார்; அது அவருக்கு மிகவும் அயிஷ்டமாயிருந்ததாம்; அவர் கொஞ்சம் கறுத்திருப்பார்; போவர்களுக்கும் நீர்மேல் பிரயாணம் பண்ணப் பிடிக்காது.

ஆங்கிலேயர் டிரான்ஸ்வாலுக்கு வடக்கே பூர்வக்குடிகளின் நாடுகளைக் கட்டிக்கொண்டபோது குருகருக்கும் ஜுபார்ட்டுக்கும் மிகவும் வருத்தமாயிருந்ததாம்:—ஏனென்றால் போவர்கள் டிரான்ஸ்வாலிலிருந்து வடக்கே குடியேற முடியாது; குடியேறமுடியாதுபோனால், டிரான்ஸ்வால் வரவரப் பெரியதாகமுடியாது. அப்போது ஜுபார்ட்:—ரோட்ஸ்துரை டிரான்ஸ்வாலுக்கு வடக்கே ஆங்கிலேயருக்கு நாடு தேடுகிறதுபோல இருக்கிறது. அதினால் ஆங்கிலேயருக்கு எவ்வளவு தொந்திரவுகள் நேரிடுமோ அது யாருக்கும் தெரியாது;—என்றாராம். அப்படியே இப்போது தொந்திரவு நேரிட்டது; ஜுபார்ட் 20 - வருஷங்களுக்கு முன்னால், டிரான்ஸ்வால் நாடு போவர்களுக்குத் திரும்பி வந்தபிற்பாடு சொப்பனத்திலும் ஆங்கிலேயருக்கு விரோதமாய்ச் சேனை நடத்துவோம் என்று நினைக்கவில்லை.

இப்படிப்பட்ட தைரியமான பெருத்த யோசனையுள்ள ஜுபார்ட்டுக்கு யுத்த ஆரம்பத்தில்



ஆங்கிலேயர்பக்கம் இருந்தசேனாதிபதியும் தோற்றுப்போய் லேடிஸ்மித்தில் மாட்டிக்கொண்டார்; அவருக்குப் பின்வந்த புல்லர்த் துரையும் கொஞ்சங்கூட யோசனையில்லாமல் முரட்டடியாய்ச்சண்டைபோட்டு ஒருதடவை தோற்றார்; அப்போது இங்கிலாண்டில் மிகவும் கோபத்துடன் ஜனங்களும் துரைத்தனத்தாரும் சேர்ந்து இவரைநிந்தித்தார்கள். பிற்பாடும் ஒருமாதங் கழித்துமகா யோசனையோடு சண்டைக்குப் போகிறதுபோலப் போய் அப்போதும் துரத்தப் பட்டுத் தோல்வியடைந்துபோனார். அப்போது இங்கிலாண்டு சனங்களுக்குப் பொறுக்காத கோபமும் தாபமும் வந்தன; வந்து என்னபண்ணுகிறது? புல்லர்சேனாபதி முதல் முதல் இந்த மாதிரி தோல்வியடைந்ததினாலேயோ, அல்லது வேறெந்தக் காரணத்தினாலேயோ புல்லர்ச் சேனாபதிக்கு மேலே ராபர்ட்ஸ் பிரபு தென்னாபிரிக்காவில் இராணுவத்தில் தலைவராய் நேமிக்கப் பட்டார்.

இப்படிப்பட்ட தோல்வி அடைந்த புல்லர்ச் சேனாபதி சாமான்னியமானவரா அல்லது யுத்தத்தில் ஏதாவது அனுபவமுள்ளவரா? என்று சற்றுள்ளாழ்ந்து பார்த்தாலும் அவர் அதிகமில்லை.

யுத்தம் தொடங்கினது முதல் இதுவரையில் நடந்த அநேக சங்கதிகளுக்குள் ஜுபார்ட் இறந்ததுதான் மிகவும் முக்கியமான செய்தி என்னலாம்; நேடாலில் போவர்களுக்கு வந்த செயங்களெல்லாம் அவரால்தான்; அவர் மகாசமர்த்தர்.

போன 19-ம் நூற்றாண்டில் சேனைகளை யாண்ட படைத்தலைவர்களில் மகாசௌரியசாலி, மகா தந்திரமுள்ளவர்; மகா ஆழ்ந்தமனத்தர்; மகா யோசனையுள்ளவர்.

இவர் முப்பது வருஷகாலமாய்ப் போலர்த் தலைவராய் இருந்து வந்தார்; கேப்காலனியில் பிறந்தார்; ஆதிமுதல் குடியரசில் இவர் சாமர்த்திய மெல்லாம் தெரிந்திருந்தன. உதவிக்குடியரசராயும் தாரைத்தனவக்கீலாயும் அந்தஸ்துக்களடைந்தார். ஒரு தடவை, குடியரசராய் வரவேண்டுமென்று வெகு ஆசையுண்டாயிற்று. ஆனால், அந்த ஆசை நிறைவேறவில்லை. ஒரு தடவை குருகரும் இவரும் குடியரசன் வேலைக்குப் போட்டி போட்டபோது இவர் தோற்றுப்போனார். குருகர் வெளியே வந்து இவருடன் கைகுலுக்கிச் சந்தோஷ வார்த்தைகள் பேசி இவரைச் சேனாதிபதித் தலைவராக்கினார். இந்த முறையில் இருவரும் அப்போது முதல் அரசாண்டுகொண்டிருந்தார்கள். இருவருக்கும் அனேகத்தன விஷயமாய் மனோவித்தியாசமிருந்த போதிலும், இருவருக்குமிருந்த சிநேகிதம் எள்ளளவும் தடுமாறவில்லை. இருவருக்கும் ஒருவரிடத்தில் ஒருவர் வைத்திருந்த நம்பிக்கையும் போகவில்லை, பிசகவில்லை.

இவர் மனைவிக்கு முகம் வெகு களையாயிருக்கும்; இந்தம்மாள்தாம் சமைத்த சமையல் சாப்பிட்டவர்களுக்கு நன்றாயிருந்ததாவென்று தெரிந்துகொள்ள அவர்கள் சாப்பிடும்போது சமயலுள்ளின்



நிலைவழியாய் எட்டி எட்டிப்பார்ப்பாராம். இந்தம்மாள் தான், மாஜூபாச் சண்டையில் ஆங்கிலேயரைச் சமயத்தில் தாக்கும்படித் தம்கணவருக்குச் சொன்னார்; இந்தம்மாள் சொல்லாதுபோனால், ஜூபார்ட் தாக்கியே யிருக்கமாட்டார், அப்போது சண்டை என்னமாய் முடிந்திருக்குமோ?

இவர் டிரான்ஸ்வாலில் சீர்திருத்தம் வேண்டுமென்று தம்மிடத்தில் சொல்லிக்கொண்டவர்களுக்கு "நீ சீர்திருத்தங்கள் வேண்டுமென்று ஒரு மனுவை எழுதிக்கொண்டு என்னிடத்தில் வந்தால், நானுமதில் கையெழுத்துப் போடுவேன், அயிஷ்டப் படமாட்டேன்; ஏனென்றால், எனக்கும் என் தேசம் நல்ல சீர்திருத்தமுள்ள தேசமாயிருக்க வேண்டுமென்று ஆசையிருக்கிறது. ஆனால், அது அப்படியில்லையென்று எனக்கு நன்றாய்த் தெரியும்" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

இந்த மாதிரி ஒவ்வொருபோவர்க்கும் தாராளமான மனதிருந்தால் இந்த யுத்தம் ஏன் வந்திருக்கும்? ஆனால், இருநிறத்தாரில் ஒருநிறத்தார் மட்டும் குணமாயிருந்தால், என்ன உபயோகம்? இருநிறத்தாரும் ஒரேகுணமுள்ளவர்களா யிருந்தாலல்லவோ சண்டைவாராது?

இவர் இங்கிலாந்துக்கு ஒரு கடிதம் எழுதினார்; அதில் "எங்கள் துர்ப்பாக்கிய நாட்டுக்கு ஆங்கிலேயர் சிலர் சமாதானத்தின் பொருட்டு இதுவரையில் செய்த உபகாரங்களுக்காகவும் இப்

பேர்து செய்யும் உபகாரங்களுக்கும் உங்களைக் கடவுள் மிகவும் கடாக்ஷிப்பார். இந்தக் கடிதம் உங்களுக்கு வந்து சேருமுன் சாம்பர்லேன் துரையவர்களின் யுத்தக்குமிழ் எங்கள் மேல் படவென்று வெடிக்கலாமென்று தோன்றுகிறது; இத்தனைநாள் நடந்த சங்கதிகள் எல்லாம் ஊட்லாண்டர்கள் அல்லது ஆங்கிலேயர்களின் முறைதனைத் தீர்க்கவே நடக்கவில்லை. ரோட்ஸ், ஜேம்ஸன், சாம்பர்லேன் இம்மூவர்களின் குறைகளை நீக்கவேயென்று தோன்றுகிறது; சாம்பர்லேன் துரையவர்கள் தமக்குத் தெரிந்த இராஜ்ய தந்திரத்தை முற்றிலும் கொண்டு முடிக்க ஆங்கிலேயக் குடிகளை மாற்றி வருவதுபோல், எங்களையும் மாற்ற ஊட்லாண்டர் ஊட்லாண்டர் என்று அலைகிறார்; இந்தமாதிரித் தம்மிஷ்டத்தை டிரான்ஸ்வாலிலே மாத்திரமன்று, தென்னாபிரிகா வெல்லாம் நிறைவேற்றப்பார்க்கிறார். மகாராணியவர்கள் எங்கள்முறைகளை ஒருபக்ஷபாதமான நியாயவாதியைக் கொண்டு பரிசீலித்தால் நல்லது; ஆனாலும் சாம்பர்லேன் துரையவர்கள் எங்கள் நாட்டைக் கட்டிக் கொள்ளப்பார்க்கிறார்; நாங்கள் கஷ்டப்பட்டு இதைத் தடுக்கப்பார்ப்போம். இப்படிச் செய்வதில் போவரின் இரத்தம் கடைசிப்பொட்டு வீழு மிந்நுதிவரையில் சண்டைபோடுவோம்" என்று எழுதியிருந்தார்.

இப்படி, ஆங்கிலேயரோடுநாம் எதிர்த்துயுத்தம் பண்ணிச் செயிப்போமென்றுகொஞ்சங்கூட



அவர்க்கு நம்பிக்கையில்லை; ஆனாலும், தம் நாட்டுக்காகஉழைப்பது தாம் எடுத்த சன்மத்தின் கடன் என்று நினைத்துமகாசாமர்த்தியமாய் உழைத்தார். அதனால், தமக்குத் தம்முடைய நாட்டில் இருந்த விரோதிகளே யல்லாமல் ஆங்கிலேய நாட்டு விரோதிகளும் தம்மை மிகவும் மெச்சிக் கொண்டார்கள். தாம் இன்னும் சிறுவயதாயிருந்திருந்தால் எதிரிகளுக்கு இன்னும் கஷ்டத்தைக் கொடுத்திருப்பார். கிழவயதில் இவ்வளவு சாமர்த்தியமாய்நல்லதனமாய்ச்சண்டைசெய்ததுபோவர்களின் மகா அதிர்ஷ்டம் என்னவேண்டும். சேனாதிபதித் தலைவர் சௌக்கியம் போலிருக்கும், அவர்நடத்தும் யுத்தமும். இவருக்கு உடம்புசௌமையில்லாததினால்தான் லேடிஸ்மித் முற்றுகை அவ்வளவு சீக்கிரத்தில் விடுபட்டுப் போயிருக்க வேண்டும். அல்லாமலும், நாதலாவுக்குத் தெற்கேயும் யுத்தத்தைக் கொண்டு போனவர் ஏன் சில நாளைக்கெல்லாம் மறுபடியும் நாதலாவுக்கு வடக்கேயே யுத்தத்தை நிறுத்தி வைத்தார்? இப்படிச் செய்தது தம்முடம்பு அசௌக்கியமாய்ப் போனதால்தான் என்னவேண்டும்; இப்படி அசௌக்கிய மாயிருந்தும், லேடிஸ்மித் விடுபட்டுப் போனவுடன் தாம் ஆசுபத்திரிக்குப் போய்ச் சொஸ்தம் பண்ணிக்கொள்வது விட்டுவிட்டு ஆரஞ்சுநாட்டைக் காக்கும்படி ராபர்ட்ஸ் பிரபுவை எதிர்த்து நின்றார்; கிழத்தனத்தில்சாவுக்கு வேறே என்னவேண்டும்? தேகம் கொஞ்சம் அசௌக்கியப் பட்டாலும் ரோவு அதிகரித்

துப் போயிற்று; இவர் மார்ச்சுமாதம் 7-ந்தேதிச் சண்டையில் சேனைகளை நடத்தவில்லை; டிவெட்டும், டிலாரியும் தான் நடத்தினார்கள். இவர் சண்டையை மாத்திரம் நடத்தினர். எல்லாரும் இந்த மாதிரியான தீரன் இறந்து போனார் என்றால் அவர் கர்மாதிகளுக்கு வந்துதான் இருப்பார்கள். ஒவ்வொரு விஷயத்திலும் அவர் இறந்தது மகா நஷ்டத்தைக் கொண்டுவந்து விட்டது. குருகர் மானவர்கள் திகைத்து நிற்கும்படி யுத்தம் நடத்துகிறேன் என்றாரல்லவா? இந்தமாதிரி திகைத்தல் எந்த விஷயத்திலோ? ஒருவேளை மகாகுரூரமான செய்கைகளைச் செய்கிறதாக எண்ணி இப்படிக் குருகர் சொல்லியிருந்தால், இவர் உயிரோடு இருக்கிறவரையில் அந்தமாதிரிக் குரூரமான செய்கைகள் குருகர் செய்யத் துணியார். இவர் இறந்த பிறகு அக் குரூரச் செய்கைகளைச் செய்வாரோ என்று ஒருபயமுண்டாயிற்று. தம்சினேகிதகோஷ்டியில் எல்லாருக்கு மேலாய்த் தம்மைக் காண்பித்து நடந்து கொண்டார்; இவர் ஒளிச் சித்திரங்களைப்பார்த்தாலும் கூட, அழகாயும் அன்பும் நன்மையு மடங்கிய குணமுடையதாயும் தெளிந்த முகமுடையதாயுங் காணப்படுகிறது. இப்படிப் பட்ட உருவம் கிராஞ்சே, குருகர் இவர்களுக்குக் கிடையாது; இவர் உயிருடனிருந்திருந்தால், ஆங்கிலேயர் யுத்தம் முடிந்தபிறகு டிரான்ஸ்வால் நாட்டைச் சீர்திருத்தச் "செய்யும் முயற்சிகளில் முக்கியமாய் உதவிபண்ணி வந்திருப்பார். ஆனால், யுத்தம் முடிந்த பிறகுசெய்யும் உபகாரத்தை யுத்த



யில்லாமலே செய்திருக்கக் கூடாதா என்று ஒரு கேள்வி பிறக்கும்! அந்தக் கேள்விக்கு நீங்களே விடை கொடுத்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

ஜுபார்ட் பிரிடோரியாவில் மார்ச்சு மீ 27ந் தேதி செவ்வாய்க்கிழமை தினம் இராத்திரி 11-30 மணிக்கு மரணம் அடைந்தார். அவருக்கு வயிற்றில் ஏதோ ஒரு நோயிருந்தது. நகரமெல்லாம் இந்தத் தன்னாடுநேசி, இந்தத் தீரான சேனாபதி, இந்தச் சேனாபதித்தலைவர், இந்தநாணியமான பெரிய மனுஷர் இறந்தாரேயென்று மகா துக்கத்தில் ஆழ்ந்து இருந்தது. இவருக்கு வியாதி நீடிக்கவில்லை; போன ஞாயிற்றுக்கிழமை கூடக் கோவிலுக்கு வந்து, சுவாமி தரிசனம் பண்ணினாராம்; சிலபேர் மூத்திரப் பையில் ஏதோ நோய் இருந்தது, அதினால் இறந்தாரென்றார். இவருக்குப் பிறகு குருகரே சேனாபதியாயிருப்பதாகச் சொல்லிக் கொண்டார்; சொன்னாரேயன்றி அவர் சேனாபதியாயுமில்லை, அவராலிருக்கவும் முடியாது; ஏனென்றால், தள்ளாதகிழவர், தூக்கமுடியாத வயிறு படைத்தவர்; அவர் நாற்காலியில் தினிக்கு உட்கார்ந்தால் மேஜையில் முன் பக்கத்தில் ஒரு சாணகலத்துக்கு விளிம்பில் ஒரு ஓட்டை சக்கரவட்டமாய் விட்டிருக்க வேண்டும். அப்போது, அவர் வயிற்றை அந்த ஓட்டைக்குள்ளே தள்ளிக் கொண்டு நாற்காலியில் உட்கார்வார்.

. . ஜூபர்ட் ஞாயிற்றுக்கிழமைக் காலையில் பிணியாய்ப் படுத்துக்கொண்டார்; திங்கட்கிழமையெல்லாம் நோவா லவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தார்; மறுநாள் சாயந்திரமாய் நோவு நின்று போயிற்று; ஆனாலும், அப்போது பிழைக்கமாட்டாரென்று தெரிந்து போயிற்று; இறந்துபோம் போது ஸ்மரணை தப்பியிருந்தது; நிஜத்தில், குடல் வெந்திருந்ததாம் (inflammation of the bowels); இராஜரீக நிலையில் எல்லாரும் வந்து பிணத்தைப் பார்க்கும்படிச் சற்றுநேரம்வைத்துவிட்டுப் பிணத்தை அவர் சொந்த நிலங்களிருக்கும் குடிசைக்கே (at Rustfontein near Wakkerstroom) கொண்டுபோனார்கள்; இறக்கும் முன்னால் "ஐயோ! என் நாடும் என் சனங்களும் என்னவார்களோ!" என்று அழுதுகொண்டிருக்கும்போதே ஸ்மரணைதப்பிற்று. "நானிறந்தால் எனக்கு ஒரு விதமான இராணுவ மரியாதையும் வேண்டாம்; மிக அமரிக்கையாய் என் பிணத்தை அடக்கப்பண்ணுங்கள்; என்கர்மாதிகள் ஒரு துரைத்தனத்தார் செய்வதுபோலப் படாடோபமாய்ச் செய்யாமல், என் தாய்தகப்பன் தங்கள் வீட்டில் சொந்தத்தில் செய்வது போலச் செய்யவேண்டும்" என்று சொன்னார். அப்படியே அவருடைய இஷ்டம் நிறைவேறிற்று. ஜூபர்ட்டுடைய பெண்சாதிக்கு, மகாராணி உபசாரவார்த்தைகள் ராபர்ட்ஸ்பிரபு வழியாய் அனுப்பினார்; அன்றியும், உன் கணவனை ஆங்கிலேயர் ஒருமிக்க எல்லாரும் மகாதீரர் என்றும் மகாகனம் பொருந்தினவர் என்றும்



நினைக்கிறார்கள் என்றும் பிரபுவை அவர் பெண்சாதிக்குச் சொல்லச் சொன்னார். 20 வருஷத்துக்கு முன்னால் இவருடன் சண்டைசெய்து தோற்றுப்போன ஒரு ஆங்கிலேயச் சேனாபதியுங் கூட இந்தமாதிரி ஒரு உபசாரக்கடிதம் அந்தம்மாளுக்கு எழுதினார். பிரிடோரியாவில் இருந்த ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் எல்லாருஞ் சேர்ந்து பிணத்தின்மேல் போடும்படி ஒரு புஷ்பமாலை செய்து அனுப்பித்தார்கள்.

இவர் செத்தார்செத்தார் என்று அநேகந்தட்வை ராய்டரான விகடகவி யுத்தநாடகசாலையில் தந்தியால் விகடம் பண்ணினார். அது இப்போது தான் பலித்தது. மாஜூபாவில் ஆங்கிலேயப் படைத்தலைவன் செத்துக் கீழேவிழுந்தபோது, பக்கத்திருந்த ஆங்கிலேயர் சிலரைச் "செத்த சேனாபதி யார்" என்று அவர் பேரைக்கேட்டு மகாதுக்கித்து, மகா சாமர்த்தியத்துடன் யுத்தம்பண்ணிச்செத்துவிழுந்தார் என்று சிலாகித்துப்பேசினார்.

கிளங்கோச் சண்டையில் ஆங்கிலேயர் செயமடைந்தாரென்று எங்கிலாந்துக்குத் தந்திமாத்திரம் நம் விகடகவி ராய்டர் அடித்தார்; அது செயமன்று; ஆனால், அந்தத் தந்தியைக் கேட்டுவிட்டு, கிளங்கோவில் ஆங்கிலேயரின் படையை நடத்தின வீரன் காயம்பட்டுக் கீழேவிழுந்தது தெரியாமல் காயம்பட்டவரின் மனைவி, உங்கள் செயத்துக்காக உங்களை மெய்ச்சுக்கொள்கிறேன் (congratul-

ate) என்றுதந்தி அடித்தார்; தந்திவந்துசேருமுன் இவர் போவர்பாளையத்தில் மரணமடைந்து கிடந்தார். அதை இந்த மகானான ஜூபார்ட் வாங்கிப்பிரித்துப் பார்த்து மிகவியாகூலத் துடன் "ஐயோ! ஆங்கிலேயர் தெரியாமல் இந்தயுத்தத்தில் தலையிட்டுக் கொண்டார்கள். இந்தமாதிரி எத்தனை பெரிய மனுஷர்கள் இன்னும் பிராணனைவிட வேண்டுமோ? தெரியவில்லை" என்று பரிதபித்தார்.

இவர் தம் தாடியைப் பார்த்து பார்த்துச் சந்தோஷத்துடன் கர்வப் படுவாராம். இவர் அமெரிக்கா ஐக்கியநாடுகளில் 35, 36-வருஷங்களுக்குமுன் நடந்த நாட்டார் யுத்தத்தில் (Civil war) இருந்துசண்டை போட்டுவந்ததாகச் சொல்லப்படுகிறது. அது வாஸ்தவமாயிருக்கும் பட்சத்தில் அந்த யுத்தத்தில் தமக்குவந்த அனுபவமும் இந்த யுத்தத்தில் ஒரு உதவியாய்த் தானிருந்திருக்கவேண்டும். அந்த நாட்டார்யுத்தத்தில் ஜூபார்ட் என்று ஒரு படைத்தலைவரிருந்து வந்தாராம் (நம்வரில் மதோபதேசம் பண்ணும் கர்னல் ஆல்காட்டும் அந்த யுத்தத்தில் இருந்தவர்தான். ஆகவே, அவருக்குக் கர்னல் என்று ஒரு படைத்தலைவனுக்குரிய பட்டமிருக்கிறது); இவர் அந்த ஜூபார்ட்டாய்த்தானிருக்கலாம்.

ஜூபார்ட் இறக்குமுன் தமக்குப் பதிலாய்ப் போதா என்னும் தம் கீழ் உத்தியோகஸ்தரைப் போவர் படைகளுக்கெல்லாம் தலைவராக்கும்படிக் குருகருக்குச் சிபாரிசு செய்தாராம்; இந்தப்



போதாவும் கிராஞ்சேயும் ஸ்பியன்காப் சண்டையில் படையை நடத்தினார்கள்; இவர் அடிக்கடி சொஸ்தமில்லாமல் படுத்துக் கொண்டுவிடுவது வழக்க முண்டு; அப்போது, ஷாக் பர்க்கர் என்று ஒரு பெரிய மனுஷரான போவர் தமக்குப் பதிலாய் வேலைபார்த்துவருவதுண்டு; ஆனால், அந்தப் போவருக்குப் பேருக்கு மாத்திரம் வேலையே ஒழிய நிஜமாய், கிராஞ்சேக்கு மாகர்ஸ்பான்டனில் புத்திசொன்ன பிரான்சியரும் இன்னும் இரண்டு பிராஞ்சியருந்தான் படைத்தலைமை நடத்திவந்தார்கள்.

இவர் செத்தபிற்பாடு ஆங்கிலேயர் வெகு தாய் யுத்தம் நின்று போமென்று பார்த்தார்கள்! ஏனென்றால், போவர்படையை நடத்துவாரில்லையாம்! அதுவும் பொய்யாயிற்று. அவருக்கும் திறமான சேனாபதித்தலைவர் ஒருவர் வந்தார். அவர் திறத்தைக் கடவுளைமெச்சவேண்டும்; நம்மால், மானவர்களால் மனோவாக்குக்காயம் இம்மூன்றினும் அளவிடமுடியாது.

இந்த ஜூபார்ட்டான மகான் வெகு அதிஷ்டவானானதினால் தக்ஷிணாயனத்தில் மரணமடையாமல் உத்திராயனத்தில் மரணமடைந்தார். பாரதயுத்தத்தில் பீஷ்மாசாரியார் தக்ஷிணாயனத்தில் பிராணன் விடவேண்டியிருந்தது; தம்மனோபீஷ்டப்படி உத்திராயனம் வரையில் உயிர்விடாமல் பாரதயுத்தமெல்லாம், அம்பால் கட்டின கட்டில் படுத்திருந்து (சாதாரணக்கூடு யுத்தவீரர்களுக்

குதவாது)வேடிக்கைபார்த்திருந்தார். அதுபோல தக்ஷிணாயனத்தில் பல தடவை பிராண ஹானியாய் நோவுபட்டு வந்தபோதிலும் ஈச்சுர கடாக்ஷத்தால் அப்போதெல்லாம் உயிர் போகாமல் உத்திராயனத்தில் தந்நாடு சுகமே தானாட்சி யிழக்காமல் இருக்கும்போதே, கிழவரான க்ரூகர் ஆங்கிலேயருக்கு இன்னும் வலிமை காட்டிக் கொண்டிருக்கும்போதே, சுகமே, தன்னிஷ்டப் பிரகாரம் உயிர்விட்டது மகா புண்ணியமான விஷயம். இவருக்குச்சாலோக்கியம், சாமீப்பியம், சாரூப்பியம், சாயுஜ்ஜியம் என்ற நான்கு பதவிகளில் சாயுஜ்ஜியம் தப்பாது. மறு ஜனனமற்றுப் போவதில் சந்தேகத் தடையில்லை. அவ்வளவு மகான், அவ்வளவு சத்தியவந்தர் சத்தியஸந்தர், அவ்வளவு வணக்கமுடையவர், அவ்வளவு கிரஹஸ்தர்.

ஒரு ஆங்கிலேயப் பெண்பிள்ளை டிரான்ஸ்வாலில் 1880-ம் ஆண்டில் வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்தாள்; அவள்:—போவர்கள் வெகு தந்திரசாலிகள், வெகுமந்தமானவர்கள்; போவர்ப் பெண் பிள்ளைகள் வெகு ஒல்லியாய்மெலிந்திருப்பார்கள். ஆனால், கிழவிகள் மாத்திரம் கொஞ்சம் உப்பினாற்போலக் காணப்படுவார்கள். இப்பெண்கள் ஏறக்குறைய எல்லாரும் வெகு சலிப்புள்ள முகம் படைத்தவர்களாய்த்தானிருப்பார்கள்; சந்தோஷ முகத்துடன் இருப்பதுவெகு வெகுதுர்லபம்; இப்பெண்கள் தாம் பிறர் விஷயங்களில் தலையிடவும் அவற்றைத் தெரிந்து கொள்ளவும்வெகு ஆசைபிடித்தவர்கள்.என்னை ஒருபோவர்க்கிழவி உனக்குப் பாங்கியில் முதல் இருக்கும்போது இன்னும் ஏன் வியாபாரம் பண்ணுகிறாய் என்று அதிசயமாய்க் கேட்டாள்; எனக்கு முதல் இருக்கிறது இந்தப் பெண்பிள்ளைக்கு எப்படித் தெரியவந்ததென்றால், கொஞ்ச நாழிகைக்கு முன் லண்டனில் ஒரு நிதியில் என்பேரில் இருந்த பாக்கிக் கையிருப்புமொத்தம் என்னவென்று கேட்டு ஒரு தந்தியடித்திருந்தேன்; அந்தத்தந்தி எப்படியோ இந்தப் பெண்பிள்ளைக்கு எட்டிப் போயிற்று. இப்படித்தான் பிறர் விஷயங்களில் தலையிட்டு வருவது போவர்ப் பெண்மக்களுக்கு வழக்கம். இப்படிப் பிரிடோரியாவில் நான் வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்த நாளில் ஒரு நாள் அந்தவூரண்டை அதேவருஷத்தில்ஜூபார்ட் என்ற பயிர்ச்செலவுப்போவர் ஒருவரைப்பார்த்தேன்; இந்த ஜூபார்ட் இந்தப் போரில் சேனாபதித் தலைவராய் இருப்பவரோ என்னமோ தெரியாது; அவர்ஏராளம்பெருத்த கறுப்புமயிர் படைத்த ஒருபெரிய போவராயிருந்தார்; அவர்தாடி குட்டையாய் முறுக்குக் (stiff)கொண்டிருந்தது; கடைவாய் எலும்பு நன்றாய் உயர்ந்து காணப்பட்டன; அவர் கண்கள், அப்போது அவர் வெகு ஆவலாயிருந்ததாகக் காட்டின;—என்று 1899-ம் ௵ நவம்பர்௴ ஒரு பத்திரிகைக்கு எழுதியிருந்தாள். பிறகு அவர் அந்தஅம்மாளை "அம்மா! பிரிடோரியாவிலிருந்து ஏதாவது சமாசாரமுண்டா?"

என்று கேட்டார்; அந்தம்மாள் உள்ளசங்கதிகளை எடுத்துச்சொன்னாள். அப்போது, உங்கள் துரைத்தனத்தார் எங்கள் நாட்டு அரசுழியுங் கூடங்களை (public offices) விட்டுவிட்டுப் போகமாட்டார்களா? நீ அப்படி ஏதாவது நினைக்கிறாயா? என்றுகேட்டார்.

ஆங்கிலேயப் பெண்பிள்ளை:—எங்கள் துரைத்தனச் சங்கதிகள் எனக்குக் கிட்டுவதில்லை; ஆனாலும் துரைத்தனத்தார் அப்படி விட்டுவிடுவார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை.

ஜூபார்ட்:—(வெகு குரூரமாய்) வருகிற வியாழக்கிழமை பிரிடோரியாத் தெருக்களெல்லாம் இரத்தவெள்ளமாய் ஓடப்போகிறது, பார்! பிரிடோரியாவில் சிந்தும் இரத்தம் ஆங்கிலேயர்மேல் நாங்கள் பழிவாங்குவது போலிருக்கும். அதைத் தெய்வமும் கண்ணால்பார்த்துக்கொண்டிருக்கும். (இவர் இப்படிக் குரோதமாய்ச் சொல்லும்போது உடம்பெல்லாம் ஓடவட என்று நடுநடுங்கிக் குலுங்கிற்று.)

அவர் பிறகு அந்தம்மாளின் குதிரையின் கழுத்தின்மேல் கையைப்போட்டார். போட்டபோது அந்தம்மாள் அவரைப் பார்த்தாள். அப்போது அவர்பார்வை அவர் சண்டையில் வெகு இரணகளம் பண்ணுபவர் போலக் காணப்பட்டது; அந்தம்மாளும் உடம் பெல்லாம் நடுங்கிப் போனாள்.



ஜூபார்ட்:—(மறுப்படியும்) ஆனால் எங்கள் தேசத்தை எங்களுக்குத் திரும்பிக் கொடுத்து விடுவார் என்று நீ நம்பவில்லை; அப்படியானால் நாங்கள் சண்டைதான் போடுவோம்; இந்த நாட்டிலிருந்து நாங்கள் உங்களைத் துரத்தியே போடுவோம்; உங்கள் நாட்டாரில் ஒருவராவது உயிர்பிழைப்பாரென்று நீ நினைக்க வேண்டாம்; உங்கள் இரத்தம் வருகிற வியாழக்கிழமைதினம் ஜலப்பிரவாயமாய் வெள்ளமோடப் போகிறது, பார்! நாங்கள் எல்லாரையும் கொல்லப்போகிறோம்—உங்களெல்லாரையும்—ஒருவர் பாக்கியில்லாமல்—எங்கே உங்கள் சேனை?

ஆங்கிலேயப்பெண்பிள்ளை:— ஐயா! நீங்கள் சொல்வது சுத்தப்பிசகு; (இப்படி இவள் சொல்லவே அவர் முகமெல்லாம் சிவந்துபோயிற்று. கண்கள் இரண்டும் இரத்தம் குழம்பின.)

ஜூபார்ட்:—நீ வெறும் பொய் சொல்லுகிறாய், அதுநன்றாய் எனக்குத் தெரியும். இதோ இருக்கிறது, உன்வழி; ஓடு!

ஆங்கிலேயப்பெண்பிள்ளை:— ஐயா! நானே துரைத்தனத்தாரன்று.

ஜூபார்ட்:— நல்லது, சரிதான்; ரொம்பவந்தனம், உங்களுக்கு. (இப்படிக் கடையில்இருவரும் வெகு மரியாதையாயே ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து போனார்கள்.)

இவர் இவ்வாறு தேசாபிமானமாய்ப் பேசின பேச்சையும், இவரைப்பற்றி மேல் சொல்லியி

ருக்கும் விவரங்களையும் இந்த ஆங்கிலேயப்பெண் பிள்ளையின்படி இப்போது சொன்ன விவரங்களையும் பார்த்தால், இந்தப் போவர் யுத்தத்தில் போவர்ச்சேனாபதித்தலைவராயிருந்த ஜுபார்ட் தான் 1880-ம் வருஷத்தில் இவ்வாறு பேசினாரென்று தோன்றுகிறது.

இந்த ஜுபார்ட்டின் மனைவியார் தம்புருஷர் இறந்து போனபிறகு பிரிடோரியாவிலும்சுற்றுப் பக்கங்களிலும் ஆங்கிலேயர்க் கிணங்கக் குடிவாழ்ந்துவந்தார்; தம் கணவர் இறந்து போன பிறகு இந்தம்மாளுடைய பேச்சே வெளிக்கிளம்பவில்லை. ஒருதரம் மாத்திரம், ஆங்கிலேயர் போவர்களை ஒன்று திரட்டிக் கூடாரங்களில் அடைத்து வைத்திருந்த பாளையங்களைப்பற்றி ஒரு கடிதம் பிரிடோரியாவிலிருந்துபின் கண்டபடி 1901-ம் ௵ நவம்பர்மீ 17-ம் தேதி எழுதியிருக்கிறார்; அந்தக் கடிதம் ஐரோப்பாவில் எங்கிலாந்தைத் தவிர மற்றத் தேசங்களிலுள்ள பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்தது:—இது வரையில்போவரடைக்கலக்கூடாரப் பாளையங்களைப்போய்ப்பார்க்கும்படி ஆங்கிலேயர்கள் ஒருவரைக்கூட விடவில்லை; ஆனால் நேற்று, அநேகத் தடவைமனுகொடுத்துக் கொண்ட பிறகு வெகுகஷ்டத்தோடொரு பாளையத்தைப் போய்ப்பார்க்கும்படி ஒரு உத்திரவுவாங்கிக்கொண்டேன். அங்கிருந்து இடைவிடாமல் வந்து கொண்டிருந்த அகோரமான சேதிகளைக் கேட்டுவிட்டு நானே அதைப் போய்ப்பார்க்



கலாமென்று ஆவல் கொண்டிருந்தேன். அங்கே போய்ப் பார்த்தால் நான் கேள்விப் பட்டதைக் காட்டிலும் அகோரமாய்க் கிடந்தது. மனதால் நினைக்கவும்முடியாது! அதில்குடிகள்ஈக்கள்போல, பட்டினிப்·பசித்துக் கிடந்தும், உட்காரப்படுக்கச் சரியான இருப்பிடமில்லாமலும், நோய்பிடித்தும் மாண்டுமடிந்து போனார்கள். பெண்பிள்ளைகள் குழந்தைகள் இவர்களின் நிலைமையை மனதால் நினைக்கிறதும் அசாத்தியம்! சுரமோ எங்கே பார்த்தாலும் கொளுத்திக் கொண்டிருக்கிறது. ஒரு போதுமில்லாமல் இப்போது, கோடைகாலத்தில் காலநிலைமை ஊதலாயிருக்கிறது(summer is wet);குளிர்ந்த சீறுங்காற்றடிக்கிறது;மாலைப்பொழுதிலும், பாதிராவிலும் மழை விடாமல் பெய்கிறது; டிரான்ஸ்வால் நன்றாய்த் தெரிந்தவர்களுக்கு இந்தப் பெருங்காற்றும் பெருமழையும் நன்றாய்த் தெரியும்; இந்தப். பாளையங்கள் யாவும் சரிந்த சாய்வானநிலத்தில்போடப்பட்டிருப்பதால்,மேலிருந்து வரும் மழைத்தண்ணீர் பாளையங்களிலிருக்கும் கூடாரத்துப் பக்கங்களில் அலைஅலையாய்மோதி உள்ளையெல்லாம் நனைத்து விடுகிறது; உள்ளேயிருப்பவர்கள் முழங்கால் மட்டுத்தண்ணீரில் நிற்கவேண்டியிருக்கிறபடியால் தங்கள் சாமான்கள் தட்டுமுட்டுகள்யாவற்றையும் கையிற் பிடித்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது; இல்லாவிடில், எல்லாம் வெள்ளத்தில் அடித்துக் கொண்டுபோகிற பாடாய் இருக்கிறது. வெள்ளந் தணிந்தபின் அவர்கள் அங்குலக்கணக்காய்ஆழ்ந்த

சேற்றில் இருக்கவேண்டியிருக்கிறது. இன்னும் ஒருவருஷம் போர் நீடிக்குமானால் ஒருபெண்பிள்ளையாவது குழந்தையாவது உயிருடனிருக்கார். உலகத்துக் கெல்லாம் இது தெரிந்த விஷயமே! ஆயினும் பெரும்பெரும்வல்லரசுகள்(Powers) சும்மாதூரத்தே நின்றுகொண்டுஇந்தக் கொடுங்கொலையை, இந்த அகோரவதையை வேடிக்கைபார்க்கின்றன. இதற்குமுன்னால் ஒருஆங்கிலேயகன்னிகை(Miss Hobhouse) இந்தப் பாளையங்களுக்கு வந்து அங்குஉள்ளதை உள்ளவாறுவெளியிட்டது நிஜம் பொய்யென்று கண்டு கொள்ளும்படிப் பின்னால் அனுப்பப்பட்ட மற்ற ஆங்கிலேய ஸ்திரீகள் ஆங்கிலேயத் துரைத்தனத்தை மெருகிட்டுச் செய்தி அனுப்புவார்கள். அதை ஆங்கிலேயக் குடிகள் நம்புவார்கள். அந்தச் செய்திகள் எல்லாம் வெறும் வெட்கக் கேடுதான் (Scandalous); அவ்வளவும் பொய்யாயிருக்கும். முன் சொல்லப்பட்ட கன்னிகையும் உள்ளது உள்ளபடி நன்றாய்ச்சொல்லவில்லை; அந்தக்கன்னிகை யிங்கே வந்தபோது, ஆங்கிலேயர் அப்பாளையங்களி லுள்ளவர்களைப் பட்டினிபோடும்படி இன்னும் ஏற்பாடு செய்யவில்லை. இப்படிப்பட்டினி போட்டால் வெளிப்படையாய் நியாயமாய்ச் சண்டைசெய்து பெறமுடியாதகருத்தைப் பெறலாமென்று ஆங்கிலேயர்கள் பார்க்கிறார்கள்; அதாவது எங்கள் குடிகளையெல்லாம் அடியோடு துடைத்துவிடப் பார்க்கிறார்கள். டிரான்ஸ்வாலில் உள்ள பாளையங்கள்தான் வெகு அநியாயமாய் இருக்கின்றன; எங்களுக்கு என்ன



வேண்டு மென்றாலும் இந்தப் பாளையங்களைக்காக்கும் இராசதூதர்களைக் கேட்கவேண்டி யிருக்கிறது. அரசூழியர்களுந் தக்கபடி யார் நடந்துகொள்கிறார்களோ அவர்கள்தான் அப்பாளையத்துள்ளவர்களுக்குச் சகாயமாய்ப்போகலாம்; மற்றயாராயினும் அங்கே போகக்கூடாது. எங்கள் ஆண்மக்கள் வெகு சௌரியத்துடன் போர்புரிகிறார்கள், ஒருபோதும் பணியப்போகிறதில்லை. இந்தமாதிரி அவர்களின் குடித்தனங்கள் இந்தப் பாளையங்களில் அழுகுவதைக் கேட்டுவிட்டு அவர்களுக்குத் தேகப்பொறுமை, கடைப்பிடி, தைரியம் இவையாவும் மேன்மேலும் பெருகிப் போகின்றன; கொஞ்சமேனு மவர்கள் மனந் தளரவில்லை; இன்னும் ஆங்கிலேயர்கள் பயிர்ச்செலவுக் குடிசைகளை எரித்துக்கொண்டே யிருக்கிறார்கள். காபிரிக்குடிகள் (பூர்வக்குடிகள்) அனேகாயிரம்பேர் ஆயுதம் கையிலெடுத்து ஆங்கிலேயர் படையணிகளில் நின்று போர் புரிகிறார்கள்;—என்று அந்தம்மாள் அக்கடிதத்தில் கண்டிருந்தார்.

இப்போது சமாதான மாய்விட்டதால் இனி இந்தம்மாளுக்கு ஒரு குறையு மிராது.

## 3-வது கூற்று.

# கிராஞ்ஜே.

முன் சொன்ன போவர்குணாதிசயங்களெல்லாம் கிராஞ்சே யிடத்திலேயே காணலாம்; மனுஷர்களுக்குக் கோபமிருந்தால் குணம் நல்லதாயிருக்கு மென்று சொல்வது வழக்கமுண்டு; கிராஞ்ஜே விஷயத்தில் அது பொய்யாயிற்று.

இவர் நாடகசாலையில் வரும் கொடியோன் போலஇருப்பார்; அவர் நடத்தையே கோப மூட்டும்; அகம்பாவமுள்ளவர்; பிறர்சொல்லும் ஹிதங் கேட்காதவர்; படாடோபம் செய்பவர்.

ஆளோ அவ்வளவு உயரமில்லை, சுமாராய்க் குட்டையாய்த்தா னிருப்பார். தாடிநெருக்கமாயிருக்கும், கரடு முரடானதேகம், நீர்படர்ந்த நீலக் கண்ணுண்டு; மற்றஅநேக போவர்கள்போல் யாரையும் முகத்தை நேரே பார்க்கமாட்டார்.

இவரிடத்தில் நல்லதும் கொஞ்சம் இருக்கின்றது, அவர் தமக்குக் கண் மூடித்தனமாய்த் தேசாபிமானம் பொங்கும் தைரியசாலி; முரட்டடியாய் அடிப்பார்.

கிராஞ்சே ஒரு உழவர்தான். ஆயினும்நோக்கமோ யுத்தத்தில் பிரியமுள்ள வராய்க் காணப்படுகிறது; ஆபிரிகாவின் பூர்வக் குடிகளுடன் நடந்த அநேக யுத்தங்களில் பயின்று இருக்கிறார்.

டிரான்ஸ்வாலுக்கு வடக்கே சில பூர்வக்குடிகள் ஒரு காலத்தில் கலகம் பண்ணினார்கள்; அது ஏனென்றால், அங்குள்ள போவர் கம்மிஷனர் மூன்று தரம் குடிசைவரி வசூல் பண்ணித் தின்று விட்டானாம்; இரண்டு தரத்துக்குப் பூர்வக்குடிகள் சும்மாவிருந்து மூன்றாந் தரத்துக்குக் கலகம் பண்ணினார்கள்; அப்போது கிராஞ்சே, "இந்தமாதிரிக் கம்மிஷனர் பண்ணினது பிசகுதான். ஆனால், தென்னாபிரிகாவில் ஒரு வெள்ளைக்காரன் என்ன பண்ணினாலும் பூர்வக்குடிகள் தாழ்ந்து போக வேண்டும். இல்லாவிடில், வெள்ளைக்காரப் பூண்டே தென்னாபிரிகாவில் அற்றுப் போமாகையால் இந்தமாதிரிக் கலகம் நடக்கக்கூடாது" என்று சொன்னாராம்; இதுவும் ஒரு நியாயமா? வெள்ளைக்காரப் பூண்டுகள் நசித்தால் என்ன? சுவாமிக்கு வெள்ளைக்காரனென்றும், கறுப்புக்காரனென்றும் வித்தியாசமுண்டா?

இவர் ஏழையன்று; ஆனாலும், ஒரு ஏழையைப் போலத்தான் இருந்து வந்தார். இவர்வீடு ஓடுமெத்தைபோட்ட ஒரு கற்கட்டிடம்; வழக்கம் போல முன்னால் ஒரு மண்டபமுண்டு (porch); வீடு மிகவும் அழுக்காயிருக்கும்; அதில் 5-6-அறைகள் இருந்தன; இவற்றில் இருப்பனவற்றையெல்லாம் விற்றால் 100 பவுன் தானிருக்கும், சாஸ்தியிருக்காது; இவரே குடித்தனத்துக்குப் பெரியவர்; இவரைச் சுற்றிப் பெண்டாட்டிபிள்ளை வேலைக்காரர்கள் இவர்கள் எல்லாரும் நடுநடுங்கிக் கைகட்டிக் காத்திருப்பார்கள்.



இவர் ஜான்ஸ்பர்க்குக்கு அபூர்வமாய் வருவார்; பிரிடோரியாவுக்கு அடிக்கடி வருவார்; அங்கே ஒரு சோற்றுக் கடையில் தங்குவார். தங்கின இடத்தில் மிகவும் படாடோபமாய் இருப்பார், குடியரசுச் சபையாரில் சிலருக்கு விருந்து பண்ணிவைப்பார்; எல்லாரோடும் பேசும்போது சிரிப்பு ஊரெல்லாம் கிடுகிடாய்க்கும்; ஊட்லாண்டர்களைப் பற்றிச் சிந்தித்து வேடிக்கையாய்ப் பேசும்போது சிரிப்புவயிறு அறுபட்டுப் போம்; ஆயினும், ஒரு காலத்தில் ஏழைத்தனத்தால் தம் நிலங்களை விற்க வேண்டியிருந்தபோது அந்த ஊட்லாண்டர்களண்டையே போய்ச் சிநேகிதம் பண்ணிக்கொண்டு தம் வேலையைத் தீர்த்துக்கொண்டார். கிராஞ்சேக்கு எல்லா ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களைப் பார்த்தபோதே சுட்டுப்போட இஷ்டமாம்; அப்போது "அப்பா! ஆங்கிலேயர் உயிருடன் உன் நாட்டில் வாழ்ந்தால் நாட்டுக்கு க்ஷேமமுண்டு; செத்தால் ஒன்றுமில்லை" என்று அவருக்குப் பெரியோர்கள் புத்தி சொல்லி அவர் வெறுப்பைத் தணித்து வந்தார்களாம்.

கிராஞ்சேச் சேனாபதி போவர்கள் தமக்கென்று பொறுக்கியெடுத்த படைத்தலைவர். ஜூபார்ட் அப்படியன்று; ஜூபார்ட்டுக்குச் சண்டை யுக்திமாத்திரமுண்டே ஒழிய வேறில்லை. ஜூபார்ட்டை "டச்சு ஜூபார்ட்" என்று போவர்கள் கூப்பிட்டார்கள்; அவருக்கு ஆங்கிலேய தோரணைகளுண்டென்று போவர்களுக்கு அவர்மேல் அவ்வளவு பிரீதி

யில்லை. ஜூபார்ட் குருகருக்கு விரோதி என்றும், துரைத்தன ஏற்பாடுகள் விசாலப்பட வேண்டுமென்னும் எண்ண முடையவர் என்றும், பிரிடோரியாவின் எல்லைக்குள் அந்நியர்களுடன் சம்பாஷித்து வந்த பாபி என்றும் அவர்மேல் போவர்களுக்கு அவ்வளவு நேசமில்லை.

காடு முரடும், ஒருவனுடைய சிநேகிதத்துக்கும் ஆசைப்படாதவரும், மயிரடர்ந்த புருவத்தின் கீழ்ப்பதுங்கி நிற்கும் உருக்குப்போன்ற சாம்பல் வருணமான கண்களுடையவருமான கிராஞ்சேயைத்தான், போவர்கள் சேனையாக வெளிப்பட்டால் நம்பி வெளிவருவார்கள். போவர்களோடு கிராஞ்சே அநேக இடங்களில் போயிருந்தார்; மாஜூபாவில் தாமே இருந்தார்; ஜேம்ஸன் நாடுபறித்த போதும் அவர்தான் இருந்து நாட்டைக்காப்பாற்றினார். ஊட்லாண்டர்களுடன்லாவாதேவி வைத்துக்கொண் டிருப்பதாக அவரை ஒருவரும் சந்தேகிக்கவில்லை. குடிகளின் ஏகவாக்கால் குடிகளின்சேனாதிபதியாகக் கிராஞ்சேதான் இருந்தார்; ஜூபார்ட்டைப்போல, சண்டைக்களத்தில் மிக்க தந்திரசாலிதான்; முன்யோசனை மிகவுமுண்டு; கிராஞ்சேயைப்போலச் சண்டையில்படைகளை ஒருவரும் கையாளமாட்டார், கழுவுக்குமூக்கில் வேர்க்கிறதுபோலச் சண்டைக்குத் தகுந்த இடத்தைக் கண்டுபிடிக்கச் சக்தியுண்டு; நரிக்கு வாசனையால் இரைகண்டுபிடிக்கும் சக்தியிருப்பதுபோலச் சத்துருவுக்குப் பலவீனம் எங்கே



யிருக்குமோ அதை உடனே கண்டுபிடித்து விடுவார்; ஜேம்ஸனை மயக்கிப் பிடித்தது, இந்திரசித்து மாயாயுத்தம் பண்ணினதுபோல இருந்தது; ஜேம்ஸன் டிரான்ஸ்வால் எல்லை கடந்தபோது 70 மைலுக்கு அப்புறத்தே தெற்கேகிராஞ்சே இருந்தார். இன்னம் இருவரைத் தமக் குதவியாக இட்டுக் கொண்டார்; ஆனால், கிராஞ்சேதான் மிகவும் ஆழ்ந்த குளிர்ந்தமனதுடன் சண்டையை நடத்தினார்; கிராஞ்சேயினிடத்தில் எல்லாப்போவரையும் போல வேடர் வேட்டையாடும் குணமிருந்தது; கிராஞ்சேயைப்போல ஒருவருக்கும் தம் எதிரியை அவ்வளவு யுக்தியாய்த் திரட்டிக்கூட்டி ஒருபக்கத்தில் ஒதுக்கும் சாமர்த்தியம் இருக்காது; ஜேம்ஸன் போவரைத் தாக்கின மறுநாள் இராத்திரி எல்லாம் ஜேம்ஸனைச் சுடுகாட்டுக்கு விரட்டிக் கொண்டே (hustling) போனார்; ஜேம்ஸனே நித்திரையாகாரமில்லாமல் ஆடுபோல ஊமையாய் ஓடினார்; விடிந்ததோ இல்லையோ, போவர்கள் தங்கள் துப்பாக்கிகளை ஜேம்ஸன் மேலும் அவர் படையின்மேலும் சுட்டுத்தீட்டத்தொடங்கினார்கள்; ஒன்றாவது குறிதப்பவில்லை; அவர்படையாளிகள் ஒருரவைக்குஒருவனாய்விழுந்தனர்; இருட்டிலேயே போவர்களுக்குச் சண்டையில் கெலிப்புவந்துவிட்டதென்னலாம்போலிருந்தது; முட்டாளான ஜேம்ஸன்சண்டையின்னமுடிய வில்லைஎன்று நினைத்துக் கொண்டு, தாம் தோல்வியடையத் தம்மால் கூடிய தப்புக்களெல்லாம் செய்து கொண்டே போவர்கள் பின்வரத் தாம் முன்போனார்; கிராஞ்சே, ஜேம்

ஸனும் அவர் படையும் தமக்கு நூறு கஜத்துக்குள், கிட்ட வருகிறவரையில் பொறுப்பாய்க் காத்திருந்தார்; நூறுகஜ தூரத்துக்குள் வந்தபிற்பாடு தான் கிராஞ்சே சுடத்தொடங்கினார்; ஜேம்ஸனுக்குச் சாமர்த்தியமிருந்தால் அந்தராத்திரியே இருட்டில் தப்பித்துக்கொண்டு போயிருக்கலாம்; இராத்திரி சில்லரைச் சண்டையில் கிராஞ்சேயின் குமாரனுக்குப் பெருத்தகாயம் பட்டது. அந்தச்சமயத்தில் சண்டையை விட்டுவிட்டுத் தம் பிள்ளையை அசலூருக்குக் கொண்டுபோய் ஒரு வைத்தியரண்டை விட்டுத் திரும்பினார்; அன்றுமுதல் கிரிஸ்துவ மரணக்குறிதரித்த சிவப்புச் சிப்பாய்களைத் (Red Cross) திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை; அச்சிப்பாய்களுக்கு ஒரு தீங்காவது தாமும் செய்யமாட்டார்; தம் படைகளையும் செய்யவிடமாட்டார்; இப்படித் தம் பிள்ளையை வைத்தியரண்டைக் கொண்டு போனபோது யாரோ பிற்பாடு தாமில்லாத காலத்தில் சண்டையில் தப்புபண்ணிவிட்டார்கள். போவர்களின் பக்கவாட்டாய் ஜேம்ஸன் தமக்குத் தெரியாமலே வந்துவிட்டிருந்தார்; அந்தச்சமயத்தில் ஜேம்ஸனுக்கு இது நல்லசமயம் என்று தெரிந்திருந்தால் தப்பித்துக்கொண்டிருப்பார்; ஆனால் ஜேம்ஸன் அது அறிந்தாரன்று. அதற்குள் கிராஞ்சேயும் வந்துவிட்டார்; தப்பையுந் திருத்திவிட்டார்; ஜேம்ஸனையும் நன்றாய் மாட்டிவிட்டார்; அந்தப்பனிமூடின ராத்திரி கிராஞ்சேயைப் போவர்கள் தெய்வமென்றே நினைத்தார்கள்; ஆனாலும், இந்தப்போவர்களுக்குத் தங்கள் இஷ்டத்தை வெளியிடத்தெரி



கிறதில்லை; அவ்வளவு நாட்டுப்புறத்தன்மை போவர்களுக்குள் மேலிட்டிருக்கிறது; போவர்கள் அமெரிக்கர்களைப்போலவும் ஆங்கிலேயரைப்போலவும் அவ்வளவு நன்றியுள்ளவர்களன்று; சண்டைக்குப் பிற்பாடு கிராஞ்சே பலநாள்கழித்துப் பிரிடோரியாவில் கோயில்தெருவே போனார்; இவர்போனது, ஒரு நாட்டுமட்டத்தின்மேல்; ஒருவரும் இவருக்காகத் தொப்பியைத் தொட்டுக்கூட இல்லை; இவர்போகிறாரே என்று கூப்பிடவுமில்லை; ஆயினும், இவர் போவர்களுக்குள் சேனாதிபதிக் கிராஞ்சே என்று சொல்லப்பட்டு வந்தார்; இந்த மரியாதை அவருக்கு இருந்தபடியால் போவர்கள் ஏதோ அவரிடத்தில் ஒரு பெருமையிருக்கிறதென்று எண்ணினதாகத் தெரிகிறது. மற்றப் படைத்தலைவர்களுக்குச் சேனாதிபதி என்று அவரவர் பேருக்கு முன்னால் போவர்கள் பட்டங்கொடுத்துப் பேசுகிறதில்லை; அவருக்குத் தனியே, போவர்களுக்குள் ஒரு அந்தஸ்திருந்தாற்போலத் தோன்றுகிறது. இந்தச்சண்டையில் செயித்ததற்காகக் குடியரசுச்சபையார்கூட அவருக்கு வந்தனம் பண்ணவில்லை; ஏனென்றால் அவர் ஒரு குடியரசில்பெரிய குடித்தனக்காரர், அவர் படையெடுத்து வந்த சத்துருவை எதிர்த்துத் துரத்தவேண்டியது அவர் கடமை. அவர் அப்படிச் செய்யில்லாதுபோனால் அவரை எல்லாரும் தூற்றியிருப்பார்கள். பிரிடோரியாவுக்கு இவர் சண்டையில் செயித்துப் போனபோது துரைத்தனத்தார் ஒருமரியாதையும் செய்து இவரை வரவேற்கவில்லை: இவர்க்குவிருந்துமில்லை.

இந்தச்சண்டையால்தம்பிள்ளைக்குக்காயம்பட்டது
தான் அவருக்கு லாபம்கிடைத்தது. சண்டைக்கு
முன்னும் பின்னும் அதே கிராஞ்சேதான், ஒருவித்
தியாசமுமில்லை; இச்சண்டைக்குப் பிறகு துரைத்
தனத்தார் அவருக்கு ஒருசம்பளம்கொடுத்து வந்
தார்; சம்பளம்வாங்கினாரேயன்றி ஆள்மாறவில்லை;
க்ருகருக்கு இவர் ஒரு சினேகிதர்என்று சொல்லப்
பட்டார்; ஆனால், க்ருகருக்குக்கிராஞ்சேயும்ஜூபார்ட்
டும் ஒரே மாதிரியாய் இஷ்டமில்லாதவர்களாய்த்
தானிருந்தார்கள்; கிம்பர்லியில் முற்றுகை தம்
மிஷ்டப்பிரகாரமேநடத்திவந்தார். க்ருகர், ஜூபார்ட்
இவர்கள்வார்த்தைகளைக்கொஞ்சமேனும்கவனிக்
கவில்லை. வேட்டைக்காரன்போலத்தான் நடந்து
கொள்வார்; இவருக்குப் பீரங்கிகள்மே லிஷ்ட
மில்லை; ஜேம்ஸனுடன் நடந்தசண்டைக்குப் பிறகு
துரைத்தனப் பீரங்கிகள் யுத்தகளத்துக்கு வரப்
பார்த்துச் சிரித்தார்; ஜேம்ஸன் பணிந்து கிராஞ்சே
கையில் அகப்படுவதற்கு முன்னால் "நான் உங்க
ளுக்குஒருஅபயமும்தரமாட்டேன்" என்றுசொன்
னபிறகுதான் ஜேம்ஸன் பணிவுக்கு ஒப்புக்கொண்
டார்; இந்தவிஷயத்தில் டிரான்ஸ்வால் சட்டம் மிக
வும் கச்சிதமானது. குடிஅரசன் உத்திரவில்லாமல்
யாரும் ஒன்றும் செய்யக்கூடாது. கிராஞ்சேயின்
கடமை எதிரியைச் சிறைப்படுத்த வேண்டியது;
சிறையாளிகளைக் கைபாளவேண்டியவர்கள், தமக்
குப் பெரியோரான துரைத்தன உத்தியோகஸ்தர்
கள். இவர், க்ருகருக்கு விரோதமாய்க் குடியரசன்
வேலைக்குப்போட்டி போடுவாரென்று எல்லாரும்



நினைத்தார்கள்; ஆனால், இவருக்குக் குடியரசன்
வேலைமேல் கண்ணுமில்லை யாசையுமில்லை; வே
றொன்றின்மேல் அவருக்கு ஆசை:—ஏனென்றால்
பிரிட்டோரியாவில் ஒரு குடியரசனாய் அடைத்துக்
கிடப்பதுமிகவும்அவருக்கு வெறுப்பாயிருந்தது;
அவர் மைதானத்தில் பிறந்து வளர்ந்தவர்; கையில்
துப்பாக்கி எடுத்து வேடன்போல அங்கேயே;
தான்பிறந்த வட்டவெளியிலேயே உயிர்விட அவ
ருக்கு மிகவும் இஷ்டமிருந்தது.

இவ் தாடியைப் பார்த்தால், டிரான்ஸ்
வால் குடியரசின் ஜனங்கள் ஏதோ ஒரு விசேஷ
மான தாடிவைப்பது போலத் தோன்றும்; இவர்
உடம்பு கொஞ்சம் கரடுமுரடா யிருந்தபோதி
லும் மெலிந்ததேகம்போலக் காணப்படும்; இந்தத்
தாடியோடு கூட அவர் மூஞ்சியைப் பார்த்
தால் அது மிகவும் ரம்மியமாய்க்காணப்படும்; யுத்த
வீரன் அல்லது நரஹத்திக்காரன் மூஞ்சிபோலி
ராது; ஆனால், யாதொரு ஹிம்சைக்கும் இவர்
இடங்கொடுக்காத ஏற்பாடுகளுள்ளவர் என்று
காணப்படும்; கிராஞ்சேயின் மூஞ்சியைப் பார்த்
தால் ஆதி கிறிஸ்துவே பிரசன்னமானார் போலத்
தோன்றும்; அவர்முகத்தின் களையோ அன்பு அதி
கப்பட்டு விசனமடைந்தாற்போல இருக்கும்; உல
கத்தாரோடு ஒத்துவாழ்ந்து அமரிக்கையாயிப
அமிர்தம் சாப்பிட இஷ்டப்பட்டவர்போல் இருப்
பார்; ஒரு மனுஷன் மாசில்லாது வாழ்ந்து வாங்
கின கடனைத் தப்பாமல் கொடுத்து இராத்திரி
நிசிக்கப்புறம் படுக்கைக்குப்போனால் எப்படியோ
அப்படி இருப்பார்.

கிராஞ்சேயானவர் சந்தோஷ முகத்துடன் கூடின ஒரு குள்ளமான மனுஷர், யுத்தகளத்தில் காளிநர்த்தனம் போல நர்த்தனம் பண்ணுவார். மிகவும் வேடிக்கையாய்ப் பேசப்பட்டவர்; மந்தமாய்ப் பொறுமையாய் இருப்பவர்; கிரஹஸ்தாச்சிரமத்துக்குரிய தர்மங்கள் செய்பவர்; ஆங்கிலேயர் மத்தியில் இந்தக் கிராஞ்சே பிறந்து வளர்ந்திருந்தால், இவரை யுத்தவீரனென்று ஒரு ஆங்கிலேயரும் சொல்ல மாட்டார்கள்; ஏதோ தாடி வளர்ந்த ஒரு பெரிய குடித்தனக்காரர் என்றே பேர்வந்திருக்கும்; ஞாயிற்றுக்கிழமைதினம் பள்ளிக்கூடம் வைத்துக்கொண்டு பையன்களுக்கு வாசிப்பு சொல்லிக்கொடுக்கும் ஒரு சாதாரண உபாத்தியாயர் என்றுதான் இவருக்கு எங்கிலாந்தில் பேர்வந்திருக்கும்; ஜூபார்ட்டைப்போல இவரும் பிராஞ்சுக்கார வம்சத்தில் பிறந்தவர்தான்.

இவருக்குப் பிரிடோரியாவுக்குப் பக்கத்தில் 12,000 ஏகரா நிலங்களிருக்கின்றன. ஜூபார்ட் மகாயுக்திசாலியாம்; லேடிஸ்மித்தில் அடைபட்ட ஆங்கிலேயச் சேனாபதித்தலைவர் ஆபிரிகாவுக்குப் புறப்பட்டபோது, எங்கிலாந்தில் ஏகசக்கிராதிபத்தியத்துக்குச் சேனாபதியானவர் "ஜூபார்ட் அங்கேயிருக்கிறார், அவர் மகாதந்திரசாலி, பத்திரமாயிரு" என்று சொன்னாராம். கிராஞ்சே அப்படியன்று, வெட்டு ஒன்றும் துண்டு இரண்டுமாய்க் கண்டிப்பாய்ப் பேசுகிறவர்; மரியாதையுள்ளவர்; மிகவும் அசகாய சூரர்; போவர்கள் எல்லாரும் ஒரு விதத்தில் தந்திரசாலிகளெனவே சொல்லவேண்டும்; ஏனென்றால், அவர்கள் நேர ஆவேசத்துடன் சண்டை பண்ணுவதில்லை.

## 4-வது கூற்று.

# கிராஞ்ஜே ஓடி எதிர்த்தது.

ராபர்ட்ஸ் பிரபு சேனாதிபதியாய் வந்து தென்னாபிரிகாவில் இறங்கினவுடன், இந்தமூன்று முற்றுகைகளையும் (மேப்கிங், கிம்பர்லி, லேடிஸ்மித்) விடுவிக்கச் சர்வப் பிரயத்தினமும் செய்து வந்தார். கடைசியாய், ஆரஞ்சு நாட்டைப் படையெடுத்துச் சென்றால்தான் இந்த ஊர்களுக்கு விடுதலையுண்டாகுமென்று நம்பி அப்படியே செய்யத் தொடங்கினார்.

இப்படித் தொடங்கவே, கிராஞ்சே மாகர்ஸ்பான்டினிலிருந்து போக்குவரத்துக்கு ஆங்கிலேயர் படைகள் தடைகளாயிருந்தது கண்டு வியாழக்கிழமைராத்திரி (1900-ம் வருஷம் பிப்பிரவரி 15-ந் தேதி) தம்படைகளை இரண்டு அணிகளாய்ப் பிரித்து ஒன்றைவடக்கே அதிகப்பளு இல்லாமல் போகச்சொல்லித் தாம் மற்றப் படைகளையும் சாமான்களையும் கொண்டு ஆரஞ்சுநாட்டைப் பார்க்கவரத்தலைப்பட்டார்; வடக்கேபோனபடையாளிகள் பீரங்கிகளைப்பலிகொடுத்துவிட்டு ஓடிப் பிழைத்தார்கள். கிராஞ்சேயின் கருத்துப்ளும்பான்டீன் போகவேண்டுமென்றும்.

ஆரஞ்சு நாட்டுக்குத் தெற்கே, கேப்காலனியில் இருந்த ஒருபடைத்தலைவனை ராபர்ட்ஸ் பிரபு

"கேப்காலனியில் என்ன ஆபத்துசம்பவித்தாலும் சம்பவிக்கட்டும்; நீ குறுக்கடியாய் மாகர்ஸ்பான்டீனைப் பார்க்கப்போ" என்று உத்திரவிட்டார்; அவர் அப்படியே புறப்பட்டார். புறப்பட்டார் என்றசேதிதெரிந்த உடன் அங்கிருந்தபிராஞ்சுக்காரன் ஒருவன் "ஐயா! கிராஞ்ஜே! ஆங்கிலேயர் இனி இருப்புப்பாதை வழியாய் வரமாட்டார்கள்; குறுக்கேதான், சாலைமார்க்கமாய் வருவார்கள். நீங்கள் இங்கே இல்லாமல் உங்களுடைய சேனையைப் பத்திரமான இடத்துக்குக் கொண்டுபோங்கள்" என்று அவருக்கு முன்ஜாக்கிரதை சொன்னதற்கு "ஐயா! நான் சண்டைகளில்சம்பூர்ணமான சமர்த்தனாய் விட்டபோது, நீங்கள் உங்கள் தாயார் கர்ப்பத்தில் இருந்திருப்பீர்கள். எனக்கு நீங்கள் யுக்தி சொல்லிக் கொடுக்கவேண்டாம்; ஆங்லேயர் இருப்புப் பாதையை விட்டு வேறே வழிவரமாட்டார்" என்று கோபமாய்ச் சொன்னாராம். அப்போது அவர் உடனே அவருடையசன்னிதானத்தை விட்டுவேறே போய்விட்டார். இந்தப் பிராஞ்சுக்காரர்தான் தூகலாசீ சண்டையில் போவர் பக்கம் இருந்து சண்டையை நடத்தினார், மகாசமர்த்தர்; பிராஞ்சுதேசத்தில் இவருக்குச் சாரிகை (Pension) வந்துகொண்டு இருந்ததாம். இப்படிப்பட்ட புத்திமதியைக் கேட்டிருந்தால் அவருக்கு ஒரு கஷ்டமும் வந்திருக்காது. விநாச காலே விபரீத புத்தி என்றாற் போல இவருக்கு ஆபத்துக்காலத்துக்குத்தான் இந்தமாதிரி புத்தி தோன்றிற்று.

## கிராஞ்ஜே ஓடி எதிர்த்தது.

ஆங்கிலேயர் கேப்காலனியிலிருந்து ஓடுஓடு என்று ஓடி மாகர்ஸ்பான்டீனுக்குப் போம் வழியில் மாடர் நதியண்டை வந்தார்கள்; சேனைகள் களைத்துப் போயின; வியாதி பிடுங்கித் தின்றது; ஆங்கிலேயர் போம்வழியெல்லாம் ஊர் ஊராய்ப் பிடித்துக் கொண்டே போனார்கள்:— கிராஞ்சே ப்ளும்பான்டீனைப் பார்க்கவந்துகொண்டிருக்கிறார் என்றசெய்தி கேட்டவுடன், அந்த வெளிகளில் இருந்த ஆங்கிலேயச் சேனைத் தலைவர்களெல்லாரும் இரண்டு பேருக்குப் பேர் ஒவ்வொரு பக்கமாய்ப் போய்க் கிராஞ்சேயைக் கவிந்து கொண்டார்கள்; இத்தனைபேர் பின்னோடு 50 பீரங்கிகள் வந்தன.

இந்தச் சங்கதியைக் கிராஞ்சே தெரிந்து கொண்டு வாயுவேகமாய் மனோவேகமாய் வந்து கொண்டிருந்தார். அப்போது மாடர்நதியண்டை அவரும் வந்து சேர்ந்தார்; வெள்ளிக்கிழமைக் காலையில், போவர்கள் ஆங்கிலேயரைத்தாண்டியே தென் கிழக்கே போய்விட்டார்கள். இந்தச் சங்கதி ஆங்கிலேய வேவுகாரர்களுக்குத் தெரிந்தது; உடனே தம் படைத் தலைவருக்குச் சொல்ல, உடனே ஒரு ஆங்கிலேய அணியானது போவரின் பின் படைகளைத் தாக்கப் போயின; அப்போது கிராஞ்சேயின் பின்படை 2,000 பேர்வர்கள் எதிர்த்து நின்றார்கள்; பின்னணி இவ்வாறு ஆங்கிலேயரைத் தடுக்கக் கிராஞ்சேயின் முன்னணி ஓடிக் கொண்டேயிருந்தது; ஆனாலும், ஆங்கிலே

யர் தருந்தபடிப் படைகளை அணி அணியாய் வகுத்துப் போவர்களின் பின்னணிகளைத் தாக்கி, முன்னணிகளை முன்போகாமல் தடுக்கினார்கள். ஆயினும், போவர்கள் முன்செல்லுவது நிறுத்த வில்லை; நதியின் தென்கரை வந்துவிட்டார்; ஆங்கிலேயர் இதுகண்டு போவர்களைத் தென்கரையில் தடுக்க அணிகளை அனுப்பித்தார்கள்; போவர்களும், வடகரைக்கு நதியைக் கடந்துகொண்டு கரைக்குவரும் ஆங்கிலேயர்மேல் நெருப்புமழை பெய்தனர். இப்படி இராத்திரிவரையில் ஒருவர் மேல் ஒருவர் குண்டு எறிந்து வந்தார்கள்; இதில் போவர்களுக்கு கனத்த சேதம்வந்திருக்கவேண்டும்; போவர் பிணங்களெல்லாம் ஆங்கிலேயர்கள் புதைத்தார்கள்; கிராஞ்சேவழியில் தங்காதுவந்துவிடவேண்டுமென்றிருந்தார்; ஆனால், தம் மனைவியார் தடுத்துத் தங்கும்படிச்செய்தார். அப்போது ஒரு குன்றில் பிணியாளிகளை வைத்து அதை ஆசுபத்திரியாக நடத்தினார்; அங்கே ஆங்கிலேயர் குண்டுகள் வந்து குவிந்தன; அப்படிச் சுடுவது கூடாது என்று ஆங்கிலேயருக்குச் சொல்லியனுப்பித்தார். அப்போது ஆங்கிலேயர் சுடாமல் நிறுத்தினார்கள்.

கிராஞ்சேயின் போவர்களோ எங்கேபார்த்தாலும் சிதறிக்காணப்பட்டார்கள்; இவர்களுடன் சுமார் 1,000 சாமான் வண்டிகள் எருதுகள் கட்டிவந்தன. இதில் குண்டுகள், பீரங்கிகள், துப்பாக்கிகள், வெடிமருந்துகள், ரொட்டி, மா, உடைகள், இன்னம் மற்றக் கருவிகள் இவை எல்லாம் இருந்தன.



ஆங்கிலேயர் ஆரஞ்சு நாடு புகுந்த உடன் ஆரஞ்சு நாட்டார்க்கு ஆங்கிலேயர் "ஆரஞ்சுநாடு நாங்கள் புகுந்ததற்குக்காரணம் இன்னதென்று உங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமல்லவா? அது இந்தச் சண்டையைச் சீக்கிரத்தில் முடிக்கத்தான். இப்படி யிருக்கும்போது, ஆரஞ்சுநாட்டார் எதிர்ப்பார்களானால் அவர்கள் தலையில் அப்படி எதிர்த்தலால் வரும் லாப நஷ்டங்கள் வந்து விழும்; யுத்தத்துக்கு முன்னால் ஆங்கிலேயர் உங்கள் நாட்டின் சினேகிதத்தைக்கோரினார்; உங்கள் குடியரசரான ஸ்டேயினுக்குந், தாம் மத்தியமாயிருக்கும் பட்சத்தில், தம் நாட்டைப் படையெடுக்காமல், தானாட்சியை எப்போதும் போல ஆங்கிலேயர்கள் தாம்நிலையாய் நிறுத்திவிடுவார்கள் என்று சொன்னார்கள்; அவர்கேட்கவில்லை; ஆனாலும் நீங்கள் ஆங்கிலேயநாடுகளை அநியாயமாயும், வேண்டுமென்றும் படையெடுத்தீர்கள்; இப்போது உங்கள்பேரில் ஆங்கிலேயருக்குயாதொரு துவேஷமும் இல்லை; கெட்ட எண்ணமும் இல்லை. இந்த யுத்தத்தால் வரும் தீங்குகள் உங்களைப் பாதிக்காமல் செய்வார்கள்; ஆகையால், இனியாகிலும் நீங்கள் எதிர்க்காமல் பணிந்து போங்கள்; அப்போது உங்கள் உயிரும் சொத்தும்நாசமாகா; ஆகாரம், விறகு, புல், தங்குமிடம் இவற்றை எப்போது ஆங்கிலேயர் உங்களைக் கேட்கிறார்

களை அப்போதெல்லாம் தடையில்லாது கொடுத்துக் கையில் காசுவாங்கிக் கொள்ளுங்கள்; நீங்கள் கொடுக்காதுபோனாலும் பலவந்தமாய் எடுத்துக் கொள்ளப்பட்டுப் பற்றுச்சீட்டு (ரசீது) ஒன்று அப்போதே கொடுக்கப்படும்; உங்களுக்கு ஏதாகிலும் அநியாயம் நடந்தால், விசாரித்து நஷ்டம் கொடுக்கப்படும்; ஆங்கிலேயரின் படைகள் உங்கள் வீடுகளில் வீணே நுழையமாட்டா; உங்களைத் தொந்திரவு பண்ணமாட்டா" என்று ஒரு விளம்பரம் போட்டுவித்தார்கள்.

மாடர்நதிக்கரையில் தம் மனைவி தங்கிப் போகலாம் என்று சொன்னதும் தவிர, சேனைகளும் ஓடிவந்த ஓட்டத்தால் நாய்போல இரைத்து இரைத்துச் சளைத்துப் போயின; ஆகையால், அங்கே தங்கும்படி நேரிட்டது; இல்லாது போனால் தங்கியேயிருக்கமாட்டார். ஞாயிற்றுக் கிழமை சாயந்திரம் ஆனவுடன் குண்டு நெருப்பு நின்று விட்டது; இருதிறத்தாரும் களைத்துப் போய்க் களைப்பாறச் சந்தோஷமடைந்தார்கள். படைகள் மத்தியானமெல்லாம் சண்டைபோட்ட இடத்திலேயே ராத்திரியும் தூங்கின; டோலிதூக்குபவர்கள் அவர்பக்கத்தில் விழுந்திருந்த பிணங்களையெல்லாம் ஒன்றாய்த் திரட்டிக் குவித்தார்கள்.

போவர்களோ, மிகவும் பிடிவாதமாய்ச் சண்டைபண்ணினார்கள். ஆங்கிலேயரோ, நாய் போலத் அவர்கள் முன்னே முன்னே போய்த்



தாக்கினார்கள். இந்தச் சண்டையைப்போல, இதுவரையில் அற்புதமானது ஒன்றும் நடக்கவில்லையாம்.

சாயந்திரத்துக்குள் ஆங்கிலேயர் எதிரியைக் கயிறுபோல சுற்றிக்கொண்டார்கள்; தப்பிக்க ஒரு சந்தும் இல்லாமல் அடைத்துவிட்டார்கள். இராத்திரி நிச்சப்தமாயிருந்தது.

இராத்திரி, சிலபோவர்கள் வெளியில்வந்து ஆங்கிலேயருடன் பேசினபோது "எங்களுக்கு இனிச் சண்டைவேண்டாம், நாங்கள் சளைத்துப் போனோம். கிராஞ்சேயைப் பணியும்படிச் சொல்லிக்கொண்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

இந்தச்சண்டையில் ஆங்கிலேயச் சேனைகளுக்கு மிகவும் தாகமாயிருந்தது. அப்போது மத்தியானம் ஒரு பெருங்காற்றுப்பெருமழை இடியுமின்னலுமாய் வந்து மழை கொட்டிற்று. அப்போது சேனைகளுக்குத் தாகமடங்கிற்று.

இந்தச் சண்டையில், கிராஞ்சேயிடத்திலிருந்து தப்பித்துக்கொண்ட போவர்கள் "போவர்களுக்குக் குதிரை அநேகம் செத்தன; எருதுகளும் செத்தன; அநேக எருதுகளை வழியில் போவர்கள் அவிழ்த்துவிட்டார்கள். மைதானங்களில் மேய்ந்துகொண்டிருந்தன" என்று பொய்ச் செய்தி கட்டிவிட்டார்கள்.

திங்கட்கிழமைக் காலையில், சத்துருக்கள் (போவர்கள்) அதே ஸ்திதியில் இருந்தார்கள்.

ஆனால், குழிகள் மாத்திரம் அதிகமாய் வெட்டிக்கொண்டிருந்தார்கள்.

போவர்கள் என்னபண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்று ஆங்கிலேயர் குன்றுகளிலேறிப் பார்த்தால், அப்போதும் அவர்கள்பேரில் போவர்கள் ரவைகளால் சுட்டார்கள். போவர்கள் ஆங்கிலேயரை "ஒரு நாள் சாவகாசம் சண்டையை நிறுத்திவைத்தால் நாங்கள் பிணங்களைப் புதைத்துக் கொள்கிறோம்" என்று கேட்டுக்கொண்டதற்கு அப்படிநிறுத்தமாட்டோமென்றார்கள். அப்போது ஒருபோவர் "அப்படிநிறுத்தாது போனால் நாங்கள் பணிந்துபோகிறோ" மென்று கிராஞ்சே சொன்னதாகச் செய்தி கொண்டு வந்தான். அப்போது கிச்சனர்பிரபு போவர்கள் பணியும்படி ஏற்பாடு செய்யப் போவர் பாளையத்தண்டை போனார். போம்போது வழியில் மற்றொருவன் "அந்தச் செய்தி சுத்தப் பொய்; கிராஞ்சேக்குப் பணியும் புத்தியே கிடையாது" என்று சொன்னான். ஆகையால், திரும்பிவந்து போவர் பாளையத்தைக் குண்டுகளால் சுட்டுப் போடும்படி கிச்சனர் பிரபு உத்திரவு பண்ணினார்.

செவ்வாய்க்கிழமையோடு மூன்று நாளாயிற்று. கிராஞ்சே படாத பாடு பட்டார். பணியும் புத்திவரவேவரவில்லை. இந்தவேளையில் கிராஞ்சேக்கு உதவி வந்துகொண்டிருந்தது.

உதவி வருகிறதென்று கிராஞ்சேக்கு டிவெட் முதலான சிலபோவர்ப்படைத் தலைவர்கள் ஆகாச



விளக்குகளால் சொன்னார்கள்:—நூகர் பிப்ரவரி 25-தேதிக்காலையில் டிவெட்டுக்குப் "'பெருஞ்சேனை உன் உதவிக்கு வந்துகொண்டிருக்கிறது' என்று கிராஞ்சேக்குச்சொல்" என்று தந்தியடித்தார்; அப்போது டிவெட் "குடியரசர் உங்களுக்கு உதவிவரும், இன்னும் சண்டையை விடாது போட்டுக்கொண்டிருக்கச்சொல்கிறார். அநேகஉதவிப்படைகள் கிட்டத்தில் வந்துகொண்டிருக்கின்றன. வந்தவுடன் வடக்கேயிருந்து கூடியசீக்கிரத்தில்ஆங்கிலேயரைத் தாக்குகிறோம்" என்று கிராஞ்சேக்குச் சொன்னார். அதற்குக் "கிராஞ்சே எனக்கு ஆகாரம் முடிந்துபோய்க்கொண்டிருக்கிறது; பாக்கி விஷயங்களில், சுவாமி தயவால் எனக்கு வடக்கே போய்விடச் சாமர்த்தியமுண்டு" என்று மறுமொழி கொடுத்தார்.

மறுநாள்காலையில் (26-ம்தேதி) "உதவி இன்றைக்காகிலும் வந்துவிடும். நாளைவரையில் சண்டையை நீடித்து வாருங்கள். ஆகாரமும் நான் உங்களுக்கு அனுப்பிக்கிறேன்" என்று டிவெட் கிராஞ்சேக்குச்சொன்னார். கிராஞ்சே "சத்துருவுக்குக் கனத்தஉதவி வந்துவிட்டது. எனக்கும் வெகுகஷ்டமாயிருக்கிறது" என்றார்; டிவெட் "உதவிச்சேனைகள் தூரத்தில் வந்துகொண்டிருப்பது எனக்குத் தெரிகிறது. என்னையே ஆங்கிலேயர் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். சத்துரு பலமாய் இருக்கிறார்கள்" என்றார்; கிராஞ்சே "நெருப்பு சகிக்கமுடியவில்லை. அநேகம்போர்

நஷ்டமானார்கள், என்னண்டை யிருக்கும் போவர்கள் அநேகர் என்னைப் பணிந்துபோம்படிச் சொல்லுகிறார்கள்" என்று பதில்பேசினார்.

இப்படிக்க்ரான்ஜே கடைசியாய்ப் பேசின பேச்சுக்களை ஆங்கிலேயர் வாசித்து "க்ரான்ஜே இன்னம் எதிர்த்துநின்றால், வீணாய் உயிர்ச்சேதம் வரும். அப்படி எதிர்த்தும் உபயோகமில்லை, க்ரான்ஜேயைச்சுற்றி 70,000 பேர் ஆங்கிலேயர் 120-பீரங்கிகளுடன் இருக்கிறார்கள்; உடனே பணியாதுபோனால், க்ரான்ஜே மனுஷர்களில் ஒருவனாவது உயிர்தப்பமாட்டான்" என்று இரண்டு சேனாதிபதிகளும் செய்திசொன்னார்கள். வாஸ்தவத்தில் 70,000 இல்லை, 20,000மாம். 120-பீரங்கிகள் இல்லை, முன்சொன்னதுபோல 50-தான்; இப்படிச் சொல்லிவிட்டு, க்ரான்ஜே பணிவதற்கு என்னென்ன சாதகங்கள் வேண்டுமோ அவையெல்லாம் க்ரான்ஜேக்குக் கொடுத்து வந்தும், க்ரான்ஜே வீராதிவீரராய்ப் பணியக் கொஞ்சமும் இஷ்டமில்லாதவரா யிருந்தார். ராபர்ட்ஸ் பிரபு இதுகண்டு கோபங்கொண்டு க்ரான்ஜேயை ஒரே அடியாய் நசுக்க முயற்சிகள் செய்தார். செவ்வாய்க்கிழமைமத்தியானம் (27௳) நதியின் தென்கரையில் அநேக பீரங்கிகளைப் பலமாய் நிறுத்தச்சொன்னார். வடகரையிலும் அப்படியே பல பீரங்கிகளையும் நிறுத்தச்சொன்னார். அப்போது ஒரு நெருப்புக்காட்சி உண்டாயிற்று, பாருங்கள்! இந்தமாதிரிமுன்னால் ஐரோப்பாவில்



ஒரே இடத்தில் (Thessaly) தான் 110 பீரங்கிகள் ஒருதடவை சுட்டனவாம். பிறபாடு கிடையவே கிடையாதாம். இப்போது 50-பீரங்கிகள் க்ரான்ஜேயைச் சுற்றிச் சுட்டன. வெடிகுண்டுகள் வெடித்து ஆகாசமெல்லாம் புகையால் நிறைந்தது. ஆங்கிலேயர் தம் குண்டுகளை ஒவ்வொரு சந்திலும், ஒவ்வொரு பொந்திலும், ஒவ்வொரு புதரிலும், ஒவ்வொரு இடுக்கிலும் பூந்துபூந்து வெடிக்கும்படிவிட்டார்கள். இந்தமாதிரிப் பீரங்கிகள் சுட்டபோது போவர்கள் துவம்சமாயிருந்திருப்பார்கள். ஆயினும், போவர்கள் வீராவேசம் கொண்டு தங்கள் பீரங்கிகளையும் சுட்டுவந்தார்கள்.

இந்தமாதிரிப் பீரங்கிகளை ஆங்கிலேயர் சுடும்போது, இதுவரையில் களைத்துப்போன ஆங்கிலேயப் படையாளிகள் சற்றுத்தூரத்தில் ஒருபக்கத்தில் படுத்துக்கவலையற்றுத் தூங்கினார்கள். நாளைக்குத் தாம்சண்டைபோடும் முறையில் தமக்குயிர்போமோ இருக்குமோ? அது வேறே யோசனை! அது வேறே சங்கதி! தற்காலத்துக்குத் தமக்கு யாதொரு தொந்திரவுமில்லாது இருந்ததே அவர்களுக்கு ஆநந்தம். அதுவே அவர்களுக்குப் பெருந்தூக்கத்தைக் கொடுத்தது. இதெல்லாம்ஆற்றங்கரையில்நடந்தது.கீழே ஆற்றுமணலில் சத்துருவாகிய போவர்கள் சுமார் 4,000 பேர் இத்தனை நெருப்புக்கும் ஒரு கூக்குரலாவது போடவில்லை. கரையில் ஆங்கிலேயர் எப்

படி நிச்சப்தத்தில் தூங்கினார்களோ அப்படியே போவர்கள் சப்தத்தில், தூங்கினதைக்காட்டிலும் பல மடங்கு நிச்சப்தமாயிருந்தார். ஒரு போவராவது வாய்திறக்கவில்லை. அவ்வளவு மௌனமாய்க் கிராஞ்சேயும் அவர் படையும் எதிர்த்து நின்றார்கள். இதுஎன்னமோ ஒரு செப்பிடுவித்தையாய்த்தானிருந்தது. ஏதோ ஒரு இட்சணி அவரிடத்தில் வந்து நெருப்பையெல்லாம் அவர் மேலும் அவர் படைமேலும் விழாமல் தடுத்து வந்தாற்போலிருந்தது.

இந்தமாதிரி, 26-ம்தேதி திங்கட்கிழமை வரையில் பல்லைக்கடித்துக்கொண்டு போவர்கள் தைரியமாய் இருந்தார்கள். போவர் பாளையமெல்லாம் குதிரையின் பிணங்களால் நாற்றமெடுத்துப்போயிற்று. அங்கே கிட்டப்போனால் நாற்றம் ஆளைத்தூக்கி அடித்தது. இந்த நாற்றத்தில்கூட போவர்கள் வாய்திறவாமல் குந்தியிருந்தார்கள். 10, 15, 20, 30, இப்படிக் கும்புகும்பாய்க் குந்தியிருந்தார்கள். ஒரு பத்துத்தப்படிக்கு (pace) ஓரிடத்தில் குதிரைகள் கும்பல் கும்பலாய்ச் செத்துக்கிடந்தன. கோவேறுகழுதைகளின் பிணங்கள் அழுகிவந்தன. ஆடுமாடுகள் நாறின. நதிவெள்ளமெடுத்தபோது, சந்துபொந்தில் தங்கியிருக்கும் தண்ணீரில் மிருகங்களின் பிணங்கள் ஊரியுப்பிமிதந்தன. இந்தப் பாளையத்தின் கதியை வாயால் சொல்லமுடியாது; அவ்வளவு அகோரமாயிருந்தது. திங்கட்கிழமை, வழக்கம்போல ஆங்கிலேயரின் நெருப்பாறு பாளையத்



தில் பாய்ந்தது. அந்த நெருப்பாற்றில் கிராஞ்சே மிதக்கும்படி நேரிட்டது. ஆற்றிருகரையிலும் சண்டைக்குழிகள் தேன்கூடுபோலக் காணப்பட்டன. இந்தமாதிரி குழிகள் முன் காலங்களில் எப்போதும் வழக்கமேயில்லை. அவை நிலத்தின் கீழ் வசிக்கும் வீடுகள்போலிருந்தன. வெடிகள் அவ்வளவாய் உள்ளே புகா. ஆகையால், குண்டுகள் நேரேவிட்டால் அந்தக் குழிக்குள் போகா. போவர்களின் முகங்கள் விசனத்தாலும், களைப்பாலும் தொங்கிப்போ யிருந்தன; முகத்தில் வெகுநாளாய்க் குடியில்லாமல் சுருசுருப்பு கிடையாது. பாளையம் நசித்தேபோயிற்று. என்ன வேண்டுமாயிருந்தது? காலவேளை போவர்கள் காப்பித்தண்ணீர் காய்த்துக்கொண்ட நெருப்பு மூலைமூலையாய் அப்படியே யிருந்தது, அவிக்கமாட்டார்கள். "இந்தப்பாழும்முற்றுகை முடிந்துபோகிறதடா" என்று கேள்விப்பட்டுத்தான் சந்தோஷத்தால் முகம் கடைசியில் களைகண்டது. போவர்கள் சிரிக்கத்தலைப்பட்டார்கள். ஒருவரை ஒருவர் பரிகாசம் பண்ணிக் கொண்டார்கள். ஆரஞ்சுநாட்டார்க்கு ஆங்கிலேயபாஷை நன்றாய்த் தெரிந்தது. அவர்களுக்கு இதுவரையில் இந்த யுத்தம் என்னமாய் முடியுமோஎன்று தெரியவே தெரியாது. இன்னதுக்காகத் தாங்கள் இந்த யுத்தத்தில் புகுந்தார்கள் என்ற எண்ணமே கிடையாது. "சத்தியமாய்த் தற்காலத்தில் தமக்கு இந்தப்பாழும் முற்றுகையில் நெருப்பின் கொடுமையில்லாமற்போயிற்று" என்று அவர்களுக்கு

மிகச் சந்தோஷமாயிற்று. ஒருபோவர் கிராஞ்சே
யைப்பார்த்துக் கையைச் சொடக்கி "அடாய்
கொடியா? உன்னைச் சுட்டாலாகாதோ" என்று
சொன்னானும்.

அந்தப்பாளையத்தில் அநேகம்பேர் பெண்
குழந்தைகள் இருந்தார்கள். இத்தனைபேர்க்கும்
காயமில்லாமலே பார்த்துவந்தார், மகா தீரரான
கிராஞ்சே; ஒரு சிறுபெண்குழந்தைக்குமாத்திரம்
ஒரு விரல் நுனியில் ஒரு நெருப்புப்பொரி பட்ட
தாம். போவர்கள் கடைசியாய்ச் சிறைப்பட்டு
ஆங்கிலேயர் பாளையத்துக்குப் போகும்போது
பெண்டாட்டி பிள்ளைகளைக் கைவிட்டுப்போக
இஷ்டம் வாராது மனந்தளர்ந்து அழுதார்கள்.
பெண்டிர்களோ புருஷன் சிறைப்பட்டானே
என்று கண்ணீர்விட்டுக் கதறினார்கள். அநேகம்
போவர்கள் 16, 17, 18-வயதுதானிருந்தார்கள்.
பாதிக்குமேலே டிரான்ஸ்வால் நாட்டார்கள்; பணி
யும்போது பீரங்கிகளைப் போவர்கள் கெடுத்து
விடுவார்களென்று ஆங்கிலேயர் நினைத்தார்கள்.
அனலப்படி நடக்கவில்லை. பாளையத்தில் மூன்று
ஆங்கிலேய இராணுவ உத்தியோகஸ்தர்களும், 9
சிப்பாய்களும் சிறைப்பட்டிருந்தார்கள். இவர்
களுக்கு ஒரு ஆழமான குழிவெட்டி அதில் ஆங்
கிலேயநெருப்பு விழாமல் பார்த்துவரப்பட்டது.
எல்லா விஷயத்திலும் இந்த ஆங்கிலேயச் சிறை
யாளிகளுக்கு ஒரு குறைச்சலும்நடக்கவில்லை. சில
பேர் போவர்கள் ஆங்கிலேயர் பீரும்பானிடினைப்



பிடித்துக்கொண்டார்களா என்று கேட்டார்கள்.
கிராஞ்சேயைக் குற்றங்கண்டுபிடித்து, "அவர்
மலையில் சண்டையாளியேயன்றித்தரையில் செவ்
வையாய்ச் சண்டைசெய்பவரன்று; வீணே எங்க
ளுக்குக் கேடு கொண்டுவந்துவிட்டார்" என்று
சில போவர்கள் சொன்னார்கள்.

சிறையாளியான போவர்கட்கு ஆங்கிலேய
ரின் பாளையத்துக்கு, அக்கரைக்குப் போங்கள்
என்று உத்திரவு பிறந்த உடனே, ஒவ்வொரு
போவரும்தான்பிடித்த துப்பாக்கியை ஒரு இடத்
தில் குப்பலாய்ப்போட்டுவிட்டுத் தனக்குவேண்
டிய சாமான்கள், சட்டி, தட்டு, கம்பளி, முத
லானவைகளை மாத்திரம் எடுத்துக்கொண்டான்.
இந்தமாதிரிப் போவர்கள் எறிந்த துப்பாக்கிகள்
அநேக இடங்களில் அநேக குப்பல்களாயின.
ஆறுவெள்ளம் வந்திருந்ததால், போவர்கள் தங்
கள் நிஜார்களைக் கழற்றிவிட்டு ஆற்றில் இறங்கி
னார்கள். இந்த ஆபத்தெல்லாம் யுத்தத்தால் வந்
தால்போலவே அவர்களுக்குத் தோன்ற இல்லை.
என்னமோ ஒரு விளையாட்டுப் (*frolic*) போல
இருந்தது. போம்போது, போவர்கள் ஒருவருக்
கொருவர் சிரித்து விளையாடிக்கொண்டு ஒருவர்
மேல் ஒருவர் ஆற்றுநீரை இறைத்துக்கொண்டே
போனார்கள்.

இந்தமாதிரித் தாங்கள் ஆங்கிலேயருக்குப்
பணிந்துபோனது அவர்களுக்கு என்னமோ ஒரு
வேடிக்கையாயிருந்தது. ஆயினும், சிலருக்கு

மாத்திரம் இந்தமாதிரித் தம் தோழர்கள் விளையாட்டுத் தனமாயிருந்தது மிகவும் அயிஷ்டமாயிருந்தது.

சிறையாளிகள் எல்லாரும் இராச்சியதந்திரத்தில் மிகவும் நிபுணர்களாயிருந்தார்கள்;

கிராஞ்சேக்குப் பணியவே யிஷ்டமில்லை. அப்போது ஒரு யுத்த கோஷ்டி கூட்டினார்கள்; இந்தக் கோஷ்டிக்குக் கிராஞ்சே யிணங்கினார். அந்தக் கோஷ்டியில் கிராஞ்சேக்கு இதுவரையில் யுத்தத்தில் 8,000 பேர் நஷ்டம் வந்தார்கள் என்று கணக்குப் போட்டார்கள். கிராஞ்சே தம்முடைய படைகளை இந்தமாதிரி நெருப்பால் சுட்டுக்கொல்வதற்கு ராபர்ட்ஸ் பிரபு ஒப்பமாட்டாரென்றும் ஏதோ ஒரு விதமாய்த் தமக்கு அபயம் கொடுப்பாரென்றும் நினைத்தார். (ராபர்ட்ஸ் தானா கொடுப்பவர்?) போவர்களில் 10 க்கு ஒன்பது உத்தியோகஸ்தர்கள், போவர்பாளையம் காப்புக்கு உபயோகமற்றதென்றும்; ஆங்கிலேயர் மேல்விழுந்து அடித்துக் கொல்லாது போனாலும் கடையாய்ப் போவர்கள் அவர்களுக்குப் பணிந்துதான் போக வேண்டியிருக்குமென்றும்; பணியாது போனால் ஆற்றில் வெள்ளம் வந்தபோது எல்லாரும் எலிக் குஞ்சுகள் போல முழுகிச்செத்து மிதந்துபோக வேண்டுமென்றும் சொன்னார்கள். யுத்தகோஷ்டி செய்துவந்த இந்தமாதிரி வாதத்துக் கெல்லாம் கிராஞ்சே வாய்பேசவில்லை, ஆனாலும்பணியமனம் வரவில்லை; கடையாய்த் தன் மனைவியும் குழந்தை



களும் கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டுக்கொள்ளவே, மனமிறங்கிப் பணிகிறோம் என்று வாயாற்சொன்னார்.

செவ்வாய்க்கிழமை (27-தேதி) காலை ஆறு மணிக்குக் கிராஞ்சே வெள்ளைக்கொடியை உயரப் பிடித்துக் காட்டினார், தாம் ஆங்கிலேயர் பாளையத்துக்குப் போகக் காத்துக்கொண்டிருந்தார். இந்த வெள்ளைக்கொடியை ஒருவரும் நம்பவில்லை, ஏனென்றால் இதற்குமுன்னால் அநேகந் தடவை வெள்ளைக் கொடியை உயரப்பிடிக்க, ஆங்கிலேயர் கிட்ட வந்தபோது அவர்களைச் சுட்டுக் கொன்றாராம்; இப்போது மப்படியிருக்கலாமென்று நினைக்கப்பட்டது; போன ஞாயிற்றுக் கிழமை இப்படித்தான் பணிந்து போவதாகஒரு துவந்தார்த்தமான கடிதம் வேணுமென்று ஒரு கெட்ட எண்ணத்துடன் எழுதி யனுப்பித்தார். கிராஞ்சேயைச் சண்டையில் எதிரிகள் பார்த்தால் ஒருவிதத்தாலும் பயப்படமாட்டார்கள். அவர் கையில் வெள்ளைக் கொடியெடுத்தால் எதிரிக்கு மகாபயங்கரமாயிருக்குமாம், அவ்வளவு மோசக் காரராம்.

## 5-வது கூற்று.

# கிராஞ்ஜே தலை வணங்கினது.

கடையாய்க் கிராஞ்சே பணிந்துபோவதற்கு ஒப்புக்கொண்டு பாதிராத்திரியில் முதல் தம்ஆட்களை ஆங்கிலேயர் பாளையத்துக்கு அனுப்பித்தபோது, ஆங்கிலேயர் கிராஞ்சேயே நேரவந்துவிடவேண்டுமென்று பதில் அனுப்பித்தார்கள். அப்போது கிராஞ்சே ஆங்கிலேயர் பாளையத்தைநோக்கிப்புறப்பட்டுத்தன்பரிவாரங்களைக்கையில் வெள்ளைக் கொடிபிடித்து வரச்சொன்னார்.

கிராஞ்சே வரும்போது, ஒருஆங்கிலேய இராணுவ உத்தியோகஸ்தன் வருகிறவன் கிராஞ்சேதானா என்று சந்தேகம் தீர்த்துக் கொள்ள மூக்குமேல் கண்ணாடி போட்டுப் பார்த்தபிற்பாடுதான் சந்தேகந்தீர்ந்தது.

முன்னேகுதிரைக்காரப் போவர்கள்வரிசையாய்ப் போக; பின்னால் கூட்டமாய்ச் சிலர் குதிரைமேல் வர; கிராஞ்சே நடுவில் வந்தார்.

ஆங்கிலேயர் பாளையத்தில்ராபர்ட்ஸ்பிரபு தம் சிறிய கூடாரத்தில்தாம் தனியே முன்னாடி உட்கார்ந்திருந்தார்.அவர் கிழமுகம் மிகவும் யோசனையோடு கூடிச், சந்தோஷமாய்க் காணப்படவில்லை; சுற்றிப்பார்த்தார்; ஒருஉத்தியோகஸ்தன் காணப்பட்டான். தம் கூடாரத்திலிருந்து ஒரு மேஜை



யும் இரண்டு நாற்காலியும் கொண்டுவரச் சொன்னார்; அவற்றை ஆற்றோரத்தில் ஒருமரத்தடியில் நிழலிலே போடச்சொன்னார்; இன்னொரு உத்திரவு கொடுத்து அந்த மரத்தண்டையில் சிப்பாய்களை மூன்று பக்கமாய் நிற்கச்சொன்னார்; நாலாம் பக்கம் வழிவிட்டுநிற்கச் சொன்னார். மறுபடியும் சுற்றிப்பார்த்து எல்லாம் சரிப்போயிற்று என்று பார்த்துத் திருப்தி அடைந்து தம் கூடாரத்துக்குப் போனார். பின்னும் வெளியில் வரும்போது தம் கத்தியைப் புடையில் தொங்கவிட்டிருந்தார். அந்தக் கத்திக்கு கல் இழைத்த பிடியிருந்தது.ராபர்ட்ஸ்பிரபு ஒன்றும்தவறாதவர்; ஒன்றும்மறக்காதவர்; எல்லாவற்றையும் யோசித்துப் பார்ப்பவர். ஆகையால், கிராஞ்சேக்கு மரியாதையின் நிமித்தம் அப்போது தம் கத்தியை உருவிப் புடையிற் கட்டினார்.

அதற்குள், கிராஞ்சேயும் அவர் ஆட்களும் கிட்டவந்து விட்டார்கள்; அங்கே அப்படிவரும் அந்தக்கும்புக்குள் ஒரு பருத்த கனமான மூட்டைபோல ஒருவர் கிழமான சிறிய அழகுகுலைந்த எலும்பெடுத்த ஒரு மட்டத்தின் (குதிரையில்) மேல் உட்கார்ந்து வந்தார், இவர்தான் மகா பயங்கரமான கிராஞ்சே; இந்தக்குதிரையும்தன்னதன்று; புறப்படும் போது ஒரு போவரிடத்திலிருந்து இரவல் வாங்கிக் கொண்டுவந்தார்; இவர்தானா மாகர்ஸ்பான்டீனண்டை ஆங்கிலேயரை ஒருநிலைக் கடையாய் நிறுத்திவைத்திருந்தவர் என்று

ஆங்கிலேயருக்குள் ஒரு சந்தேகம் வந்து விட்ட தாம்! தோட்கள் சதுரமாய் இருந்தன; தலையா னது அவற்றுள்ளிருந்து பிதுங்கினாற்போலஇருந் தது; தலைகனமாயிருந்தது; அதன் உருவம் சரி யாயில்லை, வெள்ளைமயிர் கலந்திருந்தது. புரு வம்கனமாயிருந்தது; அதன்கீழ் கண்கள் மகாதந் திரசாலியான நரிகளின் கண்போலக்காணப் பட் டன; இவருக்குக் குதிரையைத் தூரத்தச் சப்பாத் தியில் முள்கூட இல்லையாம்! இவரைப்பார்த்தால் படைத்தலைவனாயே காணப்படவில்லை! இவ ரண்டை ஒரு தோற்சாட்டைமாத்திரம் இருந்தத னால், இவர்தான் பாளையத்தில் அதிகாரியென்று தெரிந்தது.

அவரிடத்தில் அதிகாரமும் பலமு மிருந்த தாகத் தோன்றிற்றே ஒழிய, ஒரு விதமான பெருமையும் காணப்படவில்லை.

இவர்பக்கம் இவர் காரியதரிசியும் துபாசும் கூடவந்தார்கள்; ஆங்கிலேயரின்பாளையத்தண்டை இவர்கள் குதிரையைவிட்டுக்கீழே இறங்கினார்கள்; ராபர்ட்ஸ்பிரபுவும் இவர்களைஅழைத்து மரியாதை பண்ணச் சித்தப்பட்டார். கிராஞ்சே கிட்டவந்த வுடன் அவருக்குவந்தனம்செய்தார்; கிராஞ்சேயும் சாட்டையைச் சொடுக்கிக்கொண்டு தலைகுனிந்து நின்றார்; ராபர்ட்ஸ் பிரபுவேதானே கிராஞ்சேக்கு ஒரு நாற்காலிகொடுத்தார், கிராஞ்சேயும் உட்கார்ந் தார்; ராபர்ட்ஸ் பிரபு உடனே சிலவார்த்தைகள் பேசினார். கிராஞ்சேயும் தம் துபாசு வழியாய்ப் பதில்சொன்னார்.



இவர் ராபர்ட்ஸ் பிரபு வண்டை வந்தவுடன் இவரை எதிர்கொண்டு அழைக்கப்போன ஆங்கி லேய உத்தியோகஸ்தர் "ஐயா!கிராஞ்சேவந்திருக் கிறார்" என்றார். பிறகு இருவரும் வந்தனம் பண் ணிக்கொண்டபிறகு கைகுலுக்கிக் கொண்டார் கள்; கைகுலுக்கினவுடன் ராபர்ட்ஸ் பிரபு "நீங் கள் மிகவும் சௌரியமாய் உங்கள் பாளையத்தைப் பலே காத்துவந்தீர்கள்!" என்று முதல் முதல் ஸ்துத்திய வார்த்தைபேசினார். பிற்பாடு, இவர் தம் பின்னோடுவந்த போவர்ப்படையின் கதி எப் படி என்று கேட்டார். "நாங்கள் யாதொரு பேரமும் பேச்சும் பேசமாட்டோ"மென்று ஒரே பிடிவாதமாய் ராபர்ட்ஸ் பிரபு சொல்லிவிட்டார். இவர் ஆங்கிலேயரண்டை வந்தவுடன் இவர்க்குச் சாப்பாடு நடத்தப்பட்டது. பிற்பாடு வாயில் ஒரு சுருட்டுப்பிடித்துக்கொண்டு சமாதானப் பேச்சு பேசினார். ராபர்ட்ஸ் பிரபு சொன்ன பதி லைத் துபாசுவழியாய்க் கிராஞ்சேக்குச் சொல்ல, புகை குடித்துக்கொண்டு காலை மாற்றிமாற்றி ஒன்றின்மேல் ஒன்று போட்டுக்கொண்டு யோ சனை பண்ணினார்; சாட்டையைத்திருப்பிக்கொண் டே யோசித்தார். இரண்டுநிமிஷத்துக்குப்பிறகு "சரிதான்" என்று பதில் சொன்னார். சாப்பாடு கழிந்தவுடன் தம்முடன் தம்மனைவியும் தம் குடும்பமும் தம்மோடுகூடச் சிறையில் இருக்க விடும்படிக் கேட்டுக்கொண்டார். அப்படியே ராபர்ட்ஸ் பிரபு ஒத்துக்கொண்டார்.

இவர்மனைவியார் போவர்பாளையத்திலிருந்துகொண்டே தம் கணவரை எங்கே சுட்டுப்போடுவார்களோ என்று விசாரித்துக்கொண்டே அழுதார். பிற்பாடு ஆங்கிலேயர் அப்படிச்செய்யமாட்டார்கள் என்று கேள்விப்பட்டுத் தாமும் தம் குழந்தைகளும் பரிவாரங்களும் தம் கணவரிடத்தில் போனார்கள்.

இப்படியே, போவர்ச்சிறையாளிகளும் தம்மை ஆங்கிலேயர் சுட்டுப்போடுவார்களோவென்று விசாரித்தார்கள். எல்லாரும், அப்படி ஆங்கிலேயர் சுடமாட்டார்கள் என்றுகேள்விப்பட்டு மிகச் சந்தோஷமானார்கள். இதரஸ்திரீகளும் தம்மைச் சுட்டுப்போடுவார்கள் என்று பயந்து அங்குமிங்குமோடிக் கண்ட ஆங்கிலேயரை எல்லாம் "என்னைச் சுடச் சொல்லாதே! என்னைச் சுடச்சொல்லாதே" என்று கேட்டுக்கொண்டார்கள். 80-வயதுள்ள ஒரு கிழவியின் பயத்தை அடக்கி அவளைச் சமாதானப்படுத்தச் சரியாய் ஒரு அரைமணிநேரம் பிடித்ததாம். பெண்பிள்ளைகளை "நீங்களேன் யுத்தகளத்துக்கு வந்தீர்கள்" என்றுகேட்டால் "எங்கள் ஆண்பிள்ளைகள் நாட்டுக்காகச் சண்டைபோடும் போது அவர் கஷ்டதுக்கங்களை நாங்களும் பங்கிட்டுக் கொள்ளலாமென்று இருந்தோம்" என்றார்கள். இந்தப் பாளையத்தில் நடக்கமுடியாத கிழங்கட்டைகள் கூட அநேகம் பேர் இருந்தார்கள்; போவர் நின்று சண்டைபோடும் குழிகுழியாய், கா



யப்பட்ட போவர்கள் ஆதரிப்பாரில்லாது செத்துக் கிடந்தார்கள்; சிதறிக்கிடந்தார்கள்.

தோல்வியடைந்த ஒரு மகாபுருஷனான தீரனுக்குச்சாதாரணமாய்க்களைதப்பிப்போவதுண்டு. இவருக்குக் களைதப்பவேயில்லையாம். அவர்விசனமெல்லாம் பசிமேற்போயிற்று. கால்ச்சாப்பாடு வெகு நன்றாய்ப் பலமடங்கு சாப்பிட்டார். ஆங்கிலேயர்பாளையத்தில் தின்னக்கூடிய மிருகங்களின் தொடைவற்றல் கடைசியாய்க் கொஞ்சந்தான் இருந்தது. இதை யாவற்றையும் கிராஞ்சே தின்றுவிட்டார். இப்படிக் கிராஞ்சே தின்றதுபார்த்துப் பக்கத்திருந்த ஒருசிறுவயதுள்ள ஆங்கிலேய உத்யோகஸ்தன் மிகவும் பசியுடன் வருந்திக்கொண்டிருந்ததினால் கொஞ்ச நாழிகை கழித்து அப்பால் போகும்போது "மகாபாவி! இவனால்தானே எங்களுக்கு இந்தக் கஷ்டமெல்லாம் நேரிட்டது! எங்களுக்குக் கடையில் கொஞ்சம் தொடைவற்றல் (Ham) மீந்திருந்தால் அதையும் ஓநாய்போலத் தின்று கொண்டிருக்கிறான்" என்று புலம்பினானாம்! இவர்பெண்சாதியார் தலையணையுறையில் தம் வெகு நேர்த்தியான உடுப்பு வைத்திருந்தார்; அது ஒரு வெள்ளைக்காரப் பெண்பிள்ளையது: கிராஞ்சே மேப்கிங்கில் முதல் முதல் முற்றுகை போட்டபோது, அங்கே இப்பெண்பிள்ளை ஊரில் ஆங்கிலேயப் படைத்தலைவனண்டை ஒரு நிருபம் எழுதுபவளாயிருந்தாள். அவள் தான் பத்திரிகைகளுக்கு நிருபம் எழுதுபவள் என்று

போவர்கள் தன்னைச் சிறைப்படுத்தமாட்டார்கள் என்று வெளிவந்தாள்; அவளைக் கிராஞ்சேபிடித்துக்கொண்டார்; ஏனென்றால், இதற்கு முன்னால் ஒரு போவர்ப் படைத்தலைவர், மகா புத்திசாலியான வில்ஜோயன் என்பவர் ஊருக்குள் சிறையாகிப் போயிருந்தார்; அவரை விடுவிக்க இந்த மாதைக் கிராஞ்சே சிறைப் படுத்தினபோது, ஆங்கிலேயர் பெண்பிள்ளைகளைச் சிறைபடுத்துவது வழக்கமில்லை யென்றார்கள். கிராஞ்சே கேட்கவில்லை. "வில்ஜோயனை வெளிவிட்டால் நாங்கள் இம்மாதைச்சிறைமீட்போம்" என்றார். அப்போது தான் இந்த உடுப்பு இவர் மனைவிக்குக் கிடைத்திருக்க வேண்டும்; சிறைப் பட்ட பெண் இங்கிலாந்தில் ஒருபிரபுவின் குமாரத்தி; அவள் என்னமோ தென்னாபிரிகாவுக்கு வந்து சேர்ந்தாள்; வந்த வயணம் தெரியவில்லை; இவள் வெளிவரவே இவள் பெரிய மனுஷியென்று கிராஞ்சேக்குத் தெரிந்தது; உடனே அவளைச் சிறைப் படுத்தினால் தான் வில்ஜோயனைச் சிறை மீட்கலாமென்று நிச்சயத்துக்கொண்டு அவளைச் சிறைப் படுத்தினார்; பிறகு இந்த வில்ஜோயன் டிரான்ஸ்வாலில் ஒரு தளகர்த்தராய்ச் சண்டைபோட்டுக் கொண்டு இருந்தார்; போதாவுக்கு முக்கியமான உதவி உத்தியோகஸ்தரா யிருந்தார்.

கிராஞ்சேயினுடையஉடுப்புகள்முதலானசொந்த சமான்கள் ஒருபையில் கிடந்தன; மாடர்நதியில் அவர்காலையில் 7-மணிக்கு வந்தவுடன் சாப்



பாடு வேண்டுமா என்று கேட்டால், வேண்டாம் வேண்டாம் எனக்கெல்லா மாயிற்று என்று சொன்னாராம்; மத்தியானம் மூன்று மணிக்கு இவரைக் கேப்டவுன் என்னும் கடல்துறைப்பட்டணத்துக்குக் கொண்டுபோகும்படி ஒரு வண்டித் தொடர்வந்தது. அவருக்கு அப்போது ஒருத்தருடனும் பேசப்பிடிக்கவில்லை போலத் தோன்றின தால், அவரோடு ஒருவரும் அதிகமாய்ப் பேச்சுக் கொடுக்கவில்லை. மத்தியானம் மறுபடியும் கேப்டவுனுக்குப் புறப்படுமுன் இரண்டாந்தரம் சாப்பாடு நடத்தப்பட்டது; சாப்பாடு மிகவும் பலமாயிருந்தது. இப்படிச் சாப்பாடு செய்து விட்டுமிக வும் சுகமாய்க் கேப்டவுன்வந்து சேர்ந்தார்; ஊருக்குள் வரும்போது ஆறு பீரங்கிக்குதிரைகட்டின சாரட்டில் வந்தார்.

இவர் மாடர்நதிக்கரையில் ராபர்ட்ஸ்பிரபு வண்டைவந்தபோது இவர் ஒரு நாற்காலியிலும், வலது பக்கத்தில் அவருடைய காரியதரிசியும், ராபர்ட்ஸ்பிரபு இடது பக்கத்திலும்உட்கார்ந்தார்கள்; அவரும் பிரபுவும் இந்தச்சமயத்தில் பேசின போதுதான் தம்முடன் தம் பெண்டாட்டியும் அவர்முதலான தம்குடும்பமும் தம் காரியதரிசியும் சிறையில் தன்னோடுகூட இருக்கவேண்டுமென்று வேண்டி வேண்டிக் கேட்டுக் கொண்டாராம்; அப் போது பிரபு எத்தனை போவர்கள்பணிந்தார்கள் என்றுகேட்க எனக்குத்தெரியாதுஎன்றுசொன்னார்; போவர்கள் மூற்றுகை முழுவதும் ஒருத்

தன் இரண்டுபேர் இப்படிச் சேர்ந்து சேர்ந்து தப்பித்துக் கொண்டே போய்விட்டார்கள். இப்படி ஒருவாரந்தினம் தப்பித்துக்கொண்டே இருந்தார்களாம். தம் காரியதரிசி அப்போது என்னமோ சொன்னானாம்; அப்போது அவருக்குக் கோபம்வந்து அவனைஉற்றுப்பார்த்தார்; உற்றுப்பார்த்தபோது பக்கத்தில் இருந்தவர் எல்லாரும் வாய்க்குள்ளேயே "அடே! கிராஞ்சேயின் சுபாவம் இப்போதன்றோ வெளிக்கு வந்தது! மாஜூபாக்கிராஞ்சேஇவன் தான்! பழங்கணக்குப் பாக்கியுள்ளவன் இவன்தான்!" என்று ஓசைப்படாமல் சொல்லிக் கொண்டார்களாம். திடீரென்று பிரபு எழுந்து தலைவணங்கி அப்பால் போய்விட்டார்.

காலையில்சாப்பாடு ஆனபிற்பாடு ஒருசுருட்டு மாத்திரம் வந்தது; அதைக் குடித்த பிற்பாடு இன்னொன்று வேண்டுமென்று தன் காரியதரிசியை அனுப்பித்துக்கேட்டார்; அப்போது இனிச் சுருட்டு இல்லை வேண்டுமானால் போவர்களுக்கு வழக்கமான உக்காவைத்துக் குடிக்கட்டும் அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யப்படும் என்றுபதில் வந்தது. முன்னால் சொன்ன யுத்த கோஷ்டியில் போவர்கள் எத்தனை பேர் நீங்கள் ஆங்கிலேயரின் சேனை வழியாய்ப் பூந்து வெளிப்புறப்பட்டு கிராஞ்சேயின் உதவிக்காக வெளியில் வந்திருக்கும் போவர்களுக்குச் சகாயமாய்ப் போவீர்கள் என்று கேட்டதற்கு ஒரு 100 பேர்தான் தைரிய



மாய் முன்னுக்கு வந்தார்கள்; மற்றப் பேர்களுக்கெல்லாம் பயமாய்ப் போயிற்று.

இரண்டாந்தரம் இன்னொரு யுத்த கோஷ்டி நடந்தது. அப்போது:—கிராஞ்சேபணியாமற்போனால் நாம் எல்லாரும் அவரை யன்றியில் பணிவோம்; ஏனென்றால், தப்பித்துக்கொள்ளமார்க்கமிருந்தால் தப்பித்துக் கொள்ளலாம் அல்லது பணியாமல் எதிர்க்க வழியிருந்தாலும் எதிர்த்து நிற்கலாம்; இரண்டுக்கும் வழியில்லை; என்னமாய் வணங்காமலிருக்கிறது?—என்றார்கள்.

இந்த முற்றுகையில் 87 போவர்கள் இறந்தார்கள்; 163 பேர்காயப்பட்டார்கள்; காயப்பட்டவர்களுக்கு வைத்தியர் இல்லாமல் தாங்களே எல்லாவைத்தியமும் பண்ணிக்கொள்ள வேண்டியிருந்தது; வைத்தியர்கள் எல்லாம் பின் தங்கிப்போனார்கள். போவர்கள் குண்டுகள் வெடித்துத் தம்மைச் சுற்றிப் புகை சூழ்ந்துகொண்டு மூச்சுவிட முடியாமல் செய்தபோது ஒருமுட்டையவ்வளவு திராட்சரசம் குடித்துவந்தார்கள். அப்போது புகையால் திக்கு முக்கலாடாமலிருக்கலாம்; சகஜமாய் மூச்சுவிடலாம்; இந்தக்கிராஞ்சே மாடர்நதி மணலின் முற்றுகையில் ஒரு மையில் தூரம் சுற்றளவில் தடைபட்டு விழித்துக்கொண்டிருந்தபோது இவர் பணிந்து போம்படி ஆங்கிலேயர் எப்போது இவரைப்பலமாய்த் தாக்கலாம் என்று யோசிக்கையில், பிப்பிரவரி 27-ம் தேதி செவ்வாய்க்கிழமை யன்று மாஜூபாச் சண்டை

யின் 19-ம் ஆண்டு நிறைவு வந்தது; அது தான் நல்லதினம் என்றும் அந்த தினத்தில் தான் ஆங்கிலேயர் போவர்கையில் மாஜூபாவில் அவமானப் பட்டார்கள் என்றும் ஆங்கிலேயருக்கு ஞாபகம் வந்தது; ஆகையால் அந்தத் தினத்தில் கிராஞ்சேயைப் பணியும் படிச் செய்தார்கள்.

இதுவுமன்றி அந்தத் தினம் மகாசிவராத்திரியாயிருந்தது; அதுவும் ஆங்கிலேயருக்கு ஒருசகுனமாய் நேரிட்டது. அதனால் சிவபக்தர்கள் ஆங்கிலேயருக்குச் செயம் வாவேண்டு மென்று பிரார்த்தனை பண்ணிக்கொண்டது பலித்தது போலும்; இந்துக்கள் சண்டைக் காலத்தில் ஹர ஹர மகாதேவா! என்று சொல்வார்கள்; ராபர்ட்ஸ் பிரபுவுக்கு, இந்த நாளைக் கிரஞ்சே பணியும் நாளாய்ப் பொறுக்கினது ஒரு அதிர்ஷ்டந்தான்.

இப்படி யெல்லாம் மாடர் நதிக் கரையில் இருக்க, கிம்பர்லியில், ஆரஞ்சுநாட்டுக்குத் தெற்கே கேப்காலனியிலிருந்து மார்கர்ஸ்பான்டீனைப் பார்க்கப்போன ஆங்கிலேய படைத்தலைவன் கிம்பர்லிக்குள் வியாழக்கிழமை 15-உ° சாயந்திரம் நுழைந்தான். இவன் வருகிறான் என்றுகேள்விப் பட்டவுடன் கிம்பர்லியண்டை யிருந்தசேனை சத்துருவைத் துரத்துவதைவிட்டுவிட்டு இவனை எதிர்கொண்டழைத்தன. கிம்பர்லிக்தள் எல்லாரும் சந்தோஷமாயிருந்தார்கள்.

எப்போது கேப்காலனியை விட்டு ஆங்கிலேயப்படைத்தலைவன் போய்விட்டானோ அப்போது



கேப்காலனியில் பலங்குறைந்து போய் ஆங்கிலேருக்கு ரென்ஸ்பர்க் என்னு மூரில் கனத்ததோல்வியும் சேதமும் வந்தன; ஆங்கிலேயர்கள் இந்தச் சண்டையில் இரண்டு பீரங்கிகளும்200 ஆட்களும் இழந்தார்கள்; போவர்களுக்கு 30-பேர் செத்தார்களாம்; இதோடுகூடப் போவர்கள் ஆங்கிலேயருடைய சாமான்களையும் பிடித்தார்கள்; ஆனால், இந்த நஷ்டமெல்லாம் தமக்கு வருமென்றே ஆங்கிலேயர்கள் முதல் முதல் எதிர்பார்த்தது தான், மார்கர்ஸ்பான்டீனைப் பார்க்க ஒரு பெருஞ் சேனையைப் புறப்பட்டுப் போகச்சொன்னார்; தாம் எண்ணின எண்ண மெல்லாம் ஆங்கிலேயர்க்கு நிறைவேறின; தெற்கே கனத்த நஷ்டம் வந்தது; வடமேற்கே கிம்பர்லி விடுபட்டுக் கிராஞ்சே பிடிபட்டார்; தெற்கேவந்த நஷ்டத்தில் சேனைகள் அணி அணியாய்ப் போவர் சலைகளுக்கு இரையாய் மாண்டன; இரண்டு அணிகள் சிறைப்பட்டன; மருந்துகள் யுத்தசாமான்கள் எதிரியான போவர் கையில் விழுந்தன.

கிம்பர்லிசென்று புகுந்த படைத்தலைவனுக்கும் கிம்பர்லியைக் காத்துவந்தபடைத்தலைவனுக்கும் உத்தியோகம் பெரிதாயிற்று; ஆங்கிலேயர்கள் உடனே கிம்பர்லிக்கு ஆகாரங்கள் கொண்டுபோனார்கள். அன்றி, இருப்புப்பாதைகளை மாடர் நதிக்கும் கிம்பர்லிக்கும் நடுவில் செப்பனிட்டார்கள். ஆயுதசாமான்கள் கிம்பர்லிக்கு வண்டிவண்டியாய்ச் சாய்ந்தன.

ஆங்கிலேயர் மாகர்ஸ்பான்டீனைப் பார்க்கப் போம்போது போவர் குடிசைகளையும் வீடுகளையும்அழித்துக்கொண்டேபோனார்கள் என்று குருகர்,ஸ்டேயின் இந்த இரண்டுகுடியரசர்களும் பிரபுவிடத்தில் முறையிட, அவர்கள் ஆங்கிலேயப் படை அப்படிச் செய்யாது என்றாராம். உள்ளே கிராஞ்சே செத்த பிணங்களாலும் காயப்பட்ட போவர்களாலும் கஷ்டப் படும்போது பிரபு உங்களில் காயப்பட்டவர்களுக்கு வைத்தியம் செய்கிறோம்; எங்கள் வைத்தியர்கள் உள்ளே வரலாமா என்று கேட்டதற்குகிராஞ்சே தீராதிதீரரானதால் ஆங்கிலேயர் வைத்தியம் எங்களுக்குவேண்டவே வேண்டாம் என்றார். இதுவுமன்றி, பெண்பிள்ளைகள் குழந்தைகள் எல்லாரையும் வெளியே ஒரு சேதமில்லாமலும் காயமில்லாமலும் கொண்டு போகிறோம் என்றும் கேட்டார்களாம்; அதற்கும் கிராஞ்சே சர்வதேவ, உங்கள் ஒத்தாசை வேண்டவே வேண்டாமென்றாராம்; இப்படியன்றோ யுத்தவீரன் யுத்தகளத்தில் தைரியமும் மனக்கடுமையும் காண்பிக்கவேண்டும்! இந்தக் காலத்தில் நம்மிந்தியாவில் இப்படிப்பட்ட தீரர்கள் யார் இருக்கிறார்கள்! ஒரு குண்டுக்கு நிற்பார்களோ என்னமோ?

கிம்பர்லி விடுபட்டபிற்பாடு ரோட்ஸ்துரை;— இந்த இரண்டு குடியரசுகளும் சிலபெரியமனுஷர்களால் ஆளப்பட்டு வருகின்றன. இந்தப் பெரிய மனுஷர்கள் முதலாளிகள்; 20 - வருஷமாய் ஆங்



கிலேயரைத்துரத்தித் தென்னாபிரிகாவைப் பிடித்துக்கொள்ளலா மென்று எண்ணிக்கொண்டிருந்தார்கள்; இவர்கள் டச்சுக்காரர்களை மோசம் பண்ணினார்கள்;—என்றார்.

இதற்குள், ஒரு நாடகமான இந்த யுத்தத்தின் மத்தியிலே விகடகவியான ராயிடர், ஆரஞ்சு நாட்டார் சண்டை போடமாட்டோ மென்று சொல்லிவிட்டார்கள் என்று குருகர்க்கு ஸ்டெயின் தந்தியடித்ததாக ஒருதந்திச்சமாசாரம் விட்டார்; அது பின்னால்பொய்யாயிற்று. இன்னம் ஆரஞ்சுநாட்டார் சண்டைபோட்டுக்கொண்டுதானிருந்தார்கள்; நாடகத்தின் மத்தியில் விகடவி போல இவர் இல்லாதுபோனால் யுத்தமும் ருசிக்காது போலும்.

மகாராணியார் கிராஞ்சே தலைவணங்கினார் என்று கேட்ட உடன் சந்தோஷித்து ராபர்ட்ஸ் பிரபுவுக்கு வந்தனம் பண்ணி ஒரு தந்தி யடித்தார். அந்த அம்மாளுக்குப் பற்பல அரசர்களிடத்திலிருந்தும் உபசாரத் தந்திகள்வந்து குவிந்தன.

இந்த முற்றுகைக்குள்ளிருந்த பெண்களும் குழந்தைகளும் மாடர்நதிக்கரை யிலிருந்து அவரவர் வீட்டுக்குப்போனார்கள்; கிராஞ்சே வைத்தியர்கள் வேண்டாமென்று சொன்னபொழுது காயம்பட்டவர்க்கெல்லாம் அவர்மேல் கனத்த கோபம்வந்து, அவரைச் சபியாதபடி யெல்லாம் சபித்தார்களாம்.

இந்தியாவில் எல்லாரும் மகாஜன சபைகூடி மகாராணியம்மாளைத் தோத்திரம் பண்ணிக் கடவுளைத் துதித்தார்கள்.

இந்தக் கிராஞ்சேச் சேனாபதியண்டை ஒரு நாய் இருந்தது; இது வேட்டைநாய்; வேட்டையாடிச் செத்துக்கிடக்கும் மிருகங்களைத் தேடிக்கொண்டு போகும் நாய் (Retriever breed). இது கிராஞ்சேயண்டை வெகு நாளாய் அவரை விடாமல் அவர் எங்கேபோனாலும் போய்க் கொண்டிருந்தது; அவர் பாட்ரிபர்க்கில் சிறையாக அகப்பட்டுக்கொண்டபோது இந்த நாய் அவரை விட்டு ஆங்கிலேயச் சேனைகளுடன்வந்து நின்றுவிட்டது; கிராஞ்சேயுடனேனும் ஸேன்ட்ஹெலீனாவுக்குத் தீவாந்தரவாசம் போகவில்லை. அவர்க்குக் கால் வெகு குட்டையா யிருந்தபோதிலும் அவர் நாய்க்குக் கால்கள் வெகு நீளமாயிருந்தன; அந்த நாயினிடத்தில் வெற்றுமுகம் காட்டக்கூடாது; வெற்றுமுகத்தைக் கண்டால் வெகு கோபமாய்க் குலைக்கும்; அதை இராணுவ உடுப்பு போட்டவன் தவிர வேறெவரும் அதிகாரம் பண்ணக்கூடாது; அப்படி யதிகாரம் பண்ணினால் அது லட்சியம்பண்ணாது; பாளையக்களில் அப்போதைப்போது நடந்துவரும் படைப் பயிற்சிகளுக்கெல்லாம் (Parade) போய்வரும்; எப்போதாவது ஒரு படையணியை வெளியில் புகைவண்டியில் அனுப்பித்தால் புகைவண்டியடி (Railway station) வரையில் அந்த நாய் அவ்வணி பின்னேயே



போய் அவ்வணியைப் புகைவண்டியில் ஏற்றிவிட்டு விசனத்தோடு வீட்டுக்குத் திரும்பிவரும்; ஞாயிற்றுக்கிழமைக் காலை எல்லோரோடுங்கூடக் கோயிலுக்குப் போகிறது தப்புவதில்லை. ஒரு வேளை காலநிலைமை நன்றாயில்லாமல் கோயிலுக்குப்போகாமல் தேவாராதனையைத் தன் யஜமானன் வீட்டிலேயே நடத்தும்படியா யிருந்தால் அவ்வாராதனை நடக்கும் அறைக்கு வெளியிலேயே படுத்துக்கிடக்கும். இந்த ஆராதனை 5-நிமிஷத்துக்குமேல் அதிக சவகாசமாய்த் தவக்கமாய் நடக்குமானால் அந்தமாதிரி சவகாசமாய் நடப்பதற்குக் காரணம் கேட்பதுபோல உள்ளே பயபக்தியாய் வந்து நிற்கும்; மொத்தத்தில் இந்த நாயின்பேரில் படையணியில் இருப்பவர்கள் வெகு அபிமானமா யிருந்தபோதிலும் அதற்கு ஒருவரிடத்திலும் அவ்வளவு சினேகிதமில்லை. புதிதாய் எந்தநாய் வந்தாலும் சண்டைக்கு வெகு சித்தமாயிருக்கும். ஆனால், அவ்வளவு செயத்துடன் சண்டை போட்டுத் திரும்புவதில்லை; அதற்குப் போட்டிருக்கும் சொக்காய்த்துணியெல்லாம் கிழித்துக்கொண்டு வந்து நிற்கும்.

இவர் ஸேன்ட்ஹெலீனாவுக்குப் போனபிறகு அங்கே ஒரு பேர்போன கட்டிடத்தில் வசித்து வந்தார். இந்தக் கட்டிடம் ஒரு குன்றின்மேல் (the famous Jacob's Ladder) இருக்கிறது; இவர் அங்கு தமக்குண்டாயிருந்த மட்டு மரியாதைகள் யாவற்றிற்கும் வெகு சந்தோஷப்பட்டுக்

கொண்டார். இவர்க்கு வீட்டுவாடகை இல்லை.
இவரண்டை வைக்கப்பட்டிருக்கும் வேலைக்காரர்
கள் யாவருக்கும் இவர் சம்பளங்கொடுக்கவில்லை;
இவரன்றியில், இவ ரண்டையூழியர்களாயிருப்பவர்
களும் தம் வேலைக்காரர்களுக்குக் கூலி அல்லது
சம்பளங்கொடுக்கவில்லை. எல்லார்க்கும் ஆங்கிலே
யர்களே சம்பளங் கொடுத்துவந்தார்கள்; இவர்
களுக்கு துணிமணி (Clothing & food) யாவுங்
கூட ஆங்கிலேயர்தான் கொடுத்து வந்தார்கள்;
கிராஞ்ஜேச்சேனுபதி தம்மிடத்தில் உறுதிமொழி
வாங்கிக்கொண்டு தம்மைச் சிறையில் அடைக்கா
மல் அந்தத் தீவில்சுயேச்சையாய்த்திரியவிடும்படி
அந்தத்தீவின் குடியாளரைக் (Governor) உத்தி
ரவு கேட்டும் அவர் உத்திரவு கொடுக்கவில்லை;
ஆனால் மற்றச் சிறையாளிகளில் 400 பேர்கள்
ஒரு பேர்போன ஜர்மன் (Colonel Schiel) ஆகிய
இவர்கள் அந்தமாதிரி செய்யும்படி விடப்பட்
டார்கள்; இந்த ஜர்மன் ஸெண்ட் ஹெலினாவுக்
குப் போனபுதிசில் அந்தக்குடியாளருக்கு வெகு
தொந்திரவு கொடுத்து வந்தார்: ஒரு நாள் இவர்
தப்பித்துக்கொண்டு ஓடும்படி ஒரு அந்நிய நாட்
டுக் கப்பல்காரருடன் ஏற்பாடுசெய்துவிட்டுக் கடி
தம் ஒன்றை அக்கப்பல்காரருக்கு ஒரு வேலைக்
காரன் வழியாய் அனுப்பித்தார்; அதை அந்த
வேலைக்காரன் ஒரு ஆங்கிலேயக் கப்பல்காரனண்
டைதவறிபோய்க்கொடுத்தான்; அப்போதுமுதல்
இவர்மேல் ஆங்கிலேயர் வெகு ஜாக்கிரதை
வைத்துவந்தார்கள். பிற்பாடு வெகுசாய் இவர்



நல்ல நடத்தையா யிருக்கலா மானதால் இவர்
உறுதிமொழியில் ஆங்கிலேயர்க்கு நம்பிக்கை
வந்துஇவரைச்சுயேச்சையாய் அந்தத்தீவில் திரிய
விட்டிருக்கலாம்.இந்தஜர்மன் இலாண்ட்ஸ்லகேட்
சண்டையில் (21-10-99) அகப்பட்டான்; இந்
தத் தீவில் இருந்த சிறையாளிகளில் 12 - ஜாதி
யார்கள் கலந்திருந்தார்கள்; இதுவும் ஒருவேடிக்
கைதான்; இதில் ஒரு ஆங்கிலேயனும் சிறையாளி
யாயிருந்தான். இவர்களில் ஒரு சிறுவன் பார்
வைக்கு ஒரு ஸ்திரீபோல் இருந்தான்; ஆனால்
அவன் அத்தீவில் ஆங்கிலேயரைப் பாடுபடுத்திப்
பம்பரமாட்டி வைத்ததுபோல ஒருவரு மில்லை.
இவர்களில் எல்லாரைக்காட்டிலும் நெட்டையா
னவன் ஒரு ஆரஞ்சுநாட்டான்; அவன் 6-அடி 8
அங்குலம் உயர்ந்திருந்தான். இவர்களில் 3-பை
யன்கள் இருந்தார்கள். இம்மூவரும் பாட்ரீபர்க்
கில் அகப்பட்டுக்கொண்டு சிறையாக்கப் பட்டார்
கள்; இம்மூவருள் ஒருவனுக்கு ஆறு இடத்தில்
ரவைபட்டுப் புண்ணாயிற்று; அப்படிப் புண்பட்
டுக் கீழ் விழுந்தவனைத் தூக்கத் தூணிக்கட்டில்
கொண்டுபோன ஒருவனை அப்போதே அங்கேயே
சுட்டுத்தள்ளினான்; ஆயினும், அவன் மிகச்சிறுவ
னானதால் அவனுக்கு வைத்தியம் பார்த்துப் புண்
கள் யாவும் ஆற்றப்பட்டன; அவனைப்போல புண்
ணாய்ச் சுகப்பட்டவர்கள் இதுவரையினு மில்லை;
ஒரு ரவை மாரில் பாய்ந்தது (left lung); ஒன்று
தோளில் பாய்ந்தது (Shoulder blade); ஒன்று
தொப்புளின் கீழ்தொடைக்குமேல் வலது கவட்

டியில் பாய்ந்து (right groin) பின்னால் முதுகெலும்பின்கீழ் வெளிப் புறப்பட்டது; ஒன்று இடது மணிக்கட்டில் பட்டு அதைச்சின்னபின்னமாக்கிவிட்டது; கடைசியாய் ஒன்று தொடையில் பட்டுத் துளைத்துவிட்டது. இப்போது அந்தப் பையன் வெகு சௌக்கியமாயிருக்கிறான்; அந்தத் தீவில் காப்பாக வைத்திருந்த ஆங்கிலேயப் படையணியில் இவனைக் கண்டால் எல்லாரும் ஆசையாயிருந்தார்கள்.

## 6-வது கூற்று.

# ஸ்டெயின்!

இவர்க்கு மார்ட்டினஸ் தீயூனிஸ் ஸ்டேயின் என்று பூரானபெயர்; இவர் 1857-ம் ஆண்டு அக்டோபர்மீ 2-தேதி பிறந்தார்; ப்ளூம்பாண்டீனுக்கு அருகாமையில் பிறந்தார்; அவர் தகப்பனார் ஒரு உழவர்; அவரை(தகப்பனாரை)க்கண்டால் ஆரஞ்சு நாட்டாருக்கு ஒரு மரியாதை உண்டு; குடியரசுச் சபையில் ஆரஞ்சுநாட்டார் அந்த உழவரைத் தமக்குக் காரியஸ்தராய்நேமித்தார்கள். ஸ்டேயின் தம்முடைய தாய் தகப்பன்மார் எப்படியிருந்து வந்தார் என்பதைப் பற்றியாவது தாம் சிறு வயதில் என்ன தாழ்ந்த நிலையில் இருந்தாரோ அதைப்பற்றியாவது நினைக்குங்கால், கொஞ்சமும் வெட்கப்படாத மனுஷர். யாரோ ஒருவர், தம சிநேகிதன் ஒரு கொத்துக்காரன் (bricklayer) பேர்த்தியைக் கலியாணம் பண்ணக்கேட்டு மிக ஆச்சரியப்பட்டார் என்று ஸ்டேயின் கேள்விப் பட்டு:—எனக்கு அதில் ஒரு ஆச்சரியமும்தோன்றவில்லை; என்னுடைய தகப்பனார் வண்டி பண்ணுகிறவர்; அவர் நல்லவராயும் நாணயஸ்தராயும் இருந்து காலங்கழித்ததைப்பற்றி நான் கர்வப்படுகிறேன்;—என்று சொன்னாராம். இத்தஸ்டேயினுடைய தாய் தகப்பன்மார் இருவரும் உழவர்கள்;

ஆனாலும், அவர்களுக்கு மிகத்தாராளமான மனசு
இருந்தது. தங்கள் சிநேகிதர்கள் பேச்சின்படி
தம்பிள்ளையாகிய ஸ்டேயினை மிகவும் நன்றாயும்
திறமாயும் வளர்த்து வந்தார்கள்; ஸ்டேயின் பள்
ளிக்கூடம் விட்ட நாள்முதல் செய் நேர்த்தியில்
இருந்துவந்தார்; மற்றப் போவர்கள் போலவே
ஆடுமாடுகளைக் காப்பாற்றுகிறது, பண்ணையாட்
களை மேன்பார்வை பார்த்து வருகிறது இவை
முதலானவை செய்து காலங்கழித்துவந்தார். அவ
ருக்குக் குதிரைச்சவாரி தெரியத்தான் வேண்டி
யிருந்தது; குதிரைச் சவாரி தெரியாதுபோனால்
ஆரஞ்சுநாட்டில் அல்லசல் பரிகாசம்பண்ணுவார்
கள். போவர்களுக்குத் துப்பாக்கி பிடிக்கத்தெரி
யாதுபோனாலும்சுடத்தெரியாதுபோனாலும்அவர்
களைநாட்டார் புருஷர்களாய் மதிக்கமாட்டார்கள்;
ஆகையால், ஸ்டேயினும் இவ்விரண்டிலும் சமர்த்
தரானார்.

15-முதல் 19 • வயசுவரையில் இம்மாதிரி
யாய்க் காலங்கழித்துவந்தார். அதற்குள் ஆளும்
பெருத்து நீண்டு வளர்ந்து புருஷனுக்குரிய ஆண்
மைத்தனத்தை வகித்துக்கொண்டார். சப்பாத்தி
போட்டுக்கொண்டால் ஆறடிநீளமிருப்பார். மார்
அகன்றிருக்கும்; பார்வை தெளிந்து, காற்று
மழைக்குத் தேர்ந்திருக்கும். நடக்கையோ
வெகு சாதாரணமாய் இருக்கும். இனிப்படிப்புக்
காக நாலுபக்கத்தையு மடைத்துவிட்டு உள்ளே
உட்கார இஷ்டப்படாதவரா யிருந்தார். ஆரஞ்சு



நாட்டு ஹைகோர்ட் ஜட்ஜ் இந்த ஸ்டேயின்
வீட்டுக்கு அக்ஸ்மாத்தாய் வரும்படி நேரிட்ட
போது, ஸ்டேயின் என்ற பையனின் நடவடிக்
கைகளைப்பார்த்து ஆச்சரியப்பட்டு அப்போது
குடியரசனா யிருந்தவரோடு மிகச் சிலாகித்துப்
பேசிக்கொண்டார். 19-வயசில் எங்கிலாந்துக்
குப் போனார். அங்கே படித்துவிட்டுப் பிறகு
ஐரோப்பாக் கண்டத்துக்குப் போனார். பிறகு
லண்டனுக்குவந்தார். அப்போதுதான் இவர்க்குப்
பல ஐரோப்பியசாதியார்களைப்பற்றி அபிப்பிரா
யங்கள் மனசில் அழுந்திப்போயிருக்கவேண்டும்.
கடைசியில் 25-ம் வயதில்பாரிஷ்டராய்(வக்கீலாய்)
ஊர்வந்துசேர்ந்தார். ப்ளூம்பான்டீனில் 6 ஆண்டு
வக்கீல் வேலை பார்த்துவந்தார். பிற்பாடு ஹை
கோர்ட் ஜட்ஜாக நேமிக்கப்பட்டார். 30-ம்ஆண்
டில் அவருக்குக் கலியாணம் நடந்தது. பிற்பாடு
ஜேம்ஸன் டிரான்ஸ்வால் நாடு பறிக்க முயன்றார்.
அது கடைத்தேறவில்லை. உடனே ஆரஞ்சு நாட்
டுக் குடியரசனைப் பொறுக்கி எடுக்கும் சமயமும்
வந்து நேர்ந்தது. சிலர் இவரைக் குடியரசனாக்க
வேண்டுமென்றும் மற்றவர் மற்றொருவரைக்
குடியரசனாக்க வேண்டுமென்றும் வாதாடினார்
கள். ஆனால், இவர் டச்சுக்காரர் ஆனபடியால்
சனங்கள் இவரையே குடியரசனாக்கினார்கள்.
ஏனென்றால், போவர்களுக்கு ஆங்கிலேயர்மேல்
சந்தேகம் பிறந்துபோயிற்று. தம் நாடுகளை ஆங்
கிலேயர் எப்படியும் பிடித்துக்கொள்ளப் போகி
றார்கள் என்று போவர்களுக்கு நம்பிக்கை பிறந்

துபோயிற்று. ஸ்டெயினுக்குப் போட்டியாய் வந்தவர் ஆங்கிலேயப் பிறப்பினரானதால், ஒரு வேளை சமயத்தில் போவர்களுக்கு எங்கே துரோகம் பண்ணுவரோ என்ற சந்தேகத்தால் மற்றொருவரைக் குடியரசனுக்கவில்லை. இவர் தான் ஆரஞ்சுநாட்டுக்குக் கடைசியான குடியரசர் என்று எண்ணலாம்.

இவர் வந்ததுமுதல் டிரான்ஸ்வாலுக்கும் ஆரஞ்சுநாட்டுக்கும் உள்ள சம்பந்தம் பலப்பட்டுப் போயிற்று. ஆங்கியேருக்கு மாத்திரம் தாம் சிநேகிதன்போல் காண்பித்துவந்தார். குருகரும்இவரும் சேர்ந்து இரண்டு நாடுகளுக்கும் பொதுவாய் ஒரு சபை ஏற்படுத்தி அவற்றின் சாதகபாதகங்களை ஆராயும்படி ஏற்பாடு பண்ணினார்கள். இப்படியிருந்து, இரண்டு நாடுகளுக்குள் எந்த நாட்டையாகிலும் சத்துரு யாராகிலும் தாக்கினால் இரண்டு ஒருமிக்க நின்று சண்டைபோடவேண்டியது என்று ஒருஉடன்படிக்கை உண்டாயிற்று. ஒருவரினும் இருவர் பலமல்லவா? என்ற எண்ணம் நன்றாய் மனதில் பட்டுப்போய் ஆங்கிலேயருக்கும் டிரான்ஸ்வாலுக்கும் நடந்த வழக்கைப் பற்றி யோசனைபண்ணத் தலைப்பட்டார்கள்.

ஆங்கிலேயர் ஊட்லாண்டர்களைப் பற்றிக் குருகரை நெருக்கினபோது, ஒரு ஆலோசனை சபை கூடலாமென்று எல்லாரும்சொல்ல அப்படி ஆங்கிலேயர் ஒப்புக்கொண்டார்; இது ஸ்டெயினுக்கு நல்ல சமயமாய் இருந்தது. மில்னர்,



ஆனதால் ஊர் சுற்றும்படி நேரிட்டது. அப்போது, தான் நேசித்த பெண்ணுக்குத் தாம் எழுதிய கடிதங்களையெல்லாம்தன் சிநேகிதனொருவனுக்கு அனுப்பினார். அந்தச் சிநேகிதன் வீட்டுக்கு இந்த 18 - வயதுப் பெண் நித்தியம் வந்துகொண்டிருந்தாள். இந்தமாதிரி, இப்போது டிரான்ஸ்வால் சண்டையில் மகாசிரேஷ்டராயிருக்கும் ஸ்டெயின் ஒரு அழகிய சிறியவளைச்சந்தித்து இச்சித்துக்கலியாணம்பண்ணிக்கடைத்தேறினார்.

இந்த ஸ்டெயின் ஆங்கிலேயரை வெறுக்கப்பட்டவர் அல்ல. சிநேகிதரான குருகருக்கோ ஆங்கிலேயரைக் கண்டால் ஆகாது. ஸ்டெயினுக்குத் தாம் எங்கிலாந்தில் சிலநாள் வசித்துவந்தார், எங்கிலாந்தையும் தெரியும், அந்நாட்டாரையும் நன்றாய்த் தெரியும். ஸ்டெயின் ஆங்கிலேய நாட்டுத் துரைத்தன ஏற்பாடுகள், சட்டங்கள், குடிகளின் வழக்கங்கள், குடிகளின் ஏற்பாடுகள் ((institutions) இவைகளையெல்லாம் நன்றாயறிவார். ஆங்கிலேயரை ஆளாளாயும் பார்த்திருக்கிறார்; அந்த ஜாதியை மொத்தமாயும்பார்த்திருக்கிறார். இந்தச் சமயத்தில், இந்தப் போர்முட்டில் இந்தச் சங்கதி நாம் நன்றாய்க் கவனிக்கவேண்டியது. இப்படிப்பட்ட சங்கதியால் ஸ்டெயினுடையகுணாதிசயங்கள் அவரிடத்தில்மூழ்கிக்கிடக்கும் அநேக மாயிரம் இரகசியங்கள்போலத் தோன்றுகின்றன. ஆங்கிலேயநாட்டில் பலகாலம் படித்து வக்கீல் பரீக்ஷையில்தேறித் தாராளமான

UG-19(?)
No.



எண்ணங்களை வகித்துப் புத்தியுள்ள ஒரு பெரிய மனுஷரான ஸ்டேயின், தென்னாபிரிகாக் கூட்டுநாட்டுக் குடியரசு ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்ற கனவுக்கு ஆளானார் என்றும்கூட ஆங்கிலேய ஜனங்கள் நம்புகிறார்கள்!

இவர் குடியரசுக்காகப் பொறுக்கப்பட்டபோது ஒரு உபன்யாசம் பண்ணினார்; அது மிகவும் அற்புதமாயிருந்தது. ஆரஞ்சுநாட்டின் கதியைப் பற்றியும், படிப்பும் மதமும் அபிவிருத்தி அடைய வேண்டியதைப்பற்றியும் பேசினார்:—"ஜேம்ஸன் என்ற நாடு பறிப்போனுக்காக, நாமும் ஆங்கிலேயரும் ஒருவரை ஒருவர் விரோதிப்பார்களா? நமக்கு அது புத்தியா? ஜேம்ஸன் செய்த காரியத்தினால் நமக்கு ஒன்றுங்கெட்டுப்போகவில்லை. நம்முன்னோர்கள் எப்படிச் சமாதானமும், சிநேகிதமும், சகோதரத்துவமும் கொண்டு நடந்துகொண்டார்களோ அப்படியே நாமும் இனி நடந்துகொள்ளவேண்டும். இனி யாராவது புதியவர் நம் நாட்டுக்குவந்தால் 'நீயும் எங்களோடு சேர். எங்களுக்கு நன்மையைக் கோருவதாக நடந்துகொள். எங்களை நீங்கள் வெல்லும்படி நாங்கள் செய்துகொள்ளமாட்டோம்' என்று சொல்லவேண்டும். இப்படிச்செய்தால் நமக்குச் சுகமும் அபிவிருத்தியும் கிடைக்கும்" என்று சொன்னார். இப்படிச்சொன்ன [illegible]களுக்கெல்லாம் ஆங்கிலேயருக்குப்பரமசத்துருவானார்.

120968


## ஸ்ரீ பக்தலீலாம்ருத வசனம்.

இப்பெயருள்ள (புண்டலீசர், ஜயதேவர், துளசிதாஸர், நாமதேவர் முதலிய) 82-பக்தர்களின் சரித்திரமடங்கிய ஒரு புத்தகம் சுலபமான தமிழ் வசனநடையில் எழுதப்பட்டிருக்கின்றது.

இதன் விலை ரூபா 3-0-0. வி. பி. போஸ்டில் ரூபா 3-5-0. மேற்படி இக் ரூபா 4-0-0.

---

## ஸ்ரீ சிவமஹா புராணம்.

விலை ரூபா 5.

(தமிழ் வசனம் 48 படங்களுடையது.)

இந்நூல் தமிழ் கற்றோர்க் குபயோகமாகும்படி சமஸ்கிருதபாஷையிலிருந்து எளிய தமிழ் வசனநடையில் மொழிபெயர்க்கப்பட்டது. இதில்,

78 அத்தியாயங்கள் கொண்ட ஞானசம்ஹிதை.
64 அத்தியாயங்கள் கொண்ட தர்மசம்ஹிதை.
13 அத்தியாயங்கள் கொண்ட கைலாயசம்ஹிதை.
57 அத்தியாயங்கள் கொண்ட சநத்குமாரசம்ஹிதை.
60 அத்தியாயங்கள் கொண்ட வாயுசம்ஹிதை.
16 அத்தியாயங்கள் கொண்ட வித்யேஸ்வரஸம்ஹிதை.

ஆக 288 அத்தியாயங்கள் கொண்ட ஆறு சம்ஹிதைகளடங்கியுள்ளன. இப்புத்தகம் ராயல் 8 பேஜ் அளவில் 900 பக்கங்களுக்கு மேலுள்ளது.

**Apply to:** சை-சிவசங்கரசெட்டி, பி.எ., சொந்தக்காரர்,
ரிப்பன் பிரஸ் & ரிப்பன் புஸ்தகசாலை,
273, தம்புசெட்டி வீதி, சென்னை.

---

## மாதர் மனோரஞ்சினி.

இந்துப் பெண்களுக்கும் மாதர்களுக்கும் மிக உபயோகமான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை இது ஒன்றுதான். இதை ஆரம்பித்து இப்போது 4-ம் வருடம் நடக்கின்றது. அடிக்கடி இதில் விநோதமான சித்திரப் படங்களும் வேடிக்கைக் கதைகளும் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. இதன் வருடசந்தா ரூ. 1—12—0. தனி பிரதி 0—2—6. மாதிரி காப்பி வேண்டுவோர் ரிப்ளை கார்டும், இரண்டரை அணாவும் அனுப்பவேண்டும்.

**Apply to:**— C. S. இராமஸ்வாமி ஐயர்,
மாதர்மனோரஞ்சினி பத்திராதிபர்,
திருவல்லிக்கேணி, சென்னை.

# போவர் யுத்தப் பிரசுரங்கள்.

விலை தனித்தனி அணா 6.

போஸ்டேஜ் அணா 1.

I. டிவெட், போதா, டிலாரி.
II. குருகர், ஜூபார்ட், கிரான்ஜே.
III. போவர் பராக்கிரமம்.
IV. போவர் பிடிவாதம்.

மேற்படி நான்கு புஸ்தகங்களில் ஏதாவது இரண்டுக்குக் குறையாமல் ஒரேகாலத்தில் வாங்குவோர்க்கு ஒவ்வொன்றும்

விலை அணா 4.

| | | | | |
|---|---|---|---|---|
| போஸ்டேஜ் | 2 புஸ்தகத்துக்கு | 0 | 1 | 6. |
| ,, | 3 புஸ்தகத்துக்கு | 0 | 2 | 0. |
| ,, | 4 புஸ்தகத்துக்கு | 0 | 2 | 6. |

Apply to: ரிப்பன் புஸ்தகசாலை,
273, தம்புசெட்டி வீதி சென்னை.